Registered as a Newspaper in Srilanka

# தீபம்

தமிழின் முதல்தர வார இதழ்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 89 • 23.04.2017

நீங்கள் தீபம் வார இதழின் சந்தாதாரர் ஆகவேண்டுமா?

சந்தா/Shantha என குறிப்பிட்டு பின்வரும் இலக்கத்திற்கு உங்கள் முகவரியை SMS மூலம் அனுப்புங்கள்.

ஆண்டுச் சந்தா 960/=
077 152 1586

## அரசியல் + பணம்

## வவுனியாவை கலக்கும் கும்பல்



## கல்முனை பலாப்பழங்களை சாப்பிடலாமா?



## பால்ராஜிற்கு கவுன்சிலிங் செய்ய உத்தரவிட்ட பிரபாகரன்



## மைத்திரிக்கு வெள்ளையடிப்போம்!

Teemah

நிறைவான ஆனந்தம்

Teemah Biscuit நிறைவான சுவையை தருகின்றன

Teemah Biscuit சர்வதேச தரம் கொண்டவை




மாணவர் மனங் கவர்ந்த டீமா பிஸ்கட்ஸ்

Teemah Biscuit manufacture (pvt) LTD
Main Street Ninthavur.
Phone number 067 4929066. 067 2250066, 077 3240470



# PARAMESWARY REST INN

WIFI / TV / AC / Non AC / 5Bed Rooms / 4 bed Rooms / 3 Bed Rooms / Double Bed rooms / Single rooms/ Hall kitchen facility / Parking

என சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்தின் மையத்தில் மருதனார்மடத்தில் அமைந்துள்ளது

வசதிகள் மற்றும் அமைவிடம்

1. சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்
2. யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துஉள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக்க முடியும்
3. சமைத்து சாப்பிடுவதற்கான வசதிகள் மற்றும் அமைவிடம்
4. மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
5. யாழ்ப்பாணத்தில் பிரசித்தமான அனுமார் கோவிலுக்கு மிக அருகாமையிலும் மற்றும் யாழ் நுண்கலை பிடத்துக்கு மிக அருகிலும் அமைந்து உள்ளது.
6. சுற்றுலா பிரயாணிகளுக்கு சைக்கிள் வசதிகள் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்
7. ஒழியல் கூழ் சுவைத்து மகிழலாம்







யாழ்ப்பாணத்து சுவையில் தரமான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவைத்து மகிழ இன்றே நாடுங்கள்.

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

Parameswary rest inn
Kaithady Road maruthanarmadam jaffna
(opposite to education department )
Phone number : 778919367 , 0767060095



# Green Dream Engineering

உயர் தரம்... குறைந்த செலவு...

- தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை
- துல்லியமான பெறுமதிக்கணிப்புகள்.
- பாரம்பரிய தொழிநுட்பத்துடன் கூடிய நவீன கட்டமைப்புகள்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.
- தவணை முறை கொடுப்பனவுகள்
- தரமான மூலப்பொருட்கள்.
- வாடிக்கையாளர் திருப்திக்கமைவான தெரிவுகள்.

- Dream House
- School building
- Office building
- Hotels & restaurants
- Gardening and landscaping
- Repairing & modifying



உங்கள் கனவுக்கு உயிர் கொடுக்க நாங்கள் உங்கள் உடன் இணைகிறோம்



யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.

Phone : 0774166859 ,0775952346 ,0771439777
Email : greendreamengineer@gmail.com
FB: @greendreams.engineers



# KATHIR

Cvil engineering & contrator's

யாழ் மண்ணின் அதி உன்னத மற்றும் முதல் தர கட்டடக்கலை நிபுணர்.

நியாயமான கட்டணத்தில் அதி துரித மற்றும் அதி உயர் தர சேவை

- ✓ House plan and modern houses
- ✓ Building consultancy
- ✓ Bridge construction
- ✓ Architectural designs
- ✓ Interior design
- ✓ Road construction
- ✓ Cladding works
- ✓ Renovation works and building repairnig
- ✓ Molding works
- ✓ Landscaping
- ✓ Aluminium works
- ✓ Bank B.O.Q
- ✓ Building estimate

அனுபவம் வாய்ந்த கட்டிட தொழில் துறை வல்லுனர்களால் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மிக விரைவான சேவை

K.k.s Road uduvil East chunnakam
Mobile : 077 2417 103
Phone :021 561 8129
Email : kathircons12@gmail.com



# SABINAYA MOTORS

TVS

Authorized Dealer for TVS (TVS Show Room)

36 நாடுகளில் விற்பனையாகும் முன்னணி தொழில்நுட்பம்

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அனைத்து TVS வண்டிகளுக்கும் **5000** தள்ளுபடி சித்திரை மாதம் 31ஆம் திகதி மட்டுமே.



N.Thuvarakan
077 8864315, 021 2242929
tvssabinaya2014@gmail.com

No. 80/14, K.K.S Roas, Mallakam.

# கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள்...

யாழ் குடாநாட்டின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நடவடிக்கை மீண்டும் சிக்கலை எதிர் கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது. ஆறுமுகம் திட்டமா அல்லது மருதங் கேணி கடல்நீர் சுத்திகரிப்பா என்பதில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளதால் குடாநாட்டுவாசிகளிற்கு சுத்தமான குடிநீர் என்பது கனவாகத்தான் இருக்கப்போகிறது.

யாழ்ப்பாண குடாநாட்டிற்கு குடி நீரை இரணைமடுவிலிருந்து கொண்டு வருவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி பெருந்தொகை நிதியுதவியளித்தது. எனினும், இதற்கு கிளிநொச்சி விவசாயி களிடம் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, அது கைவிடப்பட்டது. இதற்கு பதிலாக மருதங்கேணியில் கடல்நீரை சுத்தி கரிக்கும் நிலையம் அமைக்கும் யோச னையை நீர் வழங்கல் வடிகாலமைப் புசபை முன்வைத்திருந்தது. இதற்கும் பிரதேசமக்களின் ஒரு பகுதியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கடல்நீரை சுத்திகரிப்பதால் அந்த பகுதி மீன்பிடி தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுமென ஒரு பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். கடல்நீரை நன்னீராக்குவதால் மீன்பிடி தொழிலோ, இயற்கை சூழலோ பாதிக்கப்படாதென நிபுணர்கள் கூறுவதாக, திட்டத்திற்கு ஆதரவானவர்கள் கூறினார்கள்.

இந்த குழப்பத்திற்கிடையில், இந்த திட்டத்தால் மருதங்கேணியில் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என நிபுணர்கள் ஆராய்ச்சி செய்தனர். மருதங்கேணி யிலிருந்துதான் யாழ்ப்பாணத்திற் கான குடிநீர் பெறப்படுமென அண்மையில் முதல்வர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

இந்தநிலையில் கடந்தவாரம் யாழ் மாவட்ட செயலகத்தில், கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் தொடர்பில் ஆய்வாளர்களால் விளக்கமளிக்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது. இதில் கலந்து கொண்டபின் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் சுமந்திரன், இந்த திட்டத் தால் மீனவர்களின் விசேட மீன்பிடி முறைகளிற்கு பாதிப்பு ஏற்படுமென்ப தால் அனுமதிக்க முடியாது என்றார். ஆனால் மறுநாளே, கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களகடலடி ஆய்வுப்பிரிவான நராவின் தலைமை யதிகாரி கலாநிதி கே.அருளானந்தம் இதை திட்டவட்டமாக மறுத்தார். ஒரு வருடமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஆயிரம் பக்க அறிக்கை யில் இல்லாத விடயத்தை சுமந்திரன் கூறியிருப்பதாக அவர் குற்றம்சாட்டியி ருந்தார்.

நடப்பவற்றை பார்த்தால், வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் தமிழ் பிரதிநிதிகள் இரண்டுபட்டு நின்று இறுதியில் ஒன்றுமில்லாமல் போனதைப் போன்ற நிலையும் வரலாமென்றுதான் தோன்றுகிறது.



# தமிழரை அம்பாந்தோட்டைக்கு அனுப்புவார்களாம்

முல்லைத்தீவின் கொக்கிளாயில் தமிழ் கிராமசேவகர் ஒருவர் அத்துமீறி குடியிருக்கும் சிங்கள மீனவர்களால் மிகமோசமாக அச்சுறுத்தப்பட்டு, கடமைக்கு இடையூறும் விளைவிக்கப்பட்டுள்ளது. கிராமசேவகரை அம்பாந்தோட்டைக்கு அனுப்புவோம் என்றும் சிங்கள மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

கொக்கிளாயில் தமிழ் மக்களின் பாரம்பரியமாககரைவலைதொழில்செய்யும் இடத்தில், சிங்கள மீனவர்கள் அத்துமீறி தொழில்செய்து வருகிறார்கள். கடற்படை மற்றும் தெற்கு அதிகாரிகளின் உதவியுடன் இவர்கள் அங்கு குடியமர்த்தப்பட்ட போதே சர்ச்சை வெடித்தது. அத்துமீறி குடியிருந்த சிங்கள மீனவர்கள், அங்குள்ள தமிழ் மக்களிற்கு அச்சுறுத்தல் விடுப்பதுடன் மோதல்போக்கையும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

தமிழ் மீனவர்கள் தொழில் செய்யும் இடத்தில் இறங்குதுறை ஒன்றை அமைக்க பிரதேச செயலகம் கடந்த வருடம் ஜூலை மாதம் முயற்சித்தபோது, சிங்கள மீனவர்கள் குழப்பம் விளைவித்ததால் அது கைவிடப்பட்டது. அத்துடன், தமிழ் மீனவர்களிற்கு எதிராக சிங்கள மீனவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்தனர். இதையடுத்து தமிழர்களின் கரைவலைப்பாடுகளை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதேசசெயலக காணி உத்தியோகத்தர், கிராமசேவகர், கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், அளவீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கு சென்றபோதே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. தமிழ் அதிகாரிகளையும், தமிழ் மீனவர்களையும் தாக்குவதற்கும் முயன்றனர்.

இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பிற்கும் வரும் சீனா!

மாதுருஓயாவிவை அண்டிய பகுதியில் 54250 ஏக்கர் காணியை சீனாவிற்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

யுத்தத்தின் போது அங்கு வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்ததுடன் யுத்தம் முடிந்தபின் 2009ம் ஆண்டு தொடக்கம் மீள்குடியேறியுள்ளனர். தற்போது அவர்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் 2015ற்கு பிறகு அபிவிருத்தி நோக்கமாக வன இலாகா பிரிவினரால் மீள்குடியேறிய மக்கள் கைது செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் ஊடாக மாதுருஓயா அபிவிருத்தி திட்டம் வெளி கொண்டுவரப்பட்டுள்ளதுடன் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சு இதில் நேரடி தலையீடு செய்துள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின்மூலம் இந்த அபிவிருத்தி திட்டம் குறித்து மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சில் பிரதேச மக்கள் 172 விடயங்கள் பற்றி தகவல் கோரியுள்ளதுடன் அதில் 15 விடயங்கள் குறித்து பதில் கிடைத்துள்ளது. அதனால் பிரதேச மக்கள் மேன்முறையீடு செய்துள்ளதுடன் அது இம்மாதம் 27ம் திகதி விசாரணைக்கு வருகிறது.

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் வாழ்வாதார காணிகளை களவெடுக்க வேண்டாம் என பிரதேச மக்கள் கோருகின்றனர்.

மாதுருஓயா தேசிய வனப்பூங்கா பிரதேசத்தில் தொப்பிகல வனப் பகுதியை அண்டி 4200 ஏக்கர் நிலம் அபிவிருத்தி திட்டத்திற்காக சீனாவிற்கு வழங்கப்படவுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

# ஊருக்கு வராத சாராயம்!

மட்டக்களப்பு கல்குடாவில் அமைக் கப்படும் மதுபான தொழிற்சாலைக்கு பிரதேசமக்களிடையே எதிர்ப்பு பலமடைந்து வருகிறது. இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன். மதுபான தொழிற்சாலை பணிகளை இடை நிறுத்தக்கோரி ஜனாதிபதிக்கு கடித மொன்றை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதி களின் கையொப்பங்களுடன் கடிதத்தை அனுப்புவதற்கு முயன்றுள்ளார். பெரும் பாலான மக்கள் பிரதிநிதிகள் இதில் கையெழுத்திட்டபோதும்,மூவர் கையொப்ப மிடவில்லை.

கிழக்கு விவசாய அமைச்சர் கி.துரைராச சிங்கம், மாகாணசபை உறுப்பினர்கள் ஞா.கிருஸ்ணபிள்ளை, கோவிந்தம் கருணாகரன் ஆகியோர் இந்த கடிதத்தில் கையெழுத்திடவில்லை. மதுபான தொழிற் சாலையால் உள்ள பாதகங்களை என்பதை ஆராய வேண்டும், வேலைவாய்ப்பு கிடைக் கும் உள்ளிட்ட காரணங்களை அவர்கள் கூறியுள்ளனராம். மதுபானமே பிரச்ச னையா, மதுபானம் நமக்கு பிரச்சனையா என்று யோசித்திருப்பார்கள் போல!



# அதிகாரிகளின் முன்பாகவே!

முல்லைத்தீவு கொக்கிளாயில் சிங்கள மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பாவிப்பதாக நீண்டகாலமாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. எனினும், அதிகாரிகள் இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்து வருகின்றனர். அண்மையில் கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் அங்கு சென்றபோது எடுக்கப்பட்ட படம் இது. தடைசெய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி இயந்தித்துடன் அதிகாரிகளின் முன்பாக சிங்கள மீனவர்கள் சர்வசாதாரணமாக செல்லும் காட்சி இது.



சூரியன்
திருமண சேவை
பிறக்கும் மங்களகரமான
புது வருடத்தில்
அனைவருக்கும் சுபம் உண்டாகட்டும்
இல: 561, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் தொடர்பு: 077 470 1430



## எதற்கு இந்த அக்கப்போர்?

குடுமிப்பிடி சண்டையில் இறங்கிவிட்டால் மாறிமாறி அடித்துக்கொள்வார்கள். சில சமயங்களில் அது சிறுபிள்ளைத்தனமாகவும் இருக்கும். பார்ப்பவர்கள் முகம் சுளிப்பார்கள். சண்டையிலீடுபடுபவர்களால் அதை புரிந்து கொள்ள முடியாது. இதை ஏன் சொல்கிறோம் எனில், அண்மைக்காலமாக அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் ரிசாட் பதியுதீன் ஆதரவாளர்கள் தமக்குள் அடித்துக்கொள்வதை பார்க்க மேலே சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது.

ஹக்கீம் என்ன செய்தாலும் அதில் பிழை கண்டுபிடித்து மேடைகள், கலந்துரையாடல்கள், சமூகவலைத்தளங்களில் ஓட்டு ஓட்டு என்று ஓட்டுவார்கள் ரிசாட் அபிமானிகள். அதேபோல, ரிசாட் செய்வது, சொல்வது எல்லாவற்றையும் வைச்சு செய்வார்கள் ஹக்கீம் ஆதரவாளர்கள். இவர்களின் குடுமிப்பிடி சண்டையை பார்க்க சில வேளைகளில் சின்னப்பிள்ளைதனமாகவும் இருக்கும்.

கடந்தவாரம் இப்படியாக குடுமிப்பிடி சண்டைபோட்ட விடயங்கள் இரண்டு. இதற்கெல்லாமா அக்கப்போர் செய்வார்கள் என நீங்களே தலையை சொறிவீர்கள்.

கடந்த 11ம் திகதி வரை இரண்டுநாள் அம்பாறை விஜயத்தை அமைச்சர் ஹக்கீம் மேற்கொண்டிருந்தார். ஹக்கீமின் பயணத்திற்கு இரண்டுநாள் முன்னதாக ரிசாட்டும் இந்தபகுதிக்கு வந்திருந்தார். இதிலென்ன புதினம் என நீங்கள் கேட்கலாம். ஆனால், இரண்டு தரப்பு ஆதரவாளர்களும் இதனை விவகாரமாக்கியுள்ளனர்.

"ரிசாட் அம்பாறையில் ஆதரவை பெருக்கிக் கொள்ள ஆரம்பித்ததையடுத்தே, பொறாமையில் ஹக்கீம் அம்பாறைக்கு வந்துள்ளார். அவரை அம்பாறைக்கு வரவழைக்க நமது தலைவரால்தான் முடியும்" என ரிசாட் ஆதரவாளர்கள் ஆரம்பிக்க, "இல்லையில்லை. தலைவர் இந்த பயணத்தை இரண்டு வாரங்களின் முன்னரே திட்டமிட்டு விட்டார். இந்த பயணத்தில்பல அபிவிருத்தி திட்டங்களும்நடந்தன. அது தொடர்பான அதிகாரிகளிற்கும் விஜயம் பற்றி தெரியும். ஹக்கீம் செல்வதற்கு முன் சென்றுவிட வேண்டுமென்றுதான் ரிசாட் ஓடிச்சென்றார்" என ஹக்கீம் அணியினர் எகிறிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல கந்தூரி உணவு விசமான இறக்காமத்திற்கு யார் முதலில் போனார்கள் என்றும் ஆதரவாளர்கள் அடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## பெண்கள் பக்கத்தில் வந்தால் அவதானம்!

திருகோணமலை, மொறவெவ பொலிஸ் பிரிவிற்குறபட்ட பகுதியில் நடக்கும் நூதன வழிப்பறி பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. இளம் யுவதிகளை பாவித்து, அவர்களின் பெற்றோரோ பணம்பறிக்கும் யுக்தியை கையாள்கிறார்கள்.

திருகோணமலை ஹொரவ்பொத்தான பிரதான வீதியிலேயே இச்சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றது. இளம் யுவதிகள், சிறார்களை பேரூந்து தரிப்பிடங்களிற்கு அழைத்து வருகிறார்கள். அங்கு பேரூந்திற்கு காத்திருக்கும் அரசஉத்தியோகத்தர்களிற்கு அருகில் நிறுத்துகிறார்கள். சிறுமியை பேரூந்து நிறுத்தத்தில் விட்டுவிட்டு, அந்த பகுதியில் உள்ள முச்சக்கரவண்டி சாரதிகளுடன் பெற்றோர் பேசிக்கொண்டிருப்பார்கள். தனிமையில் நிற்கும் சிறுமியிடம் யாராவது பேச்சுகொடுத்தால், உடனே பெற்றோரும் முச்சக்கரவண்டி சாரதிகளும் வந்து அவர்களை மிரட்டி பணம் பறிக்கிறார்கள். சிறுமியின் கையை பிடித்து இழுத்தது, ஆபாசபடம் காட்டியதாக பொலிஸில் முறையிடப்போவதாகவே மிரட்டி பணம் பறிக்கிறார்கள். முச்சக்கரவண்டி சாரதிகளும் இந்த நூதன கொள்ளையில் உடந்தையாக இருக்கிறார்கள்.

இதுபோல பயணிகளிற்கு அருகில் வரும் யுவதிகளும், ஆட்கள் இல்லாத சமயத்தில் இப்படி அச்சுறுத்தி பணம் பறிக்கிறார்கள் என்ற முறைப்பாடு எழுந்துள்ளது. பொதுமக்கள் இந்த விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அட்டாளைச்சேனைக்கு பின்னடைவு!

அட்டாளைச்சேனை பிரதேசசெயலராக கடமையாற்றிய ஐ.எம்.ஹனீபா இடமாற்றம் பெற்றுச்சென்றது பிரதேசத்திற்கு பெரிய பின்னடைவென கூறியுள்ளார் கிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை. அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் உரையாற்றியபோதே இதனை தெரிவித்தார்.

'கடந்த 6 வருடங்களாக அட்டாளைசேனை பிரதேசசெயலராக கடமையாற்றிய ஐ.எம்.ஹனீபா சிறப்பான ஆளுமையாக செயற்பட்ட இந்த பகுதியிலுள்ள மூவின மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த கடுமையாக பாடுபட்டார். இப்படியான சிறந்த அதிகாரி இடமாற்றம் பெற்று சென்றது அட்டாளைச்சேனைக்கு பெரிய பின்னடைவு. ஒலுவில் துறைமுக பிரச்சனை, அஷ்ரப்நகர் பிரச்சனை, காணிப்பிரச்சனைகளை தீர்த்துவைக்க அர்ப்பணிப்பாக பணியாற்றினார். 2013 இல் அவர் இடமாற்றம் பெற்றுச்செல்ல கடிதம் பெற்றபோது,முன்னாள் உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சர் அதாவுல்லாவும் நானும் இணைந்து, அரசியல் அதிகாரத்தை பாவித்து இடமாற்றத்தை நிறுத்தினோம். இதற்காக ஹனீபா எம்முடன் முரண்பட்டார்' என்றார்.

ஐ.எம்.ஹனீபாவின் இடமாற்றம் அரசியல் காரணங்களால் நடந்ததென அண்மையில் சர்ச்சை எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நுரைச்சோலையில் ஒரு வீடாவது கிடைக்குமா?

நுரைச்சோலை வீட்டுத்திட்ட வீடுகளை மூவின மக்களிற்கும் பகிர்ந்தளிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக அண்மையில் ஒரு செய்தி வந்தது. இந்த அறிவிப்பு வந்தபோது முஸ்லீம் அரசியல்வாதிகள் இலேசாக தூக்கத்தால் வழித்தார்கள். நுரைச்சோலை வீட்டுத்திட்டம் பற்றி அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஒரு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்திருக்கிறார் என்ற செய்தி வெளியானதும், தூக்க கலக்கத்தில் இருந்து விழித்த அரசியல்வாதிகள் எல்லோரும் துடித்துப்பதைத்து எழுந்திருக்கிறார்கள்.

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபின் முயற்சியால் சவுதி அரசின் உதவியுடன் கிங் ஹூசைன் மாதிரி கிராமம் என்ற பெயரில் 50 ஏக்கர் பரப்பளவில் 500 வீடுகள் கட்டப்பட்டன. அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடனும் இந்த கிராமம் அமைக்கப்பட்டு, மக்களிடம் கையளிக்கப்படவிருந்த தறுவாயில் சிக்கல் உருவாகியிருந்தது.

நுரைச்சோலை சிக்கல் என்னவென்பது ஊரறிந்தது. இந்த திட்டத்தின் மூலம் பேரியல் மக்கள் அபிமானம் பெறப்போகிறார், வீட்டுதிட்ட கையளிப்பு நிகழ்வில் நமக்கு முக்கியத்துவம் தரப்படவில்லையென்ற முஸ்லீம் அரசியல்வாதிகளின் போட்டி மனப்பான்மையும் நுரைச்சோலை சிக்கலுக்கு ஒரு காரணம் என்பது ஊரறிந்தது.

இப்போது முஸ்லீம் காங்கிரசிற்கு வந்துள்ள மாகாணசபை உறுப்பினர் ஒருவர் அன்று நுரைச்சோலை திட்டத்தை குழப்பியடிப்பதில் முன்னின்றவர். அட்டாளை பிரதேசசபை உறுப்பினர் குமார தலைமையிலான கும்பல் குழப்பத்தில் ஈடுபட்டு சவுதி அரேபிய கொடியை தீயிட்டதற்கு பின்னணி என்னவென்பது ஊருக்கே தெரியும்.

நுரைச்சோலைக்கு அண்மையிலுள்ள தீகவாபிக்குள் சென்று, முஸ்லீம் குடியேற்றம் வந்தால் உங்களிற்கு பிரச்சனையென திரி தூண்டிவிட்டவர்களும் நமது முஸ்லீம் தலைவர்கள்தான். இதன்பின்னர்தான் விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றது. நீண்ட இழுபறியின் பின் மூவின மக்களிற்கும் இந்த வீடுகளை பகிர்ந்தளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில்தான், அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து, இதில் 300 வீடுகளை முஸ்லீம்களிற்கு பெற்றுக்கொடுப்பேன் என்றுள்ளார் ரிசாட். உடனடியாக அறிக்கைப் போர் தொடுத்துள்ளார் அதாஉல்லா. 300 வீடுகள் அல்ல நமது இலக்கு, குடியேற்றத்திற்கு உகந்த 125 ஏக்கர் காணியையும் பெற முயற்சிக்க வேண்டும் என்றுள்ளார். கிழக்கில் தமிழ், சிங்கள மக்களிற்கு குடியிருக்க போதுமான மேட்டுநில காணிகள் இருக்கிறது, இந்த பகுதியை விட்டால் முஸ்லீம்களிற்கு வேறுஇடம் கிடையாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளையாள் கவிழ்த்து விடுவதிலேயே நமது அரசியல்வாதிகள் குறியாயிருந்தால், நுரைச்சோலையில் ஒரு வீடும் நமக்கு கிடைக்காமல் போகலாம்!

## தவத்தால் அது முடியாது!

முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரை விமர்சிக்க கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவத்திற்கு எந்த அருகதையும் இல்லையென கூறியுள்ளார் நாபீர் பௌண்டேசன் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் உதுமான்கண்டு நபீர் கூறியுள்ளார்.

பெருந்தலைவர் அஷ்ரப்பிற்கு பின்னால் கிழக்கில் பல அபிவிருத்திகளை செய்து, தேசிய அளவில் இடம்பிடித்த அதாவுல்லாஹ், ஹிஸ்புல்லாஹ் ஆகியோரை மாற்றுக்கட்சிக்காரர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டு விமர்சிப்பதை கிழக்கு மாகாண மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த இரண்டு அரசியல் சக்திகளின் மீதும் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசோ, மாகாணசபை உறுப்பினர் தவமோ சேறுபூசும் அரசியலை மேற்கொள்ள முடியாது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறியுள்ளார்.



# ஆபத்தான முயற்சி

தலைமை மாற்றம் குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒழுங்கமைத்த கூட்டம் பற்றிய தகவல்களை கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு பதிலாக மக்கள் பிரதிநிதித்துவத்தை நம்மிடம் தந்தால் விமோசனம் சாத்தியம் என சொல்லும், நம்பும் தமிழ்தேசிய மக்கள் முன்னணி மற்றும் உதிரியான மக்கள் பிரதிநிதிகள், பிரதிநிதிகள் அல்லாத சிலரும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு மாற்றான தலைமைத்துவம் ஒன்று பற்றி அன்றையதினம் தீவிரமாகவே ஆலோசனை செய்திருந்தார்கள். இதுபற்றிய விரிவான தகவல்களை கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம்.

தீபத்தின் செய்திகளின் பின், அன்றைய கூட்டத்தரப்பினரிடம் ஒரு சலசலப்பு ஏற்பட்டிருந்தது. இரகசியமாக நடத்தப்பட்ட இந்த கூட்டம் பற்றிய தகவல்களை வெளியில் கசிய விட்ட கறுப்பாடு யார் என்பதை அறிவதில் ஏற்பாட்டாளர்கள் தீவிரம் காட்டியிருந்தனர்.

ஏற்பாட்டாளர்களின் இந்த போக்கு தவிர்க்கவியலாத சில கேள்விகளை எழுப்பியுள்ளது. முதலாவது கேள்வி, தலைமை மாற்ற தகவல் கசிந்ததில் ஏன் அதீத பதற்றத்திற்கு உள்ளானார்கள் ஏற்பாட்டாளர்கள்? இவர்கள் இரகசிய கிளர்ச்சியா செய்கிறார்கள்? தமது முயற்சிகள் பற்றிய தகவல் மக்களிற்கு தெரியக்கூடாதென நினைக்கிறார்களா?

கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் வெளிப்படையானவையாக இருக்க வேண்டும். மக்களிற்காக, மக்களின் அரசியல் செய்பவர்கள், தமது நகர்வுகளை எதற்காக மக்களிடம் மறைக்க வேண்டும்? 1970களில் தோன்றிய ஆயுதபோராளிகள் தமது செயற்பாடுகளை இரகசியமாக வைத்திருந்தார்கள். அதில் நியாயமிருந்தது. அவர்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல் கசிந்தால் அரசதரப்பால் உயிராபத்து நிச்சயமானது.

ஆனால் இன்று அது நிலைமையல்ல தவிர, அந்த அரசியலை இவர்கள் யாரும் செய்யவுமில்லை. பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள், இலங்கையின் தேர்தல்முறைமைகளினூடாக தேர்வாகிய, தேர்வாக எத்தனிப்பவர்களின் அரசியல். இதில் ஏன் ஒளிவுமறைவு?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமை மீது இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் எல்லோருமே அடிக்கடி விமர்சனங்களை வைப்பவர்கள்தான். தலைமைமீது விமர்சனங்களை பகிரங்கமாக வைப்பவர்கள், அந்த தலைமை மாற்ற முயற்சியை எதற்காக திரைமறைவில் செய்ய வேண்டும்?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமை மீது நிறைய விமர்சனங்கள் எல்லோருக்கும் உள்ளதுதான். அவர்கள் செய்யாதது, செய்ய முடியாமலிருப்பது பற்றிய விமர்சனங்களை பேசினால் அது ஒரு மகாபாரதம். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் அதற்கு பதிலீடு என்னவென்பதற்குதான் எவரிடமும் பதிலில்லை.

தலைமை மாற்றமென்பது இயல்பாக நடக்க வேண்டியது. இருக்கும் தலைமையின் போதாமைகளிலிருந்து புதிய தலைமைத்துவம் மேலெழ வேண்டும். அதனை அமைக்க முடியாது. புதிய தலைமைத்துவத்தை உருவாக்க முயல்பவர்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே இருந்த தமிழ்தேசிய கூட்டமைப்பு கூட்டமைப்பின் அங்கங்களாக இருந்தவர்கள். சுரேஷ் பிரேமச்சந்திரனோ இப்போதும் நீடிப்பவர். இப்போது இவர்களின் கட்சிகள்தான் வித்தியாசமே தவிர, தமிழ்தேசிய கூட்டமைப்பின் அரசியலில் இருந்து வேறுபட்டவர்கள் இல்லை. தமிழ்தேசிய அரசியல் செய்யும் அரசியல்வாதிகளின் நகல்கள்தான் இவர்களும்.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமை மாற்றப்பட வேண்டுமென்ற சூழல் எழுந்தால், அது தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற அரசியலின் மாற்றமாகத்தான் இருக்கும். தலைமை மாற்றமென வெறுமனே ஆட்கள் மாறுவதால், தமிழ் மக்களின் அரசியலில் மாற்றம் வருமென நம்புவது, இராம நாராயணின் பக்திப்படங்களில் மாத்திரமே சாத்தியம். நிஜத்தில் அதற்கு வாய்ப்பில்லை.

ஒரு வாதத்திற்கு, ஆள் மாறுவதால் தமிழர்களின் அரசியல் தலைவிதி மாறுமென வைத்தாலும், அந்த ஆள் மாற்றம் இரகசிய கிளர்ச்சியாகவா நடக்க வேண்டும்? தற்போதைய தலைமையின் போதாமையிலிருந்து படிப்படியாக மேலெழ வேண்டும். அப்படியென்றால்தான் மக்கள் அதனை அங்கீகரிப்பார்கள். ஆனால், இப்போது தலைமை மாற்றத்திற்கு முனைபவர்கள் அப்படி மேலெழவில்லை. தற்போதைய தலைமைக்கு பதிலீடாக இவர்களில் யாரையும் நிறுத்தினால் பலன்கிட்டுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமான சமகால அரசியலை இவர்கள் செய்யவுமில்லை.


தலைமை மாற்றம் இயல்பாக நிகழாமல், நிகழ்த்தப்பட முயன்றால் அது தமிழ் அரசியல் சூழலில் மேலும் குழப்பங்களையே ஏற்படுத்தும். இரகசியமாக இதற்கான தயாரிப்புக்கள் நிகழ்வதென்பதே, நிகழ்த்தப்பட முயல்வதற்கான அறிகுறிதான்.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



**சீ.யோகேஸ்வரன்**
**– எம்.பி, தமிழ்தேசிய கூட்டமைப்பு**

நாங்கள்தான் அரசாங்கம் என்ற ரீதியில் எந்த அனுமதியும் பெறாமல் கல்குடாவில் மதுபானச்சாலை அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் இதற்கு நூறுவீதம் வரிச்சலுகையளித்துள்ளது. கோறளைப்பற்று பிரதேசசபை, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் மதுபானச்சாலை அமைக்கும் பணிகளை நிறுத்தும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு அமைய, மதுபானச்சாலையை அப்புறப்படுத்தும்படி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புவதற்கு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் பிரதிநிதிகளிடம் கையெழுத்து பெற முயன்றேன். மதுபானச்சாலையால் பாதகம் இல்லையென கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கையெழுத்திட மறுத்துவிட்டார். கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இரண்டுபேரும் கையெழுத்திட மறுத்துவிட்டார்கள்.



**க.வி.விக்னேஸ்வரன்**
**– முதல்வர், வடக்கு மாகாணம்**

இயேசு கிறிஸ்து நாதரின் பரம அபிமானி காலஞ்சென்ற பிரேமானந்த சுவாமி. பல பேச்சுக்களில், இயேசு நாதரின் வாழ்க்கையிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துரைப்பார். அன்னை வேளாங்கன்னியை சென்று தரிசித்து வாருங்கள் என எனக்கும், குடும்பத்தாருக்கும் கூறியவரும் அவர்தான். இன்று பல்லாயிரக்கான கிறிஸ்தவ அபிமானிகள் அவரின் அபிமானிகளாக உள்ளனர். தூபோக 1958. இலேயே றோயல் கல்லூரியில் சமய ஒப்பீட்டு பரிசு பெற்றவன். எல்லா மதங்களிலிருந்தும் பாடவிதானம் தரப்பட்டு அதில் முதலிடத்தை பெற்றேன். இன்றுவரை எல்லா மதங்களையும் அனுசரித்து போற்றி வருபவன். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் சுவாமி பிரேமானந்தரின் வாழ்க்கையையும் நான் ஒப்பிட்டு பேசவில்லை.



**அல்ஹாஜ் வாபா பாறூக்**
**– கிழக்கின் எழுச்சி**

முஸ்லீம் அல்லாத பெர்னாட் ஷா, நெப்போலியன், மகாத்மா காந்தி, தலாய்லாமா போன்றவர்களே உமரின் கிலாபத் போன்ற ஆட்சிதான் இன்றைய உலகப்பிரச்சனைகளை தீர்க்கவல்லதென பகிரங்கமாக கூறியிருக்கும்போது, கிலாபத்தின் வாரிசுகளான நாம் கூறுவதில் என்ன தவறு இருக்கிறது. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முழு உலகத்திலும் உண்மையான கிலாபத் நிறுவப்பட்டே தீரும். இலங்கையும் அதற்கு விதிவிலக்காக இருக்காது.



**வாசுதேவ நாணயக்கார**
**– எம்.பி, [illegible]**

இங்கிலாந்து நிறுவனம் ஒன்று கொழும்பிலுள்ள குப்பைகளை தமக்கு பணத்திற்கு தருமாறு கேட்டது. குப்பையிலிருந்து மின்சாரம் பெறலாம், நீங்களும் பெற்றுக் கொள்ளலாம் என்றது. எனினும் குப்பை வியாபாரிகள் மாநகரசபை உறுப்பினர்கள் சிலரை விலைக்கு வாங்கியதன் மூலம் எமது சேவைத்திட்டங்களிற்கு தடைகளை ஏற்படுத்தி நிறுத்திவிட்டனர். எனவே மீதொட்டமுல்ல அனர்த்தம், ஏதோ ஒருவகையில் மனிதக்கொலையாகும்.

**10%** இலங்கையின் சனத்தொகையில் நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள்.

**390** மில்லியன் மக்கள் வருடாந்தம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுகிறார்கள்.

**4,500** ஏக்கர் காணி தெல்லிப்பழை பிரதேசசெயலாளர் பிரிவில் இராணுவத்தின் பிடியில் உள்ளது.

**28,188** ஹெக்டெயர் வேளாண்மை மட்டு மாவட்டத்தில் 2016 இலிருந்து பாதிக்கப்பட்டுள்ளது.




வடக்கு ஆளுனர் அலுவலகத்தில் நடந்த நிகழ்வில் வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஆளுனர் றெஜினால்ட் கூரே





# வெள்ளையடிக்கிறோமா?

நம்மாழ்வார்

வடக்கில் படையினர் ஆக்கிரமித்துள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பான பேச்சை, படைத்தரப்புடன் ஆரம்பித்துள்ளனர் தமிழ்தேசிய கூட்டமைப்பினர். முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கட்டளையிடும் படையதிகாரிகளுடன் கூட்டமைப்பினர் பேச்சை நடத்தியுள்ளனர். இதற்கு முன்னதாக பாதுகாப்பு செயலர், இராணுவத்தளபதி உள்ளிட்டவர்களுடன் பேசியிருந்தனர்.

கடந்த 19ம் திகதி முல்லைத்தீவில், 20ம் திகதி கிளிநொச்சியில், 21ம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்தப்பேச்சுக்கள் நடந்தன. இந்த பேச்சுக்களில் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. கேப்பாபிலவில் ஆக்கிரமித்துள்ள மக்கள் காணிகளில் பாதியை விடுவிக்க படையினர் சம்மதித்திருந்தனர்.

இந்த பேச்சுக்களில் ஒரு உறுத்தல் உள்ளது. இராணுவத்திற்கு கட்டளையிடும் அதிகாரமுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதை செய்யாமல் புதிதாக இரண்டு தரப்பை உருவாக்கியுள்ளார். இனப்பிரச்சனை மற்றும் அதனுடன் தொடர்புடையதாக விரிந்த பிரச்சனைகள் தமிழர்கள், சிங்களவர்கள் என இரண்டு தரப்பினர் சம்பந்தப்பட்டிருந்தது. இப்பொழுது மூன்றாவதாக இராணுவமும் சம்பந்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பினர் நிலவிடுவிப்பு பேச்சை அரசுடன் ஆரம்பித்த சமயத்திலேயே, இது அங்கிருந்து நழுவி இராணுவத்தின் பிரசன்னத்திற்கு செல்வதற்கு அனுமதித்திருக்ககூடாது. ஆட்சியின் அலகுகளிற்கும் தமிழர்களிற்குமிடையிலான பிரச்சனையல்ல இது. இலங்கையின் இரண்டு இனங்களான, தமிழ்சிங்கள இனங்கள் சம்பந்தப்பட்ட, இனப்பிரச்சனையிது. இதில் தமிழர்கள் ஒரு தரப்பாக செயற்பட வேண்டியவர்கள். ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் அதை தவறவிட்டுவிட்டனர்.

இரா.சம்பந்தன் இப்பொழுது எதிர்க்கட்சி தலைவரும் கூட. அவர் இராணுவத்துடனான பேச்சிற்கு சம்மதித்ததன் மூலம், இலங்கை அரசியலில் புதியதொரு தொடக்கத்தை செய்துள்ளார். ஜனாதிபதி, இராணுவம் ஆகிய தரப்புக்களுடன் எதிர்க்கட்சி தலைவர் பேச்சு நடத்தியுள்ளார். அதாவது, மக்களால் தேர்வு செய்யப்பட்டு நாட்டை பரிபாலிக்கும் ஆட்சியாளர்களிற்கு மேலதிகமாக, நாட்டில் இன்னொரு அதிகார மையம் உள்ளது. ஜனநாயக நாட்டில் நடக்க சிரமமான விடயம் இது.

இதற்கு இன்னொரு அர்த்தமும் உள்ளது. இனப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இழுபறிப்படுவது, யுத்தத்தில் நடந்த மீறல்களிற்கு பொறுப்புகூறல் உள்ளிட்ட விவகாரங்களில் அரசை விடுவித்து, இராணுவத்தை முன்னிலைப்படுத்தி குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது. அதாவது, திட்டமிட்டவர்கள், உத்தரவிட்டவர்களை தவிர்த்து, செயற்படுத்தியவர்களை குற்றவாளியாக்கும் முயற்சி.

நிலவிடுவிப்பு போராட்டங்களை மக்கள் தீவிரமாக நடத்தி வருகிறார்கள். இது இலங்கை விவகாரத்தில் கவனங்கொள்ளப்படும் விவகாரம். நிலங்களை விடுவிக்க அரசு தயாராக உள்ளது, இராணுவம்தான் தடைபோடுகிற தென்பதை போன்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். உண்மையில் பொறுப்பு சொல்ல வேண்டிய அரசுக்கு வெள்ளையடிக்க நாங்களே உதவுகிறோமா?

இந்த பேச்சுக்களை மையப்படுத்தி பேச வேண்டிய இன்னொரு விடயம் உள்ளது. படைத்தரப்புடனான பேச்சுக்களை தமிழ்தேசிய கூட்டமைப்பு நடத்தியதாக அல்லவா ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். மன்னிக்கவும். அது தவறு. தமிழரசுக்கட்சியாகத்தான் பெரும்பாலும் நடத்தப்பட்டது. முறைப்படியான அழைப்பு இல்லாமல், தமது பகுதியில் நடக்கும் கூட்டம் என்ற அடிப்படையில்தான், விதிவிலக்காக கலந்து கொண்ட ஏனைய பங்காளி தலைவர்கள் கலந்து கொண்டனர் என்பது அதிர்ச்சி செய்தி.

யாழ்ப்பாண கூட்டத்திற்கான ஏற்பாட்டின்போது, அரசியல்வாதிகளை தாங்கள் அழைப்பதாக இராணுவம் குறிப்பிட்டதாகதகவல். அரசஅதிகாரிகளை மட்டும் மாவட்ட செயலகத்தினரை அழைக்க சொல்லியிருந்தனர். எனினும், அனைத்து மக்கள் பிரதிநிதிகளிற்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை.

இருக்கும் பிரச்சனை போதாதென, கூட்டமைப்பாக இருப்பதா இல்லையா என்ற வீணான குழப்பங்கள் ஏற்பட்டு, மக்கள் தலையை பிய்த்துக்கொண்டிருக்க, குழப்பங்களிற்கு தூபம் போடுவதை போல பொறுப்பானவர்களே நடந்து கொள்ளலாமா?





► சம்மாந்துறை மல்லிகைத்தீவு கிராம மக்கள் நடாத்திய தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன், மற்றும் சமூக சேவையாளா க.கனகராஜா, எஸ்.துரைசிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பலாப்பழத்திலும் பகல் கொள்ளை

நிந்தாவூர் சலீம்

யாழ்ப்பாணப் பலாப்பழம் என்றால் அதற்கு எங்கும் தனி மவுசு உண்டு. குறிப்பாக கிழக்கில் யாழ் பலாப்பழங்களை தமிழ்,முஸ்லீம் மக்கள் விரும்பி வாங்கி உண்பது வழக்கம். யாழ்பாண பலாப்பழங்களின் வீரிய மிக்க சுவை சொட்டும் சுவைகள் தனித்துவ மிக்கதே! இதனால்தான் யாழ்ப்பாண பலாப்பழங்கள் என்றால், கிக்கில் தமிழ்,முஸ்லிம் பிரதேசங்களிலும் பெரும் மவுசும்,சிராக்கியும் நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் பலாப்பழ சீஸன் ஆரம்பமாகிவிட்டால் கிழக்கில் பலர் பலாப்பழ வியாபாரத்தில் இறங்கிவிடுவர். வாகனங்களை வைத்திருப்போர் அடிக்கடி யாழ் சென்று பலாப்பழங்களைக் கொள் முதல் செய்து வந்து விற்பனை செய்து வருமானமீட்டுவர். யாழ்ப்பாணத்தில் கொடிகாம சந்தை, சாவகச்சேரி பிரதேசங் களிலிருந்து இந்த வியாபாரிகள் பலாப் பழங்களைக் கொண்டு வருகின்றனர்.

தற்சமயம் அம்பாறை,மட்டக்கிளப்பு மாவட்டங்களுக்கு வியாபாரிகள் யாழ் பலாப்பழங்களைக் கொண்டு வந்து விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதான வீதியின் வான்களில் பலாப்பழங்களை கொண்டு வந்து விற்பனை செய்யும் சில வியாரிகள் கிராக்கியையும் மவுசையும் வைத்து கொள்ளை இலாப மீட்டுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் கூடியது *300* ரூபாவுக்குள் வாங்கக் கூடிய பலாப்பழமொன்றை நான்கு துண்டுகளாக வெட்டி ஒரு துண்டு *200* ரூபா விலையில் விற்று பெரும் இலாப மீட்டுவதை தினமும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு கொள்ளை இலாப மீட்டும் வியாபாரிகள் விரும்பினால் வாங்குங்கள் என இராக்கியும் காட்டுகின்றனர். இது முக்கிய போக்குவரத்து வீதியென்பதால் பலாப்பழங்களை கண்டதும், பெருமளவானோர் திரண்டு வாங்குவதை காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை இந்த வியாபாரிகள் சிலசமயம் யாழ் பலாப்பழமெனக் கூறி விற்பனை செய்யும் பழங்களின் சுவைகள் திருப்திகரமாகத் தென்படினும் , சுவை மிக குறைவானதாகவே யுள்ளதை சுட்டிக்காட்டும் பொதுமக்கள், இத்தகைய பலாப்பழங்களைக் கனிய வைப்பதற்காக மருந்து விசிறப்பட்டு இருக்கலாமெனவும் சந்தேகம் தெரிவிக்கிக்கின்றனர்.


எனவே காரைதீவு பிரதான வீதியின் மருங்குகளில் விற்பனை செய்யப்படும் பலாப்பழங்களை சம்பந்தப்பட்ட பிரதேச பொதுச்சுகாரப் பரிசோதகர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தி மக்களுக்கு நன்மை பயக்க வேண்டுமென்றும் கோரப் படுகின்றது.

மேலும் சில சமயங்களில் மொனறாகல, சியம்பலாந்துவ போன்ற சிங்களப் பிரதேசங்களிலிருத்து கொண்டு வரப் படும் பலாப்பழங்களையும் யாழ் பலாப் பழங்களெனக் கூறி சில வியாபாரிகள் விற்பனை செய்ய முற்படுகின்ற போதிலும் தனித்துவ மிக்க யாழ் பழங்களை மக்கள் எளிதில் இனம் கண்டு கொள்கின்றனர்.

தேவைகள் கூடியுள்ளதாலும் கிராக்கி யாலும் பலாப்பழத்தில் கூட பகற் கொள்ளை இடம் பெறும் கலிகாலமப்பா இது



# சிறுமி கடத்தல்!



கிளிநொச்சியில் பதினைந்து வயதான சிறுமியொருவர் கும்பலொன்றினால் கடத்தப் பட்டுள்ளார். தர்சனா கோவிந்தசாமி எனும் இந்த சிறுமி கடந்த 20ம்திகதி காலை 10 மணியளவில் பிரமந்தனாறு கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டில் உணவருந்திக்கொண்டிருந்த வேளையிலேயே கடத்தல் நடந்துள்ளது. வாகனங்களில் வந்த சுமார் 13 பேரைக் கொண்ட கும்பலொன்றே சிறுமியை கடத்தியுள்ளனர்.

இவர் உருத்திரபுரத்திலுள்ள மகாதேவா இல்லத்தில் வசித்து கல்வி பயில்பவரெனவும் விடுமுறைக்காக தனது வீட்டுக்கு வந்தவேளையே கடத்தப் பட்டுள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது. கடத்தப்பட்டவர்கள் முகங்களுக்கு துணி கட்டியிருந்ததால் அடையாளம் காணப்படவில்லை.

# பாலமுனை பலப்பரீட்சை!

மிக விரைவில் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளன. தற்போது அம்பாறை மாவட்டத்தில் அன்சீல், ஹசன்அலி, நிந்தவூர் பொத்துவில் முன்னாள் தவிசாளர்கள் இணைந்து ஹக்கீமுக்கு எதிராக போர்க் கொடி தூக்கி வருகின்றனர். இது சிறிய வாக்குச் சரிவை ஏற்படுத்த லாம் என கருதப்படுகிறது. இதில் அன்சீலினால் பாலமுனை வாக்குகள் சிதறலாம்.

இதை கணித்தே, அதிருப்தியாளர்களுடன் காங்கிரஸ் தரப்பினர் பேரம் பேச முயல்கிறார்கள் என்கிறார்கள் அதிருப்தியாளர் தரப்பினர். அதிருப்தி யாளர் அணியில் இருந்த சில பிரமுகர்களுடனான பேரம் வெற்றிகரமாக முடிந்துள்ளதென்றும் கூறுகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுடன் முரண்பட்டு பகிரங்க மேடைகளில் ஹக்கீமை விமர்சித்து வரும் பாலமுனை சட்டத்தரணியும் அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான அன்சில் கடந்த மாதம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

இந்நிலையில் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் கட்சியில் அன்சீல் இணையவுள்ளார் என்ற தகவல் வெளியாகியிருந்தது. இதுபற்றி அன்சீலை தொடர்பு கொண்டு கேட்டபோது, அது பொய்யான வதந்தி என்று மறுத்தார். அத்துடன் அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் இணையும் எண்ணமுமில்லையென மறுத்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மிக விரைவில் நடைபெறவுள்ளது. பாலமுனை விவகாரம் இதில் செல்வாக்கு செலுத்தலாம் என்பதாலேயே. பாலமுனை அமைப்பாளர் பதவியை ஹக்கீம் எடுத்துக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் பாலமுனை வாக்குகளை தக்கவைக்கலாமென ஹக்கீம் கணக்குப்போடுவதாக தெரிகிறது. ஹக்கீம், அன்சீல் போட்டியில் வெற்றிபெறுவது யார் என்பது இன்னும் சில மாதங்களில் தெரிந்துவிடும்.





## செக் வைக்கும் மத்திய அரசு

# சசிகலா குடும்பமே கூண்டோடு காலியா?

சாண்டில்யன்

ஜெயலலிதாவின் மறைவின் பின் சூடு பிடித்து, தணிந்த அதிமுக உள்கட்சி குழப்பம் இப்போது மீண்டும் விஸ்பரூபம் எடுத்துள்ளது. கட்சிக்குள் கொந்தளிப்பு உருவாகியபோதும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், சமாளிக் கப்பார்த்தார் டிடிவி.தினகரன். ஆனால் அவரது முயற்சிகளை மீறி உட்கட்சி பிரச்சனை வெளியில் தெரிய ஆரம்பித்து விட்டது. தினகரன் அணி மீண்டும் உடைந்து, ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார் தினகரன்.

ஜெயலலிதாவின் மறைவின் பின் சசிகலா எதேச்சையாக கட்சியை வளைத் துப்போட்டதுமல்லாமல், முதல்வர் பதவிக் கும் ஆசைப்பட்டார். சசிகலா குடும்பத்தின் திருகுதாளம் ஊரறிந்தது. அதனால் ஆரம்பத்தில் இருந்தே அந்தக்குடும்பத்தினர் கட்சியிலும், ஆட்சியிலும் தலையெடுக்க மத்திய அரசு விரும்பவில்லை. இதை கட்சிக்கு மத்திய அரசின் பிரதிநிதிகள் வெளிப்படையாக கூறியபின்னரும், மத்திய அரசுடன் மோதிப்பார்க்கும் துணிவை, அதிகார ஆசை சசிகலாவிற்கு ஏற்படுத்தியது. இறுதியில் அவர் சிறைக்கு செல்ல வேண்டியதாகிவிட்டது.

தான் சிறைக்கு செல்லும்போது, கட்சியின் பிடியை தொடர்ந்து வைத்திருக்க, நெருங்கிய உறவினரான டிடிவி.தினகரனை துணைப் பொதுச்செயலாளர் பதவியில் அமர்த்தினார். ஆனால் தினகரன் அந்தப்பதவிக்கு வந்ததை கட்சியின் மூத்த அமைச்சர்கள், நிர்வாகிகள் ரசிக்கவில்லை. பணம், அதிகாரத்தை வைத்துக்கொண்டு கட்சியை நடத்திக்கொண்டு, முதல்வர் அதிகாரத்தையும் கைப்பற்றலாமென சசிகலாவின் பாணியில் தினகரனும் செயற் பட்டார். அவர் ஆர்கே நகரில் தேர்தலில் போட்டியிட்டதே முதல்வர் நாற்காலியை குறிவைத்துதான். தினகரனின் நடவடிக் கைகளிற்கு பன்னீர் அணியை வைத்து மத்திய அரசு தடைக்கல் போட்டது. இதன் ஒருகட்டமாக அதிமுகவின் பெயர். சின்னம், இணையத்தளங்களை இரத்து செய்தது.

பெயர், சின்னம் போனால் என்ன, என்னிடம் பணம் இருக்கிறது என்ற பாணி யில் செயற்பட்டார் தினகரன். இதுதான் அவருக்கு உலை வைத்துள்ளது. ஒவ்வொரு வாக்காளருக்கும் 4,000 ரூபாய் வீதம் விநியோகிக்க திட்டமிட்டார். ஜெயலலிதா காலத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மூத்த அமைச்சர்களின் பொறுப்பில் விடுவார்.

தினகரன் அப்படிச் செய்யவில்லை. தனது நம்பிக்கைக்குரிய அமைச்சர் விஜயபாஸ்கரிடம் பொறுப்பை கொடுத் தார். அமைச்சரவை, கட்சியில் புதியவரை முன்னிறுத்துவது, தமக்கு இழைக்கப் படும் அவமான மாக அவர்கள் கருதி னார்கள். ஏற்கனவே தினகரனில் அதிருப் தியில் இருந்தவர்களில் யாரோ ஒருவர் வருமானவரித்துறைக்கு பணப்பட்டு வாடாவை இரகசியமாக போட்டுக் கொடுக்க, அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் நுழைந்து பணம், பணம் கொடுத்த விபரங்கள், வேறு வருமான விபரங்கள் என அனைத்தையும் மொத்தமாக அள்ளினார்கள். வருமான வரித்துறையினர் சோதனைக்கு வந்த சமயத்தில், விஜயபாஸ்கரின் கார் சாரதி ஆவணங்களை எடுத்துக்கொண்டு ஓடி, மதிலிற்கு வெளியில் எறிய அதை உதவியாளர் ஒருவர் எடுத்துக்கொண்டு ஓடிய சுவாரஸ்ய சம்பவமும் நடந்தது. தினகரனிற்கு ஆதரவாக பிரசாரம் செய்ய, நடிகர் சரத்குமாரிற்கு பணம் கொடுத்த ஆவணங்களும் சிக்கின. இதன் தொடர்ச்சியாக சரத்குமார் வீட்டில் சோதனை நடந்தது. ஆர்கே நகர தேர்தலும் தள்ளிவைக்கப்பட்டது.

அமைச்சர் விஜயபாஸ்கர் வருமானவரித் துறையின் விசாரணை வளையத்திற்குள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார். அனுபவமற்ற விஜயபாஸ்கரிடம் ஆர்கே நகர் தேர்தலை கவனிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டதால்தான் இந்த அவமானம்நிகழ்ந்ததென குமுறியகட்சியின் மூத்தஅமைச்சர்கள், விஜயபாஸ்கரை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டு மெனவலியுறுத்தஆரம்பித்துள்ளனர். விஜய பாஸ்கரைநீக்கும்படி மத்திய அரசும்அதிமுக தலைமைக்கு தகவல் கொடுத்துள்ளது. மக்களவை துணைசபாநாயகர் தம்பித்து ரையினூடாக இந்த தகவல் பரிமாறப் பட்டுள்ளது. 'கட்சியும் ஆட்சியும் நீடிக்க வேண்டுமென்றால் சசிகலா குடும்பத்தை வெளியேற்றிவிட்டு, பன்னீர் அணியுடன் இணையுங்கள்' என்ற தகவலை, தினகர னிடம் நேரடியாகவே அவர் சொல்லியுள் ளார். எனினும், 'எனக்கு ஆலோசனை சொல்ல வேண்டாம்' என தினகரன் எகிறியுள்ளார்.

இதேவேளை, முதல்வர் பழனிச்சாமி மூத்த அமைச்சர்களுடன் ஆலோசித்து, விஜயபாஸ்கரை நீக்கும் முடிவிற்கு வந்துள்ளார். எனினும், தனது விசுவாசியை நீக்க தினகரன் சம்மதிக்கவில்லை. இந்த புகைச்சல்கள் நீடித்துக் கொண்டிருக்க, கடந்த சித்திரை புத்தாண்டு தினத்தில் தினகரன் வீட்டில் அமைச்சர்களுடனான கலந்துரையாடல் நடந்தது. வழக்கத்திற்கு மாறாக அமைச்சர்கள் காரசாரமாக தினகர னுடன் மோதியுள்ளனர். அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி ஆகியோர் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதையடுத்து முதல்வர் பழனிச்சாமி யுடன் மூத்த அமைச்சர்கள் ஆலோசனை நடத்தி சசிகலா குடும்பத்தை கட்சியிலிருந்து அகற்றலாமென்ற முடிவிற்கு வந்துள்ளனர். சசிகலா குடும்பத்திடமிருந்து கட்சியை மீட்பதுதான் பன்னீர் அணியின் கோரிக்கையும், அதனால் அவர்களுடனும் இணைந்து கட்சியின் சின்னத்தை மீட்கலாம் என்ற யோசனையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உடனடியாகவே பன்னீர் அணியுடன் அவர்கள் பேச்சை நடத்தியுள்ளனர். சசிகலா குடும்பம் நீக்கப்பட்டால் இணைந்து கொள்வதாக பன்னீர் அணியும் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

பழனிச்சாமி முதல்வராக தொடர்வது. பன்னீருக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்குவது, ஏழுபேர் கொண்ட குழுவை அமைத்து கட்சியின் முக்கிய தீர்மானங்களை எடுப்பது உள்ளிட்ட சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. இணைவு, யாருக்கு எந்த பதவி போன்றவற்றை முடிவு செய்ய இரண்டு தரப்பிலும் தலா ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

முன்னர் சசிகலாவை கிடுக்குப்பிடி பிடித்த மத்திய அரசு, இப்போது தினகரனை இரும்பு வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளது. இதனால்தான் தேர்தல் ஆணையகத்துக்கு தினகரன் லஞ்சம் கொடுக்க முனைந்ததையும் வளைத்துப்பிடித்துள்ளது. ஏற்கனவே தினகரனிற்கு நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன. இங்கிலாந்தின் பார்கிலே வங்கியில் மோசடியாக பணம்வைப்பிலிட்ட வழக்கில் அபராதமாக 28 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதனை தினகரன் இன்னும் செலுத்தவில்லை. இதனால் அவர் திவாலானவர் என அறிவிக்க கோரி அமலாக்கதுறை வழக்கு தொடர்ந்துள்ளது. அப்படி அறிவித்தால் அவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது. இப்படி தினகரனை சுற்றி ஏகப்பட்ட பொறிகள் சூழந்து வருகின்றன. இதிலிருந்து அவர் தப்பிப்பது மிககடினமானது.

இதையெல்லாம் நன்றாக உணர்ந்து தான் அதிமுக (அம்மா) கட்சியிலிருந்து தினகரனை முழுமையாக கழற்றிவிட துணிந்து முடிவெடுத்துள்ளனர் முதலமைச் சரும், அமைச்சர்களும். தினகரன் குடும் பத்தைகட்சியைவிட்டுமுழுமையாகஒதுக்கி வைப்பதென அமைச்சர்கள் பலர் கூட்டாக அறிவித்துள்ளனர். கட்சியின் பெரும்பாலான அமைச்சர்கள், எம்.எல்.ஏக் களின் ஆதரவுடன் இந்த அறிவிப்பு உத்தி யோகபூர்வமாக வரலாம். இப்போதைய நிலையில் தினகரனிற்கு ஆதரவாக கட்சிக்குள் இருப்பவர்கள் சிலர்தான். ஆனால் தன்னிடமுள்ள சில எம்.எல்.ஏக் களின் உதவியுடன் ஆட்சியை கவிழ்க்கவும் முயலலாம். எப்படியோ, அவரது அஸ்த மனம் அண்மித்து வருவதை போல்தான் தெரிகிறது.

போராசை பெரு நட்டமென சிறியவர் களிற்கு புரிய வைக்க பல கற்பனை கதைகள் சொல்வார்கள். இனி சசிகலா குடும்பத்தின் கதையை சொன்னாலும் ஆச்சரியப்பட முடியாது.



**சசிகலாவை கிடுக்குப்பிடி பிடித்த மத்திய அரசு, இப்போது தினகரனை இரும்பு வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளது. இதனால்தான் தேர்தல் ஆணையகத்துக்கு தினகரன் லஞ்சம் கொடுக்க முனைந்ததையும் வளைத்துப்பிடித்துள்ளது.**

# உள்ளூர் ரியூசன் வாத்தியாரிடம் மைத்திரி படிக்க வேண்டிய பாடம்

அன்ரனி பாலசிங்கம்



இலங்கையர்களிற்கு ஒரு குணம் உள்ளது. அவர்களாக எதையும் செய்ய மாட்டார்கள். மேய்ப்பதற்கு யாராவது வேண்டும். பிரம்புடன் நின்று அதட்டுபவர்கள்தான் இலங்கையர்களின் ஹீரோக்கள். இந்த மனநிலை இல்லா விட்டால் நமது பாடசாலைகள், வைத்திய சாலைகள், அரச அலுவலகங்களின் இயல்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

வைத்தியசாலையை பாருங்கள். நோயா ளிகள் மீது எரிந்து விழுந்து, விரட்டி யடித்தபடியே இருப்பார்கள் தாதிகளும், கீழ்மட்ட உத்தியோகத்தர்களும். அவர்களை விரட்டியடித்தபடியிருப்பார்கள் அதி காரிகள். வைத்தியர்கள் அவர்களை விரட்டிக் கொண்டிருப்பார்கள். கிராமத்து தாய் ஒருவர் "டொக்ரர் ஐயா" விடம் கதைக்கவே பயந்து, சப்தநாடியும் ஒடுங்கி யபடிதான் சிகிச்சைபெற்று வருவார். அரச வைத்தியசாலைகளிற்கு போகும் நோயாளிகளில் பாதிக்கும் மேலானவர் களிற்கு தமக்கு என்ன நோய், அதற்கு காரணம் என்ன, என்னென்ன மருந்துகள் தந்தார்கள், அவற்றின் பக்கவிளைவுகள் என்ன என்பது தெரியாது. "ஆஸ்பத்திரியில பிழையாகவா தந்திருப்பினம்" என சமாதானப்பட்டு கொள்வார்கள்.

அரச அலுவலகங்களை பாருங்கள். நமக்கு சேவை செய்ய, நமது வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர்கள்தான் அங்கு உட்கார்ந்திருக்கிறார்கள் என எத்தனை பேருக்கு தெரியும். காவலாளி வந்து மேய்த்தால்தான் நம்மவர்கள் மேய்வார்கள். காவலாளி இல்லாவிட்டால், அலுவலர்கள் எரிந்து விழாவிட்டால் இலங்கையர்கள் ஒழுங்காக சென்று சேவைபெறமாட்டார்கள் என்பது இன்று மாறி, எரிந்து விழுபவர்கள், அதட்டுபவர்கள் இல்லையென்றால் அது அலுவலகமாக என்ற குழப்பம் வந்துவிடுகிறது.

அதிலும், நமது தமிழர்கள் ஒருபடி மேலே. அடியாது மாடு படியாது என ஒரு மூத்தோர் மொழியை வேறு வைத்திருக்கிறான். அவனிற்கு பிரம்புடன் ஒருவர் இல்லாவிட்டால் எதுவும் ஆகாது.

கொல்லப்பட்ட ரஜினி திரணகம ஒருமுறை சொன்னார் ஆயுதம் தூக்கிய இளைஞர்களின் வன்முறை நமது சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளிலும் பொதிந்துள்ள வன்முறையின் நீட்சிதான் என. அவை சத்திய வார்த்தைகள்.

பிரம்பில்லாதவர் வாத்தியாரே இல்லை யென்றுதான் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். பத்து வருடங்களின் முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ள எனது ஊரில், நான்கைந்து தனியார் கல்வி நிறுவனங்கள் இருந்தன. இதைவிட புதிதாக ஒருவரும் ஆரம்பித்தார். ஏற்கனவே இருப்பவையுடன் இவர் போட்டியிட்ட விதம் புதிது. சாதாரணதரம் வரையிலான கல்வி நிறுவனம் அது. மாணவர்களை நன்றாக அடித்தார். வீதியில் குழப்படி விட்டாலும் அடி. அடுத்த ஐந்து வருடத்தில் அவர்தான் எமது பிரதேசத்தில் அவர் மட்டும்தான் தனியார் கல்வி நிறுவனம் நடத்தினார். அவரிடம் அனுப்பினால்தான் பிள்ளைகளை சரியாக வளர்க்கலாம் என பெற்றோர் அனுப்ப, மற்றவர்கள் தனது கல்வி நிலையங்களை பூட்டிவிட்டு போக வேண்டியதாகிவிட்டது.

இதேபோல, நமது சமூகத்தில் ஒரு பகுதியினர் நினைக்கிறார்கள் "மகிந்ததான் ஆம்பிள. ஜனாதிபதிக்கு சரியான ஆள். ஒரு விசயம் என்றால் சுண்டினால் சரி. இந்த மைத்திரியும் இருக்கே ஸப்பா" என பெருமூச்சு விடுகிறார்கள். மகிந்த என்றால் சீனா தொடக்கம் வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள், கடைநிலை ஊழியர்கள் அனைவரையும் வரிசையாக நிற்பாட்டி, "இந்த வீதியை, அத்தனை நாளில் முடிக்க வேணும்" என உத்தரவிடுவார். ஊழியர்களை சரியாக வேலை வாங்குவார். அதனால் அபிவிருத்திகள் அந்த மாதிரி நடந்தன என நினைக்கிறார்கள்.

இவர்களின் நினைப்பின்படி மைத்திரி வேலைக்காக மாட்டார். மைத்திரி யாரையும் மிரட்டி கதைப்பதில்லை. வரும்போது பிரமாண்ட பாதுகாப்பு பிரமைகள் கிடையாது. இதையெல்லாம் பலவீனமாக பார்க்கிறார்கள். "மகிந்த இருந்தால் கட்சிக்குள் குழப்பம் இருக்குமா? இரண்டுபேரை வெள்ளைவானில தூக்கி எல்லாரையும் சத்தமில்லாமல் இருத்தியிருப்பார்". நமது மனநிலை இப்படித்தான் இருக்கிறது.

நம்மை பொறுத்தவரை பிரம்புடன் இருப்பவர், உருட்டி மிரட்டுபவர்தான் வழிநடத்த தகுதியானவர் என நம்புகிறோம்.

பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, வடக்கு ஆளுன ராக இருந்த சந்திரசிறி எல்லோரும் அரச அலுவலர்களை 'இருத்தி' எழுப்பி னார்கள். அவர்களுடன் பரபரப்பாக பணியாற்றிய அலுவலர்கள் கடந்த இரண்டு வருடங்களில் என்ன செய்கிறார்கள் என்பது ஊரறிந்தது.

மக்களிடம் இந்த சிந்தனைக் குறைபாடு இருக்கும்வரை அரசசேவையை பலப்படுத்த முடியாது. வைத்தியசாலை தரப்பு நோயாளர்களுடன் அன்பாக நடக்காததுதான் தமிழ் பகுதிகளிலுள்ள அரசவைத்தியசாலைகளில் உள்ள பிரதான பிரச்சனை. தமது உரிமைகள், கடமைகளை மக்கள் புரிந்துகொள்ளும்வரை இதில் மாற்றம் ஏற்படுத்த முடியாது. வைத்திய சாலையிலுள்ளவர்களிற்கு நோயாளர் களுடன் அன்பாக நடப்பது பற்றிய அறிவை படிப்படியாக ஏற்படுத்தினாலும், மக்களின் இயல்பில் மாற்றம் ஏற்படாத பட்சத்தில் அது பலனில்லாத நடவடிக்கை.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்தவாரம் தமிழ்தேசிய கூட்டமைப் பிற்கும் பாதுகாப்பு செயலாளர் மற்றும் இராணுவ அதிகாரிகளிற்குமிடையில் சந்திப்பு நடந்தது. அதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரியுடன் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் பேச்சு நடத்தியிருந்தனர். நிலவிடுவிப்பில் தனது உத்தரவையே இராணுவம் செயற்படுத்தவில்லை என குறைபட்டுக் கொண்ட மைத்திரி, இராணுவம்கூட்டமைப்பு பேச்சை ஏற்பாடு செய்துகொடுத்தார். இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவில் கூட்டங்கள் நடந்தன.

கூட்டமைப்புடனான சந்திப்பில், "சிவில் அதிகாரமே நிலங்களை வைத்திருப்பது, விடுவிப்பது பற்றி முடிவெடுக்க வேண்டும்" என இராணுவம் தெளிவாக கூறிவிட்டது. அதாவது நம்மூர் சனங்கள் மாதிரித்தான் இராணுவம். அவர்களிற்கு பிரம்புடன் ஒருவர் நின்று வழிநடத்த வேண்டும்.

அதிகார படிமுறையின்படி பார்த் தாலும், ஜனாதிபதிதான் இதற்கு உத்தர விட வேண்டும். இராணுவத்துடன் கூட்ட மைப்பினர் பேசுவது எவ்வளவு தூரம் பலனளிக்குமென தெரியவில்லை. இதுவரை இப்படியொரு நடைமுறை இருக்கவில்லை. மைத்திரிதான் இதிலும் முன்னோடி... உத்தரவிட வேண்டிய ஜனாதிபதி ஒதுங்கியிருந்துகொண்டு, இராணுவத்துடன் பேசச் சொல்லியிருக்கிறார். உத்தரவிடும் அதிகாரமுள்ள ஒருவர் சொல்லாமல் இராணுவம் நிலங்களை விடுமென எதிர்பார்க்கலாமா?

அதேவேளை, தான் உத்தரவிட்டும் இராணுவம் செயற்படுத்தவில்லையென்ற மைத்திரி மீண்டுமொருமுறை கூறவேண்டி வராதென்பதற்கு என்ன உத்தரவாதம்? ஏனெனில், அவர் பிரம்பை இன்னும் எடுக்கவில்லையே.

> "சிவில் அதிகாரமே நிலங்களை வைத்திருப்பது, விடுவிப்பது பற்றி முடிவெடுக்க வேண்டும்" என இராணுவம் தெளிவாக கூறிவிட்டது. அதாவது நம்மூர் சனங்கள் மாதிரித்தான் இராணுவம். அவர்களிற்கு பிரம்புடன் ஒருவர் நின்று வழிநடத்த வேண்டும்.



# அரசியல் + பணம் + அதிகாரிகளின் அசமந்தம்

## வவுனியாவை கலங்கவைக்கும் மாபியாகும்பல்

வன்னிமது

யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள் விட்டுச்சென்ற சொத்துக்களில் பெரும்பாலானவை அவர்கள் திரும்பி வந்தபோது இருக்கவில்லை. அவர்களின் வாழ்க்கை ஆதாரமான அந்த சொத்துகளே அவர்களை வாழவித்தவை. சொத்துக்களை இழந்தது, அந்த மக்களை வாழ்க்கை வட்டத்தின் ஆரம்பத்திற்கே கொண்டு சென்றது. சொத்து என்றதும் வீடு, நகை, நிலத்தைதான் நம்மவர்கள் கணக்கிடுகிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் விட வன்னி மக்களிற்கு இன்னொரு சொத்து தலையாயது.

**அது மாடு.**

இடம்பெயர்ந்த மக்கள் விட்டுச்சென்ற மாடுகள் கட்டாக்காலிகளாக திரிந்தன. மக்கள் வாழிடங்களிற்கு திரும்பிய பின்னரும் அவற்றை மீட்க முடியவில்லை. தெருவில் பெருந்தொகை கட்டாக்காலிகளாக திரிந்த மாடுகளை ஆங்காங்கே கண்டிருப்பீர்கள். இவற்றை குறிவைத்து ஒரு மாபியா கூட்டம் களமிறங்கியது.

கட்டாக்காலிகளாக திரிந்த மாடுகளை சாய்ந்து பட்டியாக அடைத்து வைத்து, பின்னர் வாகனங்களில் ஏற்றிச்சென்றது இந்த குழு. கொண்டு சென்ற மாடுகளை இறைச்சியாக்கி கொள்ளை இலாபம் சம்பாதிக்க ஆரம்பித்தனர். இதுதான் இன்று வவுனியாவை அச்சுறுத்தும் பிரச்சனையாகியுள்ளது.

வவுனியாவில் சர்ச்சையாக உருவெடுத்துள்ள மாட்டிறைச்சி வெட்டல் தொடர்பான சர்ச்சையும் இதனுடன் தொடர்பானதுதான். கள்ளமாடுகள் வெட்டப்படும் விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததையடுத்தே, அதனுடன் தொடர்புபட்டதாக கொல்களன் சர்ச்சையும் உருவெடுத்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 2015ம் ஆண்டு 64,580 மாடுகளும் 2016ம் ஆண்டு 68812 மாடுகளும் கால்நடை வைத்திய திணைக்களத்தின் பதிவிற்குள் உள்ளது. ஆனால் பதியப்படாமல் வவுனியா மாவட்டத்தில் பல மாடுகள் உள்ளன. இதற்கு கால்நடை வைத்திய அதிகாரிகள் போதாமை மற்றும் அலுவலகர்கள் போதாமையே காரணம். பொதுவாக மாடு பதியும்போது சான்றிதழ் மற்றும் மாட்டின் காதில் அடையாள பட்டி அடிக்கப்படும். இப்பட்டியில் மாவட்டம், மாகாணம், பட்டி இலக்கம் (உரிமையாளர் பெயர்), பட்டியில் எத்தனையாவது மாடு என்பன குறிக்கப்படும். அதன் அடிப்படையில் இம்மாடுகள் களவாடப்பட்டால் இவ்விலக்கத்தினை கொண்டு கண்டுபிடிக்க முடியும். ஆனால் காதில் பட்டி இல்லாத மாடுகளினை யாருடையது என்று உறுதிப்படுத்துவது கடினமானது.

கிராம சேவகரின் கையொப்பம் மற்றும் கால்நடை மருத்துவரின் மருத்துவ சான்று என்பன இருந்தால் மட்டுமே ஓர் இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு மாட்டினை நடாத்தி கொண்டு செல்ல முடியும். அதுவே வாகனத்தில் என்றால் பிரதேச செயலாளரின் அனுமதி மற்றும் வாகனத்தில் மாடுகளை கொண்டு செல்வதற்கான அனுமதி சான்று போன்ற பல சட்ட நடைமுறைகள் உள்ளன. இந்நடைமுறைகள் இருந்தும் சட்டவிரோத மாடு கடத்தல் செட்டிக்குளம், முல்லைத்தீவு, மல்லாவி, நெடுங்கேணி, சந்னாசிபரந்தன், சேமமடு, ஹொரவப்பொத்தானை ஊடாகவும் நடந்து கொண்டிருக்கிறது. மடு கடத்தலின் பின்னால் அரசியல் செல்வாக்கு உள்ளதால் இதை யாராலும் தடுக்க முடியவில்லை.

**தேங்காய் உடைத்து பாருங்கள்!**

2009ம் ஆண்டில் இருந்து இன்று வரை 1600 மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக அறுக்கப்பட்டுள்ளன. இன்னும் பெருமளவான மாடுகள் காணாமலே போய்விட்டன. மாடுகள் காணாமல் போனது பற்றி உரிமையாளர்கள் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் எந்த முன்னேற்றமும் இல்லை. அத்துடன் சில முறைப்பாடு செய்தவர்கள் இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது.

இது தவிர்ந்து செட்டிக்குளம், ஐங்கராவூர், அரபா நகர், சாளம்பைக்குளம் ஆகிய கிராமங்களில் இருந்து இரவு வேளைகளில் மாடுகள் களவாடப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் பொலிசார் மாடு களவு போனது தொடர்பாக எதுவித முறைப்பாடுகளும் இல்லை




என்கிறார்கள். முறைப்பாடு செய்த சிலர், தங்களது மாடுகளை கண்டு பிடித்து விட்டீர்களா என பொலிஸிடம் கேட்கும்போது, 'கோயிலில் தேங்காய் எடுத்து உடையுங்கள்' என்று வேடிக்கையாக பதிலளித்தனர் என்கிறார்கள். களவெடுத்தவர்கள் பற்றிய விபரங்களுடன் முறைப்பாடு செய்தவர்கள் இனம்தெரியாதவர்களால் கடுமையாக தாக்கப்பட்டுமுள்ளனர்.

**மாட்டு சர்ச்சை**


கடந்த 23.02.2017 அன்று வவுனியா நகர கொல்களத்தில் 40 கள்ள மாடுகள் வெட்டப்பட்டது என்று பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி குற்றம் சாட்டினார். எனினும் அதனை நிரூபிக்க முடியவில்லை. இந்த விவகாரத்தில் சுகாதார வைத்திய அதிகாரி தரப்பிற்கும், பொதுசுகாதார பரிசோதகர் தரப்பிற்குமிடையில் சர்ச்சை ஏற்பட்டு, இப்பொழுது விஸ்பரூபம் எடுத்துள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி தமது கடமைக்குள் தேவையற்ற அத்துமீறலை நிகழ்த்துகிறார் என சுகாதார பரிசோதகர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். இந்த சர்ச்சைகளின் தொடர்ச்சியாக சுகாதார பரிசோதகர் இடமாற்றமும் நடந்தது. அரசியல் செல்வாக்கே இடமாற்றத்திற்கு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



உ.சரஸ்வதி
சிதம்பரபுரம்

எனது மகன் 2008 இல் காணாமல் போய்விட்டார். வாழ்வாதாரத்திற்கென கச்சேரியினால் 64,000 ரூபாவிற்கு இரண்டு மாடுகள் தந்தார்கள். ஒரு மாதத்திற்கு முன்னர் இரண்டு மாடுகளையும் மேய்ச்சலுக்கு கட்டினேன். ஒரு வைத்தியாலத்தில் இரண்டும் காணாமல் போய்விட்டன. பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன். ஒரு முடிவும் இல்லை. மகனும் காணாமல் போய், வாழ்வாதாரத்திற்கு தந்த மாடுகளும் காணாமல் போய்விட்டன.



ந.தேவகிருஸ்ணன்
சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு

மாடு கடத்தலின் பின்னணியில் மாபியா கும்பல் ஒன்று செயற்படுகின்றது. எதன் மூலம், யாரால், எந்த வழியால் வவுனியாவிற்கும், கொல்களத்திற்கும் மாடுகள் கொண்டுவரப்படுகிறதென்பது அதிகாரிகளிற்கு தெரியும். இது கால்நடை வைத்திய அதிகாரிக்கும் தெரியும். யார் சட்டவிரோதமாக பட்டி வைத்துள்ளனர், யாருக்கு மாடு கொண்டு செல்கிறார்கள் என்பதும் அதிகாரிகளுக்கு தெரியும். இது இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரிந்தாலும் சம்மந்தப்பட்டவர்களிடம் கடமைப்பட்டிருப்பதால் இது தொடர்பாக குரல் கொடுக்க தயங்குகின்றனர்.




# இண்டர்நெட் இல்லாமலும் இயங்கும் இன்ஸ்டாகிராம்

பேஸ்புக் டெவலப்பர் கொன்ஃபரன்ஸ் நிகழ்ச்சியில் இன்ஸ்டகிராம் அண்ட்ரோய்ட் செயலிக்கான ஓஃப்லைன் வசதிகள் அறிவிக்கப் பட்டுள்ளது. இதைக் கொண்டு ஓஃப்லைனில் பிரவுசிங் மற்றும் ஸ்கிராலிங் உள்ளிட்டவற்றை மேற்கொள்ள முடியும், இண்டர்நெட் இணைப்பு இல்லாத பகுதிகளிலும் செயலியை பயன்படுத்த இந்த வசதி பயனுள்ளதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இஸ்டாகிராம் செயலியை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இந்த செயலியில் ஓஃப்லைன் மோட் வழங்க முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்ஸ்டாகிராம் ஓஃப்லைன் மோட் பயன்படுத்தும் போது ஏற்கனவே டவுன்லோட் செய்யப்பட்ட ஃபீட்களுக்கு கொமெண்ட், லைக் மற்றும் போஸ்ட்களை சேவ் செய்து கொள்ள முடியும். மேலும் பயனாளிகளை அன்ஃபொலோவும் செய்ய முடியும் என இன்ஸ்டாகிராம் பொறியாளர் ஹென்றி தெரிவித்துள்ளார்.

ஓஃப்லைன் மோடில் மேற்கொள்ளப்பட்டவை, சாதனம் இண்டர்நெட்டுடன் இணைக்கப்பட்டதும் பின்னணியில் செயல்படுத்தப்படும். மற்ற அம்சங்களை போன்று இன்ஸ்டாகிராம் ஸ்டோரீஸ் வசதியும் ஓஃப்லைனில் வழங்கப்படுமா என்பது குறித்து எவ்வித தகவலும் இல்லை. எனினும் இந்த வசதி விரைவில் வழங்கப்படும் என கூறப்படு கின்றது.

இன்ஸ்டாகிராம் செயலியில் வழங்கப்பட்டுள்ள இது போன்ற வசதிகள் சீரற்ற இண்டர்நெட் இணைப்பு கொண்டுள்ள வளர்ந்து வரும் நாடு களிலும் செயலியின் பயனாளிகளின் எண்ணிக் கையை வெகுவாக அதிகரிக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது. இத்துடன் இன்ஸ்டாகிராம் செயலியின் லைட் பதிப்பு வெளியிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பரவலாக இருந்து வருகிறது.

# வட்ஸ்அப் வசதிகள்

இனி வட்ஸ்அப்பில் சாதாரண டெக்ஸ் மட்டுமின்றி சிறப்பு டெக்ஸ்ட்களான போல்ட், இட்டாலிக், அடிக்கோடு போன்றவைகளையும் பயன்படுத்தும் வசதியை அளித்துள்ளது. இந்த புதிய வசதி வட்ஸ்அப் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த வசதியின்படி நீங்கள் டெக்ஸ்ட்களுக்கு இடையே ஒரு புதிய கோட்ஐ இணைக்க விரும்பினால் அதாவது (*)என்பதை இணைக்க விரும்பினால் இனி மிக எளிது. ஆனால் அதே நேரத்தில் வட்ஸ்அப் பயனாளிகள் மனதில் வைத்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவேனில் லேட்டஸ் பீட்டா 2.17.148 வட்ஸ்அப் வெர்ஷனில் மட்டுமே இந்த சிறப்பு வசதி உண்டு.

வட்ஸ்அப் மேசேஜ் பொக்ஸில் நீங்கள் டைப் செய்ய வேண்டிய வார்த்தைகளை முதலில் முழுவதுமாக டைப் செய்து முடிக்க




வேண்டும். பின்னர் அந்த வார்த்தைகளின் மேல் கையை வைத்து ஒரு லோங் பிரஸ் செய்ய, உடனே சிறப்பு குறியீடுகள் தோன்றும். இந்த சிறப்பு குறியீடுகளில் நீங்கள் எதை தேர்வு செய்ய வேண்டுமோ அதை தேர்வு செய்து பின்னர் கொப்பி செய்து தேவையான இடத்தில் பேஸ்ட் செய்தால் உங்கள் வார்த்தைகள் தற்போது சிறப்பு குறியீடுகளுடன் கிடைக்கும்.

அதேபோல் மேலே உள்ள மூன்று வெர்டிகல் டொட் லைனை க்ளிக் செய்தால் உங்களுக்கு போல்ட், இட்டாலிக், உள்பட நான்கு ஒப்சன்கள் கிடைக்கும். இதில் எது தேவையை அதை க்ளிக் செய்தால் நீங்கள் டைப் செய்த வார்த்தைகள் முழுவதும் நீங்கள் விரும்பும் வகையில் மாறிவிடும்.





காரணம், தமிழ்தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் இதற்கு பின்னணியில் இருந்தார் என குமுறும் சுகாதார பரிசோதகர்கள், இதற்கு பின்னணியில் ஒரு சம்பவம் இருப்பதாக கூறுகிறார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் பிரமாண்ட மருத்துவமனை ஒன்றை கட்ட முயன்றிருக்கிறார். நோயாளர் தங்கியிருந்து சிகிச்சைபெறும் விடுதியும் அமைக்கதிட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அங்கு முறையான கழிவகற்றல் வசதிகள் இல்லையென கூறி வவுனியா நகரசபை செயலாளர் அனுமதியளிக்கவில்லை. அப்போது வவுனியா நகரசபை செயலாளரிற்கு எதிராக அந்த எம்.பி குத்திமுறிந்த கதை ஊரறிந்தது. பின்னர் நகரசபை செயலாளர் இடமாற்றப்பட்டார். அந்த சமயத்தில் பொதுசுகாதார பரிசோதகராக இருந்தவரே இப்பொழுது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்!

### கொழும்பிற்கு செல்லும் இறைச்சி


வவுனியா நகரில் நான்கு இறைச்சிக்கடை உள்ளது. இந்த நான்கு கடைகள் மற்றும் கொழும்பிற்கான இறைச்சி சோயா வீதியில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்த மான கொல்களத்தில் வைத்தே வெட்டப் படுகிறது. இங்கு மாடுகளை கொண்டு வருவதற்கு தரகர்கள் உள்ளனர். கிராம சேவகரின் அனுமதி, மாட்டு சான்றிதழ் பார்த்தே உள்ளே அனுமதிக்கப்படுவதாக சொல்கிறார்கள். அத்துடன் அங்குள்ள தொழுவத்தில் 24 மணித்தியாலம் மட்டுமே மாடுகள் கட்டப்படுகின்றன. பின்னர் நகரசபை பொது சுகாதார பரிசோதகரினால் மாடுகள் பரிசோதிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்படுகிறது. வெட்டப்பட்ட பின்னரும் பொதுசுகாதார பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்ட பின்னரே வெளியிடங்களிற்கு கொண்டு செல்ல முடியும்.

இங்கு வெட்டப்படுவதில் 300 கிலோ வவுனியா நகரத்தின் தேவைக்கு பயன்படு கிறது. அதாவது 4 அல்லது 5 மாடுகள். கொழும்பிற்கு கொண்டு செல்வதாயின் 40 மாடுகளும் வெட்டப்படுகின்றன. கொழும்பிற்கு கொண்டு செல்லப்படும் இறைச்சி அங்குள்ள கொல்களம் ஒன்றிற்கு கொண்டு செல்லப்பட்டு பொதுசுகாதார பரிசோதகர், கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோரால் பரிசோதிக்கப்படுகிறது. இறைச்சியுடன் கொண்டுசெல்லப்படும் மாட்டு தலைகள் வெட்டிப் பரிசோதிக்கப் படுகின்றன. இதன்பின்னரே கடைகளிற்கு அனுப்பபடுகின்றன.

### திருந்துங்க பாஸ்!

வவுனியா சட்டவிரோத மாட்டிறைச்சி வலையமைப்பு பிரமாண்டமானது. சட்டபூர்வ வழிகளில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி இந்த சட்டவிரோத வலை யமைப்பு இயங்குகிறது. இதன் பின்ன ணியிலும் பெரிய அரசியல் செல்வாக்கு உள்ளதென்கிறார்கள்.

மாடு கடத்தலிலும் அரசியல் செல் வாக்கு, மாடுகளை பரிசோதிக்கும் அதிகாரி களின் இடமாற்றத்திலும் அரசியல் தில்லாலங்கடி என இடியப்ப சிக்கலில் உள்ளது இந்த விவகாரம். வன்னி மாடுகளை காப்பாற்றுவதெனில் இங்கிருந்து மாடுகளை, இறைச்சியை பிற இடங்களிற்கு கொண்டு செல்வதை தடுக்கும் சட்டம் அவசியம். வடமாகாணசபையே இதை கையிலெடுக்க வேண்டும். அடுத்து, தனிப்பட்ட நலன்களிற்காக தில்லாலங்கடி வேலைகளில் ஈடுபடுவதை அரசியல் வாதிகள் நிறுத்தி, அதிகாரிகளின் சுயாதீன செயற்பாட்டை உறுதிசெய்ய வேண்டும்.



# ஊர்மிளாவின் காதலை ஏற்காத பிரபாகரன்

## சித்தார்த்தன் எம்.பி எழுதும் அனுபவங்கள்

சொல்ல மறந்த கதைகள் 07



தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான வி.தர்மலிங்கத்தின் புதல்வர் சித்தார்த்தன். அரசியல் பாரம்பரியம்மிக்க குடும்பத்திலிருந்து வந்ததால், தமிழர் அரசியல் பயணத்துடனேயே சித்தார்த்தனும் இணைந்து பயணித்தார். அதிர்ந்து பேசாத, மென்மையான அணுகுமுறையை கொண்ட சித்தார்த்தனின் அரசியல் வாழ்க்கை வித்தியாசமானது. நீண்ட அனுபவச்செழுமையுள்ள சித்தார்த்தன் தனது அனுபவங்களை எழுதுகிறார்.

**மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.**

என்னுடைய அப்பாவின் (முன்னாள் எம்.பி தர்மலிங்கம்) தாக்கம்தான் என்னையும் அரசியலுக்கு கொண்டு வந்தது. அவரை அப்பு என்றுதான் சொல்வேன். தமிழரசுக்கட்சி ஆதரவாளனாக அகிம்சை வழியில் ஆரம்பித்த அரசியல் பயணத்தை, 57 வருடங்களின் பின் இன்று மீண்டும் திரும்பிப்பார்த்து, சில சம்பவங்களை எழுதுகிறேன்.

1961ம் ஆண்டு சத்தியக்கிரகம் நடந்த போது எனக்கு பன்னிரண்டு வயது. அதில் கலந்து கொண்டதுதான் முதல் போராட்டம். பன்னிரண்டு வயதிலேயே அரசியல்ரீதியான தெளிவுடன் அதில் கலந்துகொண்டேன் என பொய் சொல்ல வில்லை. அப்புவுடன் நானும் அதில் கலந்து கொண்டேன். அந்தக்காலத்தில் நடந்த பல ஊர்வலங்கள், போராட்டங்களில் அப்புவுடன் கலந்துகொள்வேன். மருதனார் மடம் சந்தியில் இருந்து கச்சேரி வரை இரவு நடந்த தீப்பந்த ஊர்வலம், மாட்டு வண்டி ஊர்வலம் என சிலவற்றை உதாரணமாக சொல்லலாம். இப்படி அப்புவின் பின்னால் சென்று, மெல்லமெல்ல தீவிர அரசியலிற்குள் வந்தடைந்தேன்.

1970 வரையும் எனது அரசியல் என்பது அப்புவின் அரசியல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள்தான். 1970களின் பின்னர் பல்கலைகழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறை, தமிழ் தலைவர்களின் சாத்வீக போராட்டங்களிற்கு எதிரான கூட்டு அரசின் தீவிரமான அடக்குமுறைகள் என்பன தமிழர் அரசியலை மாற்றியது. அதுவரை சாத்வீக போராட்டங்களாக இருந்த தமிழர் அரசியல், தீவிர எண்ணமுடையதாக மாறத் தொடங்கியது. இளைஞர்கள் பலர் இதில் முக்கிய பாத்திரம் வகித்தனர். பத்மநாபா, வரதராஜபெருமாள், முத்துகுமாரசுவாமி, அளவெட்டி ஆனந்தன், இறைகுமாரன் போன்ற பல செயற்பாட்டாளர்களின் அறிமுகமும் தொடர்பும் ஏற்பட, அவர்களுடன் நானும் பயணிக்க தொடங்கினேன்.

மாவைசேனாதிராஜாவால் ஒழுங்கமைக் கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையால் நடத்தப்பட்ட சாத்வீகபோராட்டங்களில் நானும் பங்குபற்றினேன். ஆயுத நடவடிக் கைகளை முதன்முதல் பொன்.சிவகுமாரன் தான் ஆரம்பித்தார். அவருக்கும் எனக்கும் இடையில் நெருக்கமான நட்பிருந்தது. தலைமறைவாக இருக்க பாதுகாப்பான இடங்களை ஏற்படுத்துவது, இருப்பிடங் களை மாற்றுவது, ஆயுதங்களை மாற்றுவது என சிவகுமாரனுக்கும் சில நண்பர்களிற்கும் உதவிகள் செய்தேன். அப்பு பிரபல்யமான அரசியல்வாதியாக இருந்தது எனக்கு வாய்ப்பாக இருந்தது. அவரது வாகனத்திலேயே இதை செய்வேன். சிவகுமாரனிற்கு அப்போது உதவி செய்தவர்கள் மிகச்சிலர்தான். தங்குவதற்கு இடமில்லாமல் மாந்தோப்புகளிற்குள் எல்லாம் படுத்திருந்தார்.

சிவகுமாரன் சிறிய குழுவாக இயங்கி னார். அந்தகாலகட்டத்தில் குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் ஒரு குழு வாகசெயற்பட்டார்கள். புதிய தமிழ் புலிகள் என்ற பெயரில் ஒரு குழுவும் செயற்பட்டது. புதிய தமிழ் புலிகளிற்கு செட்டி தனபாலசிங்கம் தலைவராக இருந்தார். அப்போது தம்பி (பிரபாகரன்) அதில் முக்கியமானவராக இருந்தார். அந்த அமைப் புடனும் நட்புறவில் இருந்தேன். பல சந்தர்ப் பங்களில் உதவிகளும் செய்திருக்கிறேன்.

செட்டி தனபாலசிங்கமும் வேறு சிலதமிழ் இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு, அனுராதபுரத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சமயத்தில், செட்டி உள்ளிட்ட நால்வர் தப்பித்து வந்தார்கள். செட்டியும் இன்னொருவரும் என்னிடம் உதவிகேட்டு வந்தனர். அவர்கள் மறைந்து பாதுகாப்பாக தங்கியிருக்க ஏற்பாடுகள் செய்திருந்தேன்.

பின்னர் 1975 ஆம் ஆண்டு, செட்டியை சுன்னாகம் பொலிஸ் பகுதியில் வைத்து பிடித்துவிட்டனர். நான்தான் தங்குமிட ஏற்பாடுகளை செய்ததாக செட்டி விசா ரணையில் சொல்லிவிட்டார். அப்பொழுது இன்ஸ்பெக்டர் ஜீவரட்ணம் (பின்னாளில் பிரதிப்பொலிஸ்மா அதிபராக இருந்து ஓய்வுபெற்று மரணித்தவர்) சுன் னாகம் பொலிஸ்நிலையத்தில் பொறுப்பதி காரியாக இருந்தார். இந்தபகுதியில் ஒரு பிரபல்ய தலைவராக இருந்தவர் என்ற அடிப்படையில் அப்புவிடம் இன்ஸ்பெக்டர் மரியாதை வைத்திருந்தார். இன்ஸ்பெக்டர் அப்புவிடம் வந்து சொன்னார், "இந்த விவகாரத்தில் உங்கள் மகனும் தொடர்புபட்டதாக செட்டி விசா ரணையில் கூறியுள்ளார். நிலைமைசிக்கலாக உள்ளது. நான் இந்த விசாரணை அறிக் கையை கொழும்பிற்கு அனுப்புவதற்கு முன்னர் மகனை எங்காவது அனுப்பி விடுங்கள்" என. அத்துடன் கொழும்பிற்கு அறிக்கையை அனுப்புவதையும் தாமதப் படுத்தினார். இதற்குள் என்னை குடும்பத் தினர் இலண்டனிற்கு அனுப்பிவிட்டனர்.

இந்தக்காலப்பகுதியில் புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயர் மாற்றம் பெற்று ஒரு அமைப்பு வடிவம் எடுத்தது. அதன் முதல் தலைவராக உமா மகேஸ்வரன் நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் அவர் நிலஅளவையாளராக செயற்பட்டதுடன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்பு கிளை தலைவராகவும் இருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகளாக இயங்கத் தொடங்கிய பின், இந்த அமைப்பிற்காக இலண்டனில் ஒரு கிளைய அமைத்தோம். கிருஸ்ணன், குகன், நான் ஆகிய மூவரும் இதை ஆரம்பித்தோம். அதுதான் விடுதலைப் புலிகளின் முதலாவது சர்வதேசகிளை. இந்த சமயத்தில் அன்ரன் பாலசிங்கம் இலண்டனில்இருந்தார். அவரில்எங்களிற்கு ஈர்ப்பிருந்தது. அதேபோல ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பும் அவரை தம்முடன் இணைக்க முயன்றது. அந்த அமைப்பின் உத்தமன் அடிக்கடி பாலா அண்ணையுடன் பேசினார். நாங்களும் விடாமல் அவரை சந்தித்து பேசினோம். இறுதியில் அவர் எங்களுடன் (விடுதலைப்புலிகளுடன்) இணைந்து செயற்பட தொடங்கினார்.

புலிகள் முதன்முதலில் பத்து கொலை களிற்கு உரிமைகோரி வீரகேசரிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தனர். பாராளுமன்றத்தில் இருந்த எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் வைத்தே அந்த கடிதத்தை ஊர்மிளா தட்டச்சு செய்தார். அவர் விடுதலைப்புலிகளின் தீவிரமாக செயற்பாட்டாளர்.

இரத்மலானையில் அவ்ரோ விமானம் தகர்க்கப்பட்டது. இதை வெளிநாட்டில் இருந்து உரிமைகோரினால், அமைப்பை பற்றிய பிரமாண்ட அபிப்பிராயத்தை உருவாக்கலாம் என்பதற்காக இலண்டனில் இருந்து "விடுதலைப்புலிகள்தான் அதை செய்தார்கள்" என உரிமைகோரினோம்.

1980ம் ஆண்டு தம்பிக்கும் (பிரபாகரன்), உமாமகேஸ்வரனிற்கும் இடையில் மனக் கசப்பு ஏற்பட்டு பிரிவு ஏற்பட்டது. இதை சரிசெய்ய அப்போது இலண்டனிலிருந்த நானும், பாலசிங்கமும் ஒரு முயற்சி செய்தோம். நான் யாழ்ப்பாணம் வந்து தம்பியுடன் பேசி ஒற்றுமைப்படுத்த முயற்சித்தேன். தம்பியுடன் பேசியபோது, ஊர்மிளாவிற்கும் உமாமகேஸ்வரனிற்கும் இடையில் இருந்த காதல் விவகாரம் இயக்க நடைமுறையை மீறியதென்றார். அப்போது புலிகள் அமைப்பின் விதிகளில் ஒன்று, காதலிக்கவோ திருமணம் செய்யவோ கூடாதென்பது. காதலும், திருமணமும் மனிததேவைகள், இதை பிரச்சனையாக்காமல் விடலாம் என்ற என் அபிப்பி ராயத்தைதம்பியிடம்சொன்னேன். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. அந்த சமரச முயற்சி வெற்றிபெறவில்லை. அப்போது உமாமகேஸ்வரன் இந்தியாவில் இருந்தார். பாலசிங்கம் இந்தியா சென்று அவருடன் பேசினார். அதுவும் வெற்றியளிக்கவில்லை. உமாமகேஸ்வரனுடன் நான் பின்னர் பேசியபோது, ஊர்மிளாவுடன் காதல் விவகாரமே இல்லை, நல்ல இயக்க தோழி மட்டுமே என்றார்.


பின்னர் ஈரோஸ் அருளரும் ஒரு சமரச முயற்சி செய்தார். அதன்படி, விடுதலைப் புலிகள் என்ற பெயரை யாரும் பாவிப்ப தில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள். இதன்பின்னர்தான் புலிகள் அமைப்பை விட்டுவிட்டு,குட்டிமணி,தங்கத்துரையுடன் ரெலோ அமைப்பிடன் இணைந்து செயற் பட தொடங்கினார் பிரபாகரன். உமாமகேஸ்வரன் புளொட்டை ஆரம்பித்தார்.

ஒருநாள் தம்பி எனது இதே வீட்டிற்கு (யாழ்ப்பாணம் கந்தரோடையில் அமைந் துள்ளது) வந்தார். அவரிடம் ஒரு புது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ரிவோல்வர் இருந்தது. அதைஎடுத்துக்காட்டி "அண்ணை தமிழீழ கோரிக்கையை யார் கைவிட்டாலும் இதுதான் பதில் சொல்லும். அது நானாக இருந்தாலும் சரி, நீங்களாக இருந்தாலும் சரி" என்றார். வேறு தலைவர்கள் யாரும் செய்யாத இரண்டு விடயத்தை தம்பி செய்தார். நம்பிய கொள்கையை கடைசிவரை கைவிடவில்லை. முழு குடும்பத்தையும் அதற்காக பலிகொடுத்தார். இந்த இரண்டு விடயங்களும்தான் எனக்கு தம்பி மீதான மதிப்பை உயர்த்தியது.

**இந்தியா நினைத்திருந்தால் போரை நிறுத்தியிருக்க முடியும். இந்தியா தலையிட்டு யுத்தத்தை நிறுத்துமோ என்ற பயம் மகிந்த, கோத்தபாய ஆகிய இருவரிடமும் இருந்தது. தேர்தல் காலத்தில் கூட இந்தியா அந்த அழுத்தத்தை கொடுக்காததற்கு, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைவிட்டு இந்தியா தள்ளிச்சென்றதுதான் காரணம்.**



எனது அப்புவிற்கும் தம்பிக்குமிடையில் ஒருசர்ப்பிருந்தது. நான் புளொட் அமைப்பில் இணைந்து செயற்பட தொடங்கிய பின்னரும், தம்பி எனது வீட்டிற்கு அடிக்கடி வருவார். வந்து அப்பமும், பாலும் சாப்பிட்டுவிட்டு போவார்.

நான் இலண்டனில் பன்னாட்டு நிறுவனமொன்றில் உதவிக்கணக்காளராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். 1983 இல் அந்த பணியை விட்டுவிட்டு, முழுநேரமாக இயக்கப்பணியில் ஈடுபட தொடங்கினேன். இந்தகாலப்பகுதியில் வெளிநாடுகளில் தான் பணியாற்றினேன். அல்ஜீரியா, லெபனான், லிபியா போன்ற நாடுகளில் அதிக தொடர்புகளை வைத்திருந்தோம்.

உமாமகேஸ்வரன் முதலில் இந்தியாவிலிருந்து லெபனான் செல்லும்போது ஒரு சுவாரஸ்ய சம்பவம் நடந்தது. அப்போது சிரியாவிற்கு நேரடியாக செல்ல விசா எடுப்பது கடினம். அதனால் டெல்லியிலிருந்து லண்டன் செல்ல ரிக்கெற் எடுப்போம். ரான்ஸ்சிற் டமாஸ்கஸ். அங்கு இறங்கி, காசு கொடுக்க விசா அடித்து உள்ளே விடுவார்கள். லண்டனில் சிறினி என்பவர் இருந்தார். அவருக்கு சிரியா செல்ல விசா இருந்தது. அவர் இந்தியா வந்து, தனது பாஸ்போர்டை உமாவிடம் கொடுக்க, அதை பாவித்து உமா டமாஸ்கஸ் சென்றார். பின்னர் சிறினி உமாவின் பாஸ்போர்ட்டில் டமாஸ்கஸ் சென்று, தனது பாஸ்போர்டை வாங்கிக் கொண்டு இலண்டன் சென்றார். டமாஸ்கஸில் ரான்சிற்றில் காசுகொடுக்க உள்ளே விடுவார்கள் என்பதை உமாதான் கண்டுபிடித்தார். அப்போது இந்திய மக்களிடம் ஈழத்தமிழ் இயக்கங்களில் நிறைய அபிமானமிருந்தது. விமான நிலைய அதிகாரிகளும் எங்களை கண்டும்காணாமலும் விட்டுவிடுவதே, இவ்வளவு வாய்ப்புக்களை ஏற்படுத்தியது.

யசீர் அரபாத்தின் தலைமையில் இயங்கிய பற்றா அமைப்புத்தான் முதன்முறையாக தமிழ் ஆயுத இயங்கங்களிற்கு பயிற்சியளித்தது. இது 1977 இல் நடந்தது. ஈரோஸ் இயக்கத்தின் இரட்ணசபாபதியும், ராஜிசங்கரும் இதனை ஒழுங்கு செய்தனர். அப்போது இலண்டனில் இருந்த வரதராஜபெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் இருவரும் நேரடியாக அங்கு பயிற்சிக்கு வந்தனர். அப்போது புலிகளில் இருந்த உமாமகேஸ்வரன், பிரபாகரன் இருவரையும் பயிற்சிக்கு அழைத்தனர். உமாமகேஸ்வரனும், விச்சுவேஸ்வரனும் பயிற்சிக்கு சென்றனர்.

லெபனானில் பி.எவ்.எல்.பி அமைப்புடன் popular front for the liberation of palestine-லெபனானில் டொக்ரர் ஹபாஸின் தலைமையில் இயங்கியது) புளொட்டிற்கு தொடர்பு மகாஉத்தமன் மூலம் ஏற்பட்டு, லெபனானில் நூறுபேர் வரையில் அங்கு சென்று பயிற்சிபெற்றார்கள்.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் ஆலோசகராக இருந்த ஜி.பார்த்தசாரதியை 1983இல் இனக்கலவரத்தின் பின் சந்தித்தேன். எனது தந்தையாருக்கும் அவருக்குமிடையில் நெருங்கிய உறவிருந்ததன் காரணமாக, என்னுடனும் நல்ல உறவில் இருந்தார். சந்தித்த முதல்நாளிலேயே சொன்னார், "சித்தார்த்தன் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இந்தியா ஒருபோதும் ஈழம் உருவாகுவதை அனுமதிக்காது. ஆகவே ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வை பெற முயற்சியுங்கள்" என. புளொட் அப்போது பெரிய இயக்கமென்பதால், புளொட்டின் வளர்ச்சியை இந்தியா கண்ணும் கருத்துமாக இருந்து மட்டுப்படுத்தியது. எமது இரண்டு ஆயுத கொள்களன்களை சென்னையில் கைப்பற்றி, ஆயுத வரவை தடுத்திருந்தார்கள். இயக்கங்களின் ஆயுதவரவை மட்டுப்படுத்தி வைத்திருக்கவே இந்தியா விரும்பியது. சிரியாவிலும் இதனை பார்த்திருக்கிறேன். சிரியாவிலிருந்து லெபனானிற்குள் நுழையும் போராளிகளின் எண்ணிக்கையை கணக்கெடுத்து, மட்டுப்படுத்திய அளவில் தான் அனுமதிப்பார்கள். அதை மீறி போவதென்றால் மலைப்பாதைகளால் செல்லும் கள்ளப்பாதையால்தான் போக வேண்டும். நானும் அப்படியான பாதைகளிற்குள்ளால்தான் லெபனான் சென்றேன்.

இந்தியாவின் இப்படியான கட்டுப்பாட்டை மீறி புளொட்டால் வளர முடியவில்லை. ஆனால் தம்பி அந்த சவாலை கடந்து புலிகளை பிரமாண்டமாக கட்டியெழுப்பியது உண்மையில் பெரிய விடயம்.

பங்களாதேஷை போல இலங்கையில் இந்தியாவின் தலையீடு இருக்குமென அந்தக்காலத்தில் பெரும்பாலானவர்கள் நம்பினார்கள். ஆனால் தனது நலன்கள், தேவைகளிற்குள் நமது விவகாரத்தை சம்பந்தப்படுத்திதான் எந்தநாடும் சிந்திக்கும். இந்த அர்சியலை நாம் சரியாக புரிந்து, அதற்கேற்ப செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் நமது பல நடவடிக்கைகள் இந்தியாவை தள்ளிவைத்துவிட்டது. ராஜீவ் கொலை, புளொட் இயக்கம் வெளியிட்ட வங்கம் தந்தபாடம் நூல் என்பன இந்தியாவை நிறைய அதிருப்திப்பட வைத்திருந்தது.

2009 இல் இந்தியா நினைத்திருந்தால் போரை நிறுத்தியிருக்க முடியும். இந்தியா தலையிட்டு யுத்தத்தை நிறுத்துமோ என்ற பயம் மகிந்த, கோத்தபாய ஆகிய இருவரிடமும் இருந்தது. தேர்தல் காலத்தில்கூட இந்தியா அந்த அழுத்தத்தை கொடுக்காததற்கு, தமிழர்களின் உரிமைப்போராட்டத்தைவிட்டு இந்தியா தள்ளிச்சென்றதுதான் காரணம்.

பலர் இன்று தமிழ்தேசிய கூட்டமைப்பில் சம்பந்தனில் பிழை சொல்கிறார்கள். சம்பந்தனின் நிலைப்பாட்டை கண்மூடித்தனமாக நாங்களும் ஆதரிப்பதாக சொல்கிறார்கள். சம்பந்தன் அண்ணையின் சில முடிவுகளில் விமர்சனம் இருக்கலாம், அங்கத்துவ கட்சிகளுடன் ஆலோசனை செய்யாமல் நினைத்ததை செய்கிறார்கள் என்ற அதிருப்திகள் இருந்தாலும், புதிய அரசியலமைப்பு திருத்தம் உருவாக்கப்படும் இந்த சமயத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களின் ஒற்றுமையின்மையை சாட்டாக கூறி, சிங்கள ஆட்சியாளர்கள் தீர்வு முயற்சிகளிலிருந்து பின்வாங்கலாம்.

தென்னிலங்கை அரசியலை நீண்டகாலமாக பார்த்து வருபவன் என்ற அடிப்படையில், தமிழ்மக்களின் நியாயமான பிரச்சனைகளை தீர்க்கும் நீண்டகால தீர்வை இந்த அரசு வழங்குமென்ற நம்பிக்கை என்னிடமில்லை. இருந்தாலும், புதிய அரசியலமைப்பு உருவாக்க நடவடிக்கைகளை நாம் குழப்பிவிட்டோம் என்று அரசும், சர்வதேசமும் குற்றம்சுமத்துவதற்கு பாத்திரவாளியாக இருக்ககூடாதென்பதே என்னுடைய கருத்து.



▶ விசாரியுங்கள் அறிந்துக் கொள்ளுங்கள் அது உங்களது உரிமையாகும் என்ற தொனிப்பொருளில் கல்வி அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான தகவல் அறியும் நிலையம் ஒன்று கல்வி அமைச்சில் திறந்து வைக்கபட்டுள்ளது. இந்த நிலையத்தின் ஊடாக கல்வி தொடர்பான தகவல்களை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையில் காணப்படும் அனைத்து கல்விசார் நிறுவனங்களும் இத்துடன் இணைக்கபட்டுள்ளதுடன் இதற்கான இணையதளம் ஒன்றும் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் ஆகியோரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing


261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com
B.Mayuran
Managing Director

## கடை முதலாளியிடமிருந்து தப்பித்த நயன்தாரா!

சரவணா ஸ்ரோர்ஸ் ஓனர் சரவணனுக்கு புத்தி ஏன் இப்படி போக வேண்டும் என தலையிலடித்துக் கொண்டவர்களிற்கு ஒரு நற்செய்தி. அந்தாள் சினிமாவில் நடிக்கவில்லையாம். சிலகாலத்தின் முன் தமன்னா, ஹன்சிகாவுடன் சரவணன் தனது கடை விளம்பரத்தில் நடித்திருந்தார். அதனை நெட்டிசன்கள் கலாய்த்து தள்ளியிருந்தனர். இந்தநிலையில், நயன்தாராவை ஜோடியாக்கி அவர் சினிமாவில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. இந்த செய்தியால் மொத்த திரையுலகமும் அதிர்ந்து போயிருந்தது. சரவணா ஸ்ரோர்ஸ் நிர்வாகமே முன்வந்து இந்த அதிர்ச்சியை போக்கியுள்ளது. அதாவது சரவணனுக்கு சினிமாவில் நடிக்க ஆர்வம் இல்லையாம்.

## பாவனாவை பாவம் பார்க்காத பெண் யார்?

நடிகை பாவனா காரில் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட செய்தி எல்லோரும் அறிந்ததுதான். இந்த பாதகத்தை செய்த பல்சர் சுனில் உள்ளிட்டவர்கள் கைதாகியபோதும், இதற்கு பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இந்தநிலையில் பாவனா ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார். பல்சர் சுனில் தன்னை கடத்தி அத்துமீறியபோது, யாரோ ஒரு பெண் சுனிலை தொடர்பு கொண்டு சில விடயங்களை பேசியதாக கூறியிருக்கிறார். அவரை பொலிசார் பிடித்தாலே அனைத்து உண்மையும் வெளிப்பட்டுவிடும் என்றுள்ளார்.

## இளையராஜா குடும்பத்தின் வாரிசு செய்த வேலை!

இளையராஜாவின் அக்கா மகன் ரவிவிஜய் இசையமைக்கும் படம் வதம். இரண்டு புதுமுகங்கள் ஹீரோக்கள். விளம்பர உலகில் கொடிகட்டிப்பறக்கும் சுவப்னா ஹீரோயின். அரசியல் பின்புலத்துடன் கந்துவட்டி, கட்டப்பஞ்சாயத்து செய்யும் வில்லன்களை எதிர்கொண்டு அப்பாவி மக்களின் துயர்துடைக்கும் இளைஞனின் கதை. ரவிவிஜயின் இசையில் பாடல்கள் நன்றாக வந்துள்ளதாக படக்குழு உற்சாகத்தில் உள்ளது. லவ்விக்கோ லவட்டிக்கோ என்னை அள்ளிக்கோ, சேலைகட்டி வந்த சீமசரக்கு என் உதடு ஊறுகாயா மாறும் உனக்கு போன்ற பாடல்கள் இளைஞர்களின் தேசியகீதமாக இருக்குமென நம்புகிறார்கள்.

## தனுஷின் புதிய படம்

ப.பாண்டி படத்தின் மூலம் இயக்குனராகவும் தனுஷ் வெற்றிபெற்றுள்ளார். படம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. படம் வெளியாக சிலதினங்களின் முன் வடசென்னை படப்பிடிப்பில் கலந்து கொண்டார். மூன்று பாகங்களாக உருவாகும் இந்தப்படம் அடுத்த வருடம்தான் வெளியாகும். இதற்கு முன் வேலையில்லா பட்டதாரி2 அடுத்த ஓகஸ்டில் வரும். இதைவிட வேறுபடங்கள் இல்லாததால் மாரி 2 படத்தை தனுஷ் ஆரம்பிக்கலாம் என தகவல் வந்துள்ளது. மாரி படம் சுமாராகத்தான் போனது. ஆனால் படமும் பாடல்களும் வரவேற்பை பெற்றன. இதனால் தனுஷ் இந்த முடிவை எடுத்ததாக கூறப்படுகிறது. விரைவில் படம் பற்றிய அறிவிப்பு வருமாம்.

## கலக்கிய கைப்புள்ள

வடிவேலு இல்லாமல் நான்கைந்து வருடங்களாக தமிழ் சினிமாவின் நகைச்சுவை ஏரியா வறண்டு போயிருந்தது. கோடை மழையாக சிவலிங்கா படத்தில் பட்டையை கிளப்பியிருக்கிறார் வடிவேலு. லாரன்சின் சிவலிங்கா படத்தில் வடிவேலுவின் நகைச்சுவைதான் பிரதானமாக பேசப்படுகிறது. சந்திரமுகியை போல திகில், நகைச்சுவை கலந்த படம் இது. இதனால் வடிவேலுவை கணிசமாக நம்பித்தான் படத்தை ஆரம்பித்தார் பி.வாசு. அந்த நம்பிக்கை வீண்போகவில்லையென்பதுதான் ரசிகர்களின் கருத்து. பழைய ஹீரோ கனவையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, இறங்கி வந்து நடித்திருக்கிறார் வடிவேலு. அவர் ஹீரோவாக நடித்து அண்மையில் ஊற்றிக்கொண்ட படங்களிற்கு பிராயச்சித்தம் போல இதில் நகைச்சுவை சிறப்பாக உள்ளது.



சலானி தாரகா

# ரீங் டாக்கீஸ்

நாகினி சீரியலின் மூன்றாம் பாகத்தில் மௌனிராய் நடிக்க மாட்டார் என தெரிகிறது. இந்தியில் சக்கை போடு போட்ட நாகினி, தமிழில் டப் செய்யப்பட்டபோது பெரு வரவேற்பை பெற்றது. பாம்பை மையமாக வைத்த இந்த தொடரில் மௌனிதான் பாம்பாக வந்தார். இரண்டாவது சீசன் வரும் ஜூன் மாதம் முடிகிறது. நாகினிக்கு கிடைத்த அமோக வரவேற்பையடுத்து தயாரிப்பாளர் ஏக்தா கபூர் மூன்றாவது சீசனையும் தொடங்க திட்டமிட்டுள்ளார். இது நவம்பரில் ஒளிபரப்பாகும். இதில் மௌனிராயை நீக்கிவிட்டு, புதிதாக ஒருவரை நடிக்கவைக்க திட்டமிட்டுள்ளனராம்.

மனதை திருடி விட்டாய் படத்தில் பிரபதேவா நாயகியாக அறிமுகமானவர் காயத்ரி ஜெயராம். சில படங்களில் நடித்தபின், வாய்ப்பு கிடைக்காமல் ஆழ்கடலிற்குள் நீச்சல் அடிக்கும் ஸ்கூபா டைவிங் கற்று, அதில் மாஸ்ரர் ஆனார். அந்தமான் தீவில் மாஸ்ரராக பணியாற்றியபோது, சக மாஸ்ரர் சமித் ஸ்வானி என்பவரை திருமணம் செய்து, அங்கேயே செட்டிலாகிவிட்டார். சிலகாலத்தின் பின் சின்னத்திரை பக்கம் வந்து, சில நிகழ்ச்சிகள் செய்தார். இப்போது நந்தினி சீரியல் மூலம் சின்னத்திரை நடிகையாகியுள்ளார். நித்யா ராம், மாளவிகா வேல்ஸ் போன்ற இளம் நடிகைகளிற்கு போட்டியாக பைரவி வேடத்தில் நடித்து வருகிறார். முக்கிய வேடங்கள் கிடைத்தால் தொடர்ந்து நடிக்கவிருக்கிறாராம்.


ஜெயஸ்ரீயை தெரியாத சீரியல் ரசிகர்கள் இருக்க முடியாது. தற்போது ரம்யா கிருஸ்ணனின் வம்சம் தொடரில் நடித்து வருகிறார். இவர் பரதநாட்டிய நிகழ்வுகளையும் நடத்தி வருகிறார். இவரது தாய் பரதநாட்டிய கலைஞர் என்பதால் சிறுவயதிலேயே ஜெயஸ்ரீயும் பரதத்தை கற்றுள்ளார். சீரியல் பாதி, பாரதம் மீதியாக வாழ்க்கையை கொண்டு செல்வதாக கூறுகிறார். பரதத்தின் மூலம் நல்ல பெயரும் புகழும் கிடைத்தாலும், சீரியல் மூலமே அதிகமானவர்கள் தன்னை தெரிந்து வைத்துள்ளதாக கூறுகிறார். இதுவரை 1500 பரதநாட்டியநிகழ்ச்சிகளை நடத்தி விட்டாராம்.

சீரியல் ரசிகர்களிற்கு நந்தினியை தெரியாமலிருக்க முடியாது. சீரியல் பார்க்காதவர்களும் நந்தினியை அண்மையில் அறிந்திருப்பார்கள். அண்மையில் கணவர் சரவணன் விசம் குடித்து தற்கொலை செய்திருந்தார். இந்த செய்தி பரபரப்பாக பேசப்பட்டது. இந்த தற்கொலைக்கு யார் காரணம் என பெரும் குழப்பம் நீடிக்கிறது. சரவணன் குடும்பம் மீது நந்தினி குடும்பமும், நந்தினி குடும்பம் மீது சரவணன் குடும்பமும் மாறிமாறி குற்றம்சுமத்தி வருகிறார்கள். அண்மையில் ஒரு பேட்டியில் நந்தினி கூறியது பலருடைய மனதை நெகிழச்செய்துள்ளது. "அப்பா, அம்மா, தம்பி மூவரும் எனக்கு குழந்தைகள். அந்த மூன்று குழந்தைகளிற்காகவும் நான் இன்னும் சிலகாலம் ஓடியாடி உழைக்கணும். தொலைக்காட்சியில் இருப்பதால் குடும்பப்பிரச்சனைகளை மறைத்துக்கொண்டு சிரிக்க வேண்டியுள்ளது" என கூறினார்.



# ஆபாச படங்களின் மூன்று கட்டங்கள்

இணையன்



தொழில்நுட்பத்தின் பெருக்கம் மனிதவாழ்க்கையை எவ்வளவு இலகுபடுத்தியிருக்கிறதோ, அதேயளவு சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது. ஒரு உதாரணம் இணையத்தில் உலாவும் ஆபாசப்படங்கள். பெற்றோர் எவ்வளவு தான் கட்டுப்பாடு விதித்தாலும், டிமிக்கி கொடுத்துவிட்டு ஆபாசபடம் பார்க்கும் பிள்ளைகளை எப்படி கட்டுப்படுத்துவதென தெரியாமல் விழிக்கிறார்கள். இப்படி சிறுபிராயத்தில் ஆபாசப்படம் பார்த்து பழகியவர்கள் பின்னாளில் அதற்கு அடிமையாகிவிடுகிறார்கள்.

ஒன்லைன் போர்ன் (இணையத்தில் உலாவும் ஆபாசப்படங்கள்) பார்வையாளர்களை மூன்றாக வகைப்படுத்துகிறார்கள். பெற்றோருக்கு தெரியாமல் ஆபாசப்படம் பார்க்க தொடங்குபவர்கள், பின்னாளில் அதற்கு அடிமையாகி நிறைய பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். ஆபாசப் படம் பார்ப்பவர்களை எப்படி வகைப்படுத்துகிறார்கள், அவர்கள் எதிர்கொள்ளவுள்ள பிரச்சனைகள் எவை என்பதை பார்க்கலாம்.

ஒருவர் குடிபோதைக்கு அடிமையெனில், அவர் சோசியல் ட்ரின்க்கரா? பின்ஞ் (அதிகப்படியான) ட்ரின்க்கரா? அல்லது குடிக்கும் அளவை பொறுத்த ட்ரின்க்கரா? என்பதை பொறுத்தே , அவர் எந்த அளவிற்கு குடிபோதை மிக்கவர் என்பதை மருத்துவர்கள் தீர்மானிக்கிறார்கள். அதே போலத்தான் ஒன்லைன் போர்ன் என்பதும்.

### முதல் வகை

ரிக்ரியேஷனல் வியூவர்ஸ். அதாவது பொழுதுபோக்கு பார்வையாளர்கள். இவ்வகையினர் எப்போதாவது ஒன்லைன் போர்னுக்கு ஒதுக்குவார்கள். ஒரு வாரத்திற்கு ஒரு சில மணி நேரங்கள் மட்டுமே ஒன்லைன் பொப்கோர்ன் வலைத்தளங்களில் நேரம் கழிப்பர்.

### மென்காம ஒன்லைன் போர்ன்

பெரும்பாலும் இவ்வகை மக்கள் பாலியல் தூண்டுதல் மற்றும் பொழுதுபோக்கிற்காக ஒன்லைன் போர்னுக்கு செல்கிறார்கள். இதனால் இவர்கள் தங்களது சமூக, காதல் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தையும் சந்திக்க மாட்டார்கள். ஆராய்ச்சிகளானது, இவ்வகை மக்கள் மென்காம ஒன்லைன் போர்ன் அணுகலில் ஈடுபட தமது அல்லது இணை உடலின் மீது ஏற்பட்டுள்ள அதிருப்திதான் மிக முக்கியமான காரணம் என்கிறது.

பொழுதுபோக்கு பார்வையாளர் என்றாலும் கூட இவர்களும் பிற மக்களை ஒரு பாலியல் பொருளாகவே பார்க்கும் மனநிலையை விரைவில் பெறலாம். மிக எளிதாக முழுமையான ஒன்லைன் போர்ன் அடிமையாகலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம் வகை

செக்ஸ்யூவலி கொம்பள்ஸிவ் வியூவர்ஸ் எனப்படும் கட்டாயமான பாலியல் பார்வையாளர்கள் என்ற வகையை சேர்ந்த ஒன்லைன் போர்ன் பார்வையாளர்கள் பல ஆண்டுகளாக ஆபாச வலைதள அணுகலை கொண்டு இருப்பர். அவர்கள் ஆரம்பத்தில் பார்த்த ஆபாசப் படங்களும் இப்போது பார்க்கும் படங்களுக்கும் பெரிய அளவிலான வித்தியாசம் இருக்கும்.

இவ்வகையினர் தங்களுடைய பிரச்சினைகளை சமாளிக்க ஆபாச படங்களை ஒரு வழியாக பயன்படுத்தும் மனநிலை கொண்டிருப்பர். எதாவது சிக்கல், மனக்குழப்பம் என்றால் அதிலிருந்து தன்னைத்தானே விடுவிக்க பொப்கோர்ன் அணுகலை நிகழ்த்துவர்.

இவர்கள் சந்தோஷமாக , வருத்தமாக, கோபமாக அல்லது வெறுனே வெறுப்பாக இருந்தாலும் கூட அதிலிருந்து தப்பிக்கும் ஒரு முயற்சியாக ஆபாசப்படங்களை பார்க்கிறார்கள். இந்த இணைய ஆபாச அணுகல்கள் நிஜ வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை கையாள்வதற்கு பதிலாக தவிர்க்க ஒரு வசதியான மலிவான வழியை வழங்குவதால் இவர்களும் விரைவில் ஒன்லைன் போர்ன் அடிமையாகிட வாய்ப்பு அதிகம்.

### மூன்றாம் வகை


அட் ரிஸ்க் போர்ன் வியூவர்ஸ் எனப் படும் ஆபத்தான நிலையில் இருக்கும் ஆபாச பார்வையாளர்கள் என்ற வகையினர் வாடிக்கையாக தொடர்ந்து ஆபாசப்படம் பார்க்கும் பழக்கம் கொண்டவர்களாக இருப்பர். செக்ஸ்யூவலி கொம்பள்ஸிவ் வியூவர்ஸ் எனப்படும் கட்டாயமான பாலியல் பார்வையாளர்கள் போன்று இவர்கள் அலைக்கழிக்கும் போதெல்லாம் ஒன்லைன் போர்ன் அணுகல் நிகழ்த்தாவிட்டாலும் கூட ஒரு வலுவான ஒன்லைன் போர்ன் பழக்கம் கொண்டவர்களாக இருப்பர்.

இவர்கள் பெரும்பாலும் பல முறை இதை நிறுத்த முயற்சித்து தோற்றுபோனவராய் இருப்பர். முன்பை விட அதிக அளவிலான ஒன்லைன் போர்ன் உள்ளடக்கம் கிடைக்கும் இந்த காலக்கட்டத்தில், இந்த போதையை நிறுத்திக் கொள்வதைபெரிய போராட்டமாக உணரும் இந்த வகையினர் தனிமையான அல்லது மன அழுத்தத்துடனே இருப்பர்.

ஒன்லைன் போர்ன் என்பது தங்களது வாழ்க்கை திறனில் எதிர்மறை விளைவை ஏற்படுத்துகிறது என்பதை இவர்கள் நன்கு அறிந்திருப்பர். ஆனாலும் கூட இந்த பழக்கத்தை நிறுத்துகொள்ள முடியாமல் திணறுவர். இதற்கு காரணமாக அவர்களுடைய இணையுடன் மகிழ்ச்சியாக இல்லை அல்லது உண்மையான உடலுறவு மூலமாக திருப்தி அடையவில்லை என பல காரணங்களை தொகுக்கலாம். சரி இதிலுருந்து விடுபட மேலோட்டமான யோசனைகள் உண்டா என்று கேட்டால், ஆம் உண்டு.!

### மாற்றம் சாத்தியமே!

1. உங்கள் கணினி/ மொபைலில் சேமித்து வைத்துள்ள ஆபாச வலைத்தளங்களை க்ளீன் செய்யுங்கள்.
2. ஒரு இன்டர்நெட் சென்சார் அமைக்கவும்.
3. நண்பர்கள் அல்லது குடும்பத்துடன் உங்கள் இலவச நேரத்தை அதிகமாக செலவிடுங்கள்.
4. எதிர்மறை எண்ணங்களுக்கு பதிலாக நேர்மறை எண்ணங்களுக்கான வலிமையை அதிகமாக பயன்படுத்தவும்.
5. உடற்பயிற்சி, இசைக்கருவி என எதாவது ஒரு புதிய பழக்கம் அல்லது பொழுதுபோக்கை கையில் எடுங்கள்.
6. சிக்கல் தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனையை நாடுங்கள்.





▶ வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டிற்கான மாகாண கண்காட்சி செவ்வாய்(18) மாலை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த 33 பிரதேச செயலகங்களிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த 22 வரையான கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு, மகளிர் அபிவிருத்தி நிலையப் பெண் பயிலுநர்களின் கைவண்ணத்தில் உருவான பல்வேறு அழகியல் மற்றும் ஆக்கப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

புதுக்கவிதை என்ற பெயர் தற்காலிகமானது.
கவிதையின் பெயர் கவிதையே.
இப் பெயர் பெறத்தகுதியற்ற யாவும் செய்யுள்கள்.
செய்யப்பட்டவை.
கவிதை எல்லாவகையான சொற்களையும் உதறுகிறது.
நிதர்சனத்தில் திளைக்கிறது.

பிரமிள்



# நீயின்றி

ரீனாஈச்சமோட்டை

உடைந்துபோன உன் மௌனங்களை
என்னில் தேடி மாய்ந்து போகிறேன்
செல்லரித்துப்போன தடயங்களாய்
தொலைந்து மறைகின்றன உனது வார்த்தைகள்
விழியில் உறைந்து உருகும் பிரியங்களை
அஞ்சல் செய்ய இதயம் துடித்தும்
தள்ளி நின்று எச்சரிக்கிறது உன் சமீபபிரிவு
பிரிவுகளின் முடிவு புரிதலின் ஆரம்பம்
சபித்துச்செல்லும் காலம் கூட
என்அன்பை உனக்கு ஏனோ உணர்த்த மறுக்கின்றது!


# நீயில்லாது நானில்லாதது போலவே இருக்கிறேன்



ஜயப்ப மாதவன்

நிலவொளியில் நீயில்லாது நிலவற்ற வெளிபோல
அடரிருளாக கனத்துப்போயிருக்கிறேன்
உன் அருகற்றிருப்பதால் நீரற்ற ஆறு போல காய்ந்திருக்கிறேன்
உன்னை என் உணர்வுகளில் பனிக்கால சூரியனாய்
பனிப்பாறைகளாய்க் கரைத்துக்கொண்டிருப்பாய்
நான் உன்னில் கருமுகில்கள் பொதிந்த மழையாகவும்
நீ என்னில் பழத்தில் நிரம்பிய விதை போலவும்
விலகி விலகியே இருக்கும் சமயங்களில்
நெருங்க வேண்டுமென்கிற துடிப்புகளில்
நீரில் விழுந்த நீந்தத் தெரியாத எறும்புகளைப் போல
என் தத்தளிப்பதின் துயர் நீள்கிறது
உன் பார்வைகள் பதியாத என்னுடல்
வெம்பிச் சோர்ந்திருக்கிறது கோடைகால மரங்கள்போல
சொல்லற்று பேசும் உன் விழிகளில் நீ எழுதும்
என்னைப் பற்றிய கவிதைகள் எத்தனை அழகானவை
உன்னைக் காணதே வாழும் இந்த வாழ்வு
பாலைவன வெப்பம் போல தகிக்கிறது
உன் விரல்கள் பற்றாத இந்த நாட்களில்
என் உணர்ச்சிகள் யாவும் சுகவீனமடைந்துவிட்டன
நீயே என் யாவுமாகிவிட்டாய் என்றானபோது
என்னைவிட்டு எட்டாத தூரம் சென்றுவிட்டாய்
எத்தனை பெரிய உலகம் என் முன்னிருந்தும்
நீயில்லாது நானில்லாததுபோலவே இருக்கிறேன்
யாவும் நீயென ஆகிவிட்டபின் தொடர்ந்து நீளும்
இந்தக் பொழுதுகளில் நீயறிருப்பதை எத்தனை சொற்களில்
எழுதினாலும் அவற்றில் கண்ணீர்த்துளிகளின் ஈரமே
உலராதிருந்துகொண்டிருக்கும்.

# வயலின் தந்தியில் நகரும் நத்தை




கார்த்திக் திலகன்

திருமண வீட்டின்
மங்கல இசையில்
தேவதையைப் போல
குழந்தையுடன் நடந்து வருகிறாய்
என் முரட்டுக்காதலை
கையில் பிடித்துக்கொண்டு
அவமானத்தோடு
உன் கனவுகளை விட்டு நான்
வெளியேறிய நாள் என்
நினைவுக்கு வருகிறது
நீ என் காதுபடவே
எல்லோரிடமும் உன்
கணவனைப் புகழ்கிறாய்
அவனை
மிகவும் நல்லவன் என்கிறாய்
மிகவும் மென்மையானவன் என்கிறாய்
காத்திருப்பவன் என்கிறாய்
கலாரசிகன் என்கிறாய்
இறுதியாக ஏன்
நீண்ட பெருமூச்சால்
மார்பைத் தாலாட்டுகிறாய்
உன் வயலெங்கும் அலைந்து
காட்டுப்பன்றியைப் போல
நான் அகழ்ந்தெடுத்த
சக்கரவாளக் கிழங்கின் வாசம்
உன் நினைவைத் துளைக்கிறதா
மீட்டமென்மையானவன்தான்
உன் கணவன் வயலினைப்போல
ஆனால்
வயலின் தந்திகளின் மேல்
ஊர்ந்து செல்லும் நத்தைக்கு
இசை என்பது
எவ்வளவு பெரிய வலி.

# எனது அப்பங்களை என்னிடமே தந்துவிடு

இயல்வாணன்



உனது அப்பங்கள் உனக்குரியவை.
வேண்டாம் அவை எனக்கு.
எனது அப்பங்களை என்னிடமே தந்துவிடு.
எனது பாட்டனும் தந்தையும் விதைத்த வயலில்
விளைந்த நெல்லாலானவை அவை.
உனது கோதுமை வயலில் விளைந்ததை என்னிடம்
திணிக்காதே!
எனது வயலில் கோதுமையை விதைத்து
காலகாலமாய் அது இருந்ததாக கதையளக்காதே!
எனது வயலில் விளைந்த நெல்லில்
எனக்கான அப்பங்களைத் தயாரித்துள்ளேன்.
என்னிடம் தந்துவிடு
எனது வயலையும் அப்பங்களையும்!
உனது அப்பங்கள் வேண்டாம் எனக்கு.
அது உயர்வாயினும்
அச்சுவை எனக்கு உவப்பல்ல.
திணிக்காதே அதனை.





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்

குரு.நக்கீரன்
உளவள ஆலோசகர்




**கணேசரூபன் (வயது 28)**
**முரசுமோட்டை**

***நான் காதலித்துத் திருமணம் முடித்து ஒரு வருடமாகின்றது. காதலிக்கும்போது மிகவும் அன்பாக, அக்கறையாக இருந்த என் மனைவி இப்போதெல்லாம் என்னிடம் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருக்கின்றாள். அடிக்கடி எரிந்து விழுகின்றாள். ஏன் என்று தெரியவில்லை. இப்போதெல்லாம் எனக்கு வீட்டுக்குச் செல்லவே பிடிக்கவில்லை. இதற்கு ஒரு முடிவு சொல்லுங்கள்?***


*பதில்: சகோதரா! உம் பிரச்சினைதான் திருமணமான 75 வீதமான ஆண்களின் பிரச்சினையும். உண்மையில் இலங்கை இந்தியக் கலாச்சாரப் பாரம்பரியப் பண்பாட்டில் வாழும் மக்களின் வாழ்வில் இது ஒருபொதுவான பிரச்சினையே. பொதுவாக இலங்கை இந்தியத் தமிழர்களின் வாழ்வில், பிறந்த வீடு புகுந்த வீட்டுப் பிரச்சினை ஒரு உள சமூகப் பிரச்சினையாகவே உள்ளது. ஆண் பிரச்சினைப்படும்போது 'தலையணை மந்திரம்' என்கிறார்கள். பெண் பிரச்சினைப்படும் போது மாமயார் மருமகள் சண்டை என்று பொதுவாகச் சொல்லி விடுகின்றார்கள். ஆனால் வீட்டுக்கு வீடு வாசற்படி போல் இப் பிரச்சினை புரையோடிப் போய் உள்ளது. என்ன செய்வது? காதலிக்கும்போது புற அழகில் மட்டும் அக்கறைப்படும் காதலர்கள் அக அழகைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. பின்னாளில் இப்படி வந்து இடிக்கும்போது தான் அது பற்றி யோசிக்கின்றார்கள்.*

*சகோதரா! நீர் வங்கியில் கடன் எடுத்துள்ளீரா? அதற்காக மாதாந்தம் கட்டுப் பணம் கட்டியுள்ளீரா? அப்படியானால் நான் கூறும் விளக்கம் உமக்குப் புரியும். வங்கிக் கடனுக்காக மாதாந்தக் கட்டுப் பணம் வசூலிக்கும்போது ஒரே தொகையைத்தான் கடன் முடியும் வரை கழிக்கும். ஆனால் கடன் கழிவின் ஆரம்பத்தில் வட்டி அதிகமாகவும் முதல் குறைவாகவும் இருக்கும். பிற்பாடு வட்டி குறைவாகவும், முதல் அதிகமாகவும்;; மாறிவிடும். இதேபோல்தான் காதல் வாழ்விலும் ஆரம்பத்தில் புற அழகில் அதிக கவர்ச்சியும் காலம் செல்லச் செல்ல அக அழகே வாழ்வின் இருப்பைக் கருத்துள்ளதாக்கும். ஆகவே அக அழகு மிகமிக முக்கியமே.*

*உமது பிரச்சினைக்கு என்னால் கூறக்கூடியது. குடும்ப வாழ்வு வியாபாரம், அரசியல், சமூகவியல் எனப் பல பரிமாணங்களைக் கொண்டது. எனவே இடத்துக்கு ஏற்றபடி நாமே அதைப் பயன்படுத்த வேண்டும். எனவே எதையும் உமது மனச்சாட்சிப்படி செய்யும். ஏனெனில் உமது பெற்றோருக்குப் பிள்ளை, உமது பிள்ளைக்கு அப்பா, உமது மனைவிக்கு கணவன் (காதலன்) என்று எல்லாமே நீர்தான். இவ் எல்லாப் பாத்திரங்களையும் கவனமாக நிறைவேற்றினால்தான் நீர் உன்னதமான மனிதன்.*







**பெயர் குறிப்பிடவில்லை (வயது 26)**
**கோண்டாவில்**

***நான் ஒரு பெண். உயர்கல்வி நிறுவனமொன்றில் பட்டம் பெற்றுள்ளேன். எமது துறைக்குப் பொறுப்பாக இருந்த ஒருவருடன் ஒத்துழைத்தால்தான் பட்டம் பெறலாம் என்ற நெருக்கடி ஏற்பட்ட போது வேறு வழியின்றி அதற்குச் சம்மதித்தேன். அது உடல் ரீதியான தொடர்பாகவும் சில காலம் இருந்தது. இப்போது எனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது. வெளிநாட்டு மாப்பிள்ளை. அவர் என்னை மிகவும் நம்புகிறார். இந்த நம்பிக்கை உணர்வே எனது குற்ற உணர்வை அதிகப்படுத்துகின்றது. திருமணத்தின் பின் கணவன் இதைக் கண்டுபிடித்தால் என்ன ஆகும் என்று பயமாய் உள்ளது. நான் என்ன செய்வது?***

*பதில்: அருமைச் சகோதரியே! உமது மடலைப் பார்க்கும்போது மனித வாழ்வின் பரிமாணங்களை இன்னும் ஆழமாக ஆராயத் தோன்றுகின்றது. உம்மைப் போன்ற பல பெண்கள் இப்படியான துன்பங்களுக்குள் ஆளாகியிருந்துள்ளனர். இதுதான் வரலாறு. நீர் இவ் விடயத்தைத் துணிந்து கூறியது ஆச்சரியமானது. இது மிகவும் சாதாரணமானது. ஆனால் நடத்தப்பட்ட விதம்தான் சாத்தியத்துக்கு முரணானது. உண்மையில் பதவியை அலங்கரிப்பவரிகளினூடு அப் பதவிக்குரிய பண்பு இல்லாமையே எமது சமூகத்தின் ஒரு துரதிஸ்டம்தான். இருமனங்கள் லயித்து இப்படி ஒரு தொடர்பு ஏற்பட்டிருப்பின் அது எதிர்பாராத விபத்து. ஆனால் உமக்கு நேர்ந்தது ஒரு கயவனால் திட்டமிட்டு நடத்தப்பட்ட விபத்து. இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு.*

*போகட்டும் அது ஒரு கெட்ட கனவு. துரதிஸ்டமான விபத்து. நடந்து முடிந்து விட்டது. இனி நடக்கப் போவதைச் சரியாகக் கையாள்வதே வாழ்க்கைத் திறன். நடந்ததை மறந்து எதிர்காலத்தைச் சீர் செய்யும் விதமாக வாழ்க்கை முறையை மாற்றுங்கள். மாப்பிள்ளைக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதாக நினைக்க வேண்டாம். என்ன செய்வது? சேற்றைக் கடந்துதான் பாதைக்கு வர வேண்டும் எனும் கட்டாயத்தில் சேறு உங்கள் மேல் பட்டு விட்டது. புனிதமாகுங்கள். இனி அப்படி ஒரு நிலையில் சிக்காமல் இருக்க இறைவனை வேண்டுங்கள்.*

*உங்கள் மனச் சாந்திக்காகவும், உங்களைக் குற்ற உணர்வில் இருந்து மீட்டெடுப்பதற்காகவும் ஒரு யதார்த்தமான உண்மையைக் கூறுகின்றேன். மேற்கத்தைய நாடுகளில் உள்ள இளைஞர்களில் 90 வீதமானவர்கள் சந்தர்ப்பவாத பாலியல் தொடர்புகளை வைத்திருப்பது மிகவும் சாதாரணமான ஒருவிடயம். வெளிநாட்டில் உள்ள உமது மாப்பிள்ளை ராமனாக இருப்பதற்கான வாய்ப்பு அதிகமாக 10 வீதமே. பிறகெதற்கு கவலை?. பேயைக் கலைக்கப் போய் பிசாசைப் பிடித்துவிட்ட கதையாகி விடாமல் இருப்பது உமது கையிலேயே தங்கியுள்ளது.*

**ஜென்சி (வயது 22)**
**சுண்டிக்குழி**

***நான் படித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு மொடர்னாக ஆடை அணியப் பிடிக்கும். ஆனால் அது கவர்ச்சி என நண்பிகள் சொல்வார்கள். மொடர்னாக ஆடை அணிந்து சென்றால் எல்லா ஆண்களும் வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள். பெண்களின் ஆடைதான் பாலியல் அத்துமீறல்களுக்குக் காரணம் என்று சமூக வலைத்தளங்களில் படித்ததில் இருந்து சற்றுப் பயமாக உள்ளது. இருந்தாலும் எனக்கு மொடர்ன் ஆடைகள்தான் பிடித்துள்ளது. மற்றவர்களுக்காக எனது உரிமையை விட்டுக் கொடுப்பதா என்றும் யோசிக்கின்றேன். என்ன செய்யலாம்?***

*பதில்: அன்புச் சகோதரியே! ஆடை என்பது மனித நாகரிக வளர்ச்சியின் முக்கிய படி. ஆடை உருவானதன் நோக்கம் மனிதன் (குறிப்பாக பெண்கள்) தனது அந்தரங்க உடலழகைப் பிறருக்கு வெளிப்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாகவே. ஆனால் உடலை மறைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஆடையானது இக் காலத்தில் உடலை மறைக்கப் பயன்படாமல் உடலை வெளிக்காட்டவே பயன்படுத்தப்படுகின்றது. இதுவே பாலியல் அத்துமீறல்கள் போன்ற பல குற்றச் செயல்களுக்கும் இலகுவில் காரணம் ஆகி விடுகின்றது. குற்றச் செயல்களும் கூடுகின்றன.*

*ஆடை அணிவதன் நோக்கங்களில் ஒன்று அணிபவரின் அழகை மெருகூட்டுவது. எனவே நவீன ஆடைகள் என்பது நாகரிகத்தில் இருந்து அநாகரிகமாக அமையக் கூடாது. நீங்கள் சொல்வது போல் பாலியல் அத்துமீறல்கள், ஆண்களின் ஒழுக்கத்துக்கான சவால், பெண்ணின் குடும்ப கௌரவத்தைக் கேள்விக் குறியாக்கல் போன்ற பல்வேறு சிக்கல்கள் மொடர்ன் ஆடைகளின் எதிர்மறையான விளைவுகளே. நீங்களே அநாகரிகமான மொடர்ன் ஆடைகளிலுள்ள ஆபத்தை ஏற்கிறீர்களே. 'கவர்ச்சி' என்றால் கவர்தல் தானே?. எனவே உங்களின் மொடர்ன் ஆடைகள் பிறரைக் கவரத் தான் என்றால் கவர்ச்சியின் விளைவுகளையும் ஏற்கத் தானே வேண்டும்?. உடலில் தேனைத் தடவிக் கொண்டிருந்தால் எறும்புகள் வரத்தானே செய்யும்?*

*அது மட்டுமல்ல ஆடை அணிவதும், ஏன் அணியாமல் இருப்பதும் கூட உங்கள் உரிமையே. ஆனால் (மொடர்ன் இல்லாத ஆடையானாலும் சரி) பண்பாட்டு வெளிப்பாடு, கிளர்ச்சியூட்டாமை, சுய கௌரவத்தைப் பாதுகாத்தல், அழகை மெருகூட்டல் ஆகிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு ஆடையினைத் தேர்வு செய்து அணியுங்கள். எல்லாம் நன்மையாகவே அமையும்.*



படகோட்டி படத்தில் மீனவர் வேடத்தில் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 52

# புரட்சித் தலைவர் வாழ்க!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** தனது ரசிகர்கள், தொண்டர்களின் சந்தோஷத்துக்காக தன்னை வருத்திக் கொள்ளவும், சிரமம் எடுத்து பயணம் மேற்கொள்ளவும் தயங்காதவர். நடிகர் ரசிகர் என்ற தொடர்பையும் தாண்டி தனது ரசிகர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தவர்.

புதுச்சேரியில் மீனவர் குப்பத்தைச் சேர்ந்த இளைஞர் கோவிந்தசாமி. எம்.ஜி.ஆரின் ரசிகர் என்பதைவிட வெறியர். தனது திருமணத்தை எம்.ஜி.ஆர் நடத்தி வைக்க வேண்டும் என்று கோவிந்தசாமிக்கு ஆசை. இது சம்பந்தமாக கோவிந்தசாமி எம்.ஜி.ஆருக்கு சிலமுறை கடிதம் எழுதினார். எம்.ஜி.ஆரின் உதவியாளர்களே கடிதத்தைப் பார்த்துவிட்டு, 'புதுச்சேரியில் மீனவர் குப்பத்தில் இருக்கும் யாரோ ஒருவரின் திருமணத்தை நடத்தி வைக்க எம்.ஜி.ஆரால் போகமுடியுமா?' என்று நினைத்தார்களோ என்னவோ கடிதம் எம்.ஜி.ஆரின் பார்வைக்கே போகவில்லை.

ஒருநாள் கோவிந்தசாமியின் பெற்றோரும் உறவினர்களும் எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்துக்கு வந்துவிட்டனர். தன்னை பார்க்க காத்திருந்தவர்களை ஒவ்வொருவராக சந்தித்த எம்.ஜி.ஆரிடம் விஷயத்தைக் கூறினர். "நாங்க எழுதின கடிதத்துக்கு உங்களிடம் இருந்து பதில் இல்லாததால் கோவிந்தசாமி பித்துப் பிடிச்சவன்போல இருக்கிறான். கடலில் மீன் பிடிக்கவும் சரியாக போவதில்லை. நீங்கதான் கோவிந்தசாமியின் திருமணத்தை நடத்திவெச்சு அவனைக் காப்பாத்தணும்" என்று உருக்கமாக கோரினர்.

இது எம்.ஜி.ஆரை வெகுவாக பாதித்து விட்டது. "விரைவிலேயே புதுச்சேரிக்கு சுற்றுப் பயணம் வர இருக்கிறேன். நீங்கள் அப்போது அங்கு வந்து என்னை சந்தியுங்கள். உங்கள் மகன் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்" என்று அவர்களை எம்.ஜி.ஆர் சமாதானப்படுத்தினார். அந்த மீனவர்கள் நம்பிக்கையுடன் சென்றனர்.

சிலநாட்கள் கழித்து புதுச்சேரிக்கு எம்.ஜி.ஆர் சுற்றுப் பயணம் சென்றார். அவர் தங்கியிருந்த இடத்துக்கு மீனவர் குப்பத்தைச் சேர்ந்தவர்கள் வந்தனர். விஷயம் எம்.ஜி.ஆருக்குத் தெரிவிக்கப் பட்டது. "திருமணத்தை நடத்தி வைத்து விட்டு கூட்டத்துக்கு போகலாம். மணமக்களையும் உறவினர்களையும் கூப்பிடுங்கள்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். மணமக்களை அழைத்துவர எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் சென்றபோதுதான் அவர்களுக்கு விஷயமே தெரிந்தது.

கோவிந்தசாமியின் உறவினர்கள் தயங்கியபடியே, "மன்னிக்கணும். எங்க குப்பத்துக்கு எம்.ஜி.ஆர் நேரில் வந்து தாலி எடுத்துக் கொடுத்தால்தான் திருமணம் பண்ணிக்குவேன் என்று கோவிந்தசாமி பிடிவாதம் பிடிக்கிறான்" என்று மென்று முழுங்கி தெரிவித்தனர். உதவியாளர்களுக்கு கோபம் வந்துவிட்டது. "அது எப்படி முடியும்? கடற்கரையோரம் உள்ள குப்பத்துக்கு மணலிலே வரணும். அங்கேயெல்லாம் வண்டி வராது" என்று சத்தமாக தெரிவித்தனர். பதிலுக்கு, "பாதையிலே மணலில் நாங்க செடி, தழைகளை போடுறோம். அதுமேல, வண்டி ஓட்டிக்கிட்டு வந்துடுங்க" என்று மீனவர்கள் கெஞ்சினர்.

வெளியே நடந்து கொண்டிருந்த கசமுசா, எம்.ஜி.ஆரின் காதுகளில் விழுந்தது. உதவியாளர்களை அழைத்து விவரம் கேட்டார். அவர்கள் சொன்னதும் சில விநாடிகள் யோசித்துவிட்டு, "சரி, போகலாம்" என்றார். உதவியாளர்கள் பதறிப்போய், "நாங்கள் விசாரிச்சோம். கடற்கரை மணலில் வண்டி நின்று விட்டால் நடந்துதான் போகணும். அவங்க குப்பம் இரண்டு கிலோ மீட்டருக்கு மேலே தூரமாக உள்ளது. நீங்கள் போக வேண்டாம்" என்றனர்.

எம்.ஜி.ஆர் கோபத்துடன், "என்ன பேசறீங்க? என்னோட ரசிகன். அவனுக்கு நான் எந்த உதவியும் செய்யலே. அவனை நான் பார்த்தது கூட இல்லே. ஆனாலும் என் மேலே வெறித்தனமான அன்போட இருக்கான். நான் வந்து நடத்தினால்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு பித்துப் பிடிச்சா மாதிரி இருக்கான். நான் போய்த் தான் ஆகணும். வண்டி நின்னுபோனா நடந்து போறேன். போய் ஏற்பாடு பண்ணுங்கய்யா" என்றார். அடுத்த விநாடி, மீனவர் குப்பத்துக்கு எம்.ஜி.ஆர் செல்வதற்கான ஏற்பாடுகள் தொடங்கின.

மணலிலும் பாதுகாப்பாக செல்லும் வகையில் ஃபோர் வீல் டிரைவ் எனப்படும் நான்கு சக்கரங்களும் ஒன்றாக இயங்கும் ஜீப்பில் எம்.ஜி.ஆர் சென்றார். கடலை ஒட்டிய மணல் பகுதியில் வழிநெடுக மீனவர்கள் திரண்டு நின்று எம்.ஜி.ஆர் தங்கள் குப்பத்துக்கு வருவதை பிரமிப்பு நீங்காமல் பார்த்தபடியே அவரை வாழ்த்தி கோஷமிட்டனர்.

பாதி வழியில், உதவியாளர்கள் பயந்த படியே திடீரென மணலில் ஜீப் சிக்கிக் கொண்டது. டிரைவர் எவ்வளவோ முயன்றும் நின்ற இடத்திலேயே சக்கரங்கள் சுற்றிச்சுற்றி மணலை தோண்டியதே தவிர, நகரவில்லை. எம்.ஜி.ஆர் ஜீப்பை விட்டு இறங்கிவிட்டார்.

பாதையில் நின்றிருந்த மீனவர்கள் உதவிக்கு ஓடிவந்தனர். பலர் ஒன்று சேர்ந்து ஜீப்பை 'அலாக்'காக தூக்கி வேறு இடத்தில் வைத்தனர். மீனவ மக்களின் ஆரவாரத்துக்கிடையே, எம்.ஜி.ஆர் தலைக்கு மேல் கைகளை உயரே தூக்கி வணங்கியபடி மீண்டும் பயணத்தைத் தொடங்கினார்.

**எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது மின்சார விளக்கு இல்லாத வீடுகளே இருக்கக் கூடாது என்று 'வீட்டுக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் வழங்கினார். குக்கிராமங்களுக்கும் மின்னொளி வசதி அளித்தார்.**

கோவிந்தசாமியின் மீனவ குப்பத்தை ஜீப் அடைந்தபோது பெரிய கூட்டம் ஓடிவந்து வரவேற்றது. அதில் முதலில் ஓடிவந்தவர் இளைஞர் கோவிந்தசாமி. 'எம்.ஜி.ஆர் வரும்வரை தாடியை எடுக்க மாட்டேன்' என்ற சபதம் காரணமாக நீண்டு வளர்ந்திருந்த அடர்த்தியான தாடியுடன் கண்களில் நீர்வழிய, "எனக்காக நேரில் வந்த தெய்வமே" என்று கதறியபடி எம்.ஜி.ஆரின் காலில் விழுந்தார் கோவிந்தசாமி. அவரை வாரி அணைத்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்!

பக்கத்திலேயே மேடான இடத்தில் சிறிய பந்தல் போடப்பட்டிருந்தது. பதினைந்து நிமிடத்தில் மணமக்கள் தயாராகி வந்தனர். எம்.ஜி.ஆர் தாலி எடுத்துக் கொடுக்க, மணமகள் கழுத்தில் கட்டினார் கோவிந்தசாமி. "இனிமே ஒழுங்கா குடும்பத்தையும் தொழிலையும் கவனி" என்று கோவிந்தசாமியிடம் கூறிய எம்.ஜி.ஆர், மணமக்களிடம் தனித்தனியே கனமான கவர்களை பரிசளித்தார்.

மீனவர்கள் கொடுத்த கோலி சோடாவை மரியாதைக்காக சிறிது குடித்துவிட்டு ஜீப்பில் ஏறி நாலாபுறமும் திரும்பி கையசைத்தபடி எம்.ஜி.ஆர் விடைபெற்றபோது, கடல் அலைகளின் பேரிரைச்சலையும் அடக்கிவிட்டு, விண்ணை முட்ட எழுந்தது கோஷம்...

"புரட்சித் தலைவர் வாழ்க!"

தொடரும்...



மிகவும் எளிமையான முறையில் கீற்று வேயப்பட்ட மேடையில் நின்று எம்.ஜி.ஆர். பேசுகிறார்.



திருமண விழா ஒன்றில் தனது காலில் விழ முயற்சிக்கும் மணமகனை எம்.ஜி.ஆர். தடுத்து ஆசி கூறுகிறார். அருகே படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான பி.ஆர். பந்துலு.




# ஆன்மீகம் அறிவியலுக்கு அடிப்படை

போர்த்துக்கல்லை சேர்ந்த பெர்டினான்ட் மெகல்லன் 1480 1521ல் வாழ்ந்தவர். பல ஆய்வுகளை செய்தார். கி.பி.1505ல், பூமி உருண்டை என்று அறிவித்தவர் அவரே. உலகமும் அதை ஏற்றுக்கொண்டது. அதே காலகட்டத்தில் வாழ்ந்த கோப்பர்நிக்கஸ் என்ற வான் ஆராய்ச்சியாளரும், அவருக்குப் பின் வந்த கலிலியோவும் மேற்கண்ட கண்டுபிடிப்பை உறுதி செய்தனர். மேலும், பூமி அந்தரத்தில் தொங்குகிறது என்றும், சூரியனை மையமாக வைத்து சுற்றுகிறது என்றும் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்தனர். ஆனால், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் கி.மு.700ல் வாழ்ந்த தேவனுடைய தீர்க்கதரிசியாகிய ஏசாயா, 'அவர்(கர்த்தர்) பூமியின் உருண்டையின் மேல்வீற்றிருக்கிறார்' (ஏசா.40:22) என்று அறிவித்துள்ளார். கி.மு.2600ல் வாழ்ந்த யோபு என்ற பக்தன், 'அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்' (யோபு26:7) என்று கூறியுள்ளனர். இவர்கள் எதைக் கொண்டு இந்த உண்மையைக் கண்டுபிடித்தனர். எல்லாவற்றையும் படைத்த சர்வ வல்லவராகிய தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுத்து எழுதியுள்ளனர். ஏனெனில், 'வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் (தேவனுடைய மனிதர்களுக்கு) அருளப்பட்டிருக்கிறது' (2தீமோ.3:16) என்று எழுதப்பட்டுள்ளது. பார்த்தீர்களா! அறிவியலாளர்கள் முன்னால், ஆன்மிகம் பேசுவோர் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற கருத்தை இனியேனும் மாற்றிக் கொள்வீர்களா? ஆன்மிகமே அறிவியலுக்கு அடிப்படை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.



# ஏன் வடக்கு பக்கம் தலை வைத்து படுக்ககூடாது?

காந்தமானது இரும்பு, செம்பு போன்ற உலோகப் பொருட்களை ஈர்க்கும் தன்மை கொண்டது என அனைவரும் அறிவோம். வட, தென் துருவமென காந்தத்திற்கு இரு துருவங்கள் உள்ளன. இரண்டு ஒரே மாதிரியான துருவங்கள் ஒன்றை ஒன்று விலக்கும். அதுவே எதிர் எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் தன்மை கொண்டவை.

சூரியனின் அதிகப்படியான வெப்பத்தினால் பூமியின் கிழக்குப் பகுதி சூடாகவும், மேற்கு பகுதி குளிர்ச்சியுடனும் உள்ளதால், வலிமையான மற்றும் வெப்பமான மின்னோட்டம் கிழக்குத் திசையில் இருந்து மேற்கு திசையை நோக்கி உருவாக்கப்படுகிறது. இவ்வாறு உருவான மின்னோட்டத்தின் திசைக்கு வலது பக்கத்தில் உள்ள வடக்கு திசை நேர் மின்னோட்டத்தையும், இடது பக்கத்தில் உள்ள தெற்கு திசை எதிர் மின்னோட்டத்தையும் பெறுகிறது. இதன் காரணமாக பூமி ஓர் காந்தமானது. சூரிய வெப்பத்தினால் காந்தமான பூமி தன்னைத் தானே சுற்றுவதாலும் காந்த சக்தியைப் பெறுகிறது.

மனிதனின் உடலில் உள்ள இரத்தமானது சிவப்பணுக்கள், வெள்ளையணுக்களைத் தன்னுள் கொண்டது. சிவப்பணுக்களின் உற்பத்திக்கு இரும்புச்சத்து தேவைப்படுவதால், மனித உடலில் இரும்புச்சத்துக்கள் உள்ளன. இந்த இரும்புச்சத்துக்கள் காரணமாகத் தான் மனிதன் பூமியால் ஈர்க்கப்படுகின்றான்.

பூமியின் வட துருவத்தில் நேர் மின்னோட்டமும், தென் துருவத்தில் எதிர் மின்னோட்டமும் உள்ளது என்று பார்த்தோம். அதேப் போல் எதிர் எதிர் துருவங்கள் தான் ஒன்றையொன்று ஈர்க்கும் என்றும் பார்த்தோம். அந்த வகையில் மனிதனின் தலை நேர் மின்னோட்டமும், கால் எதிர் மின்னோட்டமும் கொண்டது.

மனிதன் தூங்கும் போது தெற்கு பக்கம் தலை வைத்து, வடக்குப் பக்கம் கால் நீட்டித் தூங்கும் போது, பூமியின் நேர் மின்னோட்டம் மனிதனின் எதிர் மின்னோட்டத்துடன் இருக்கும். அதாவது மின்னோட்டமானது சீரான நிலையில் இருக்கும். இதனால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

ஆனால் வடக்குப் பக்கம் தலை வைத்து, தெற்கு பக்கம் கால் நீட்டிப் படுப்பதால், மின்னோட்டங்களுக்கிடையே இடையூறு ஏற்பட்டு, அதனால் உடலின் ஆற்றல் சீர்குலைந்து, இத்திசையில் படுக்கும் போதெல்லாம் உடல்நலத்தில் பிரச்சனைகளை சந்திக்க நேரிகிறது. இதன் காரணமாகத் தான் வடக்குப் பக்கம் தலை வைத்து படுக்காதே என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

# இந்தவார ராசி பலன்கள்

## 23.04.2016 – 29.04.2016

**மேஷம்:** பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியன் ராசியிலேயே உச்ச பலத்துடன் இருப்பதால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கதவைத் தட்டும். புதுமணத்தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். சுக்கிரபலம் காரணமாக பொன், பொருள் சேர்க்கை உண்டு. விலகி நின்ற சொந்தங்கள் நெருங்கி வந்து உறவாடுவார்கள். சந்திரனின் சஞ்சாரம் காரணமாக நிறை, குறைகள் உண்டு. தாயார் மூலம் மருத்துவச் செலவுகளுக்கு வாய்ப்புண்டு. ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி திங்கட்கிழமை வந்துசேரும்.

**ரிஷபம்:** சூரியன் உச்ச பலத்துடன் இருப்பதால், தந்தையுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் இருக்கும். பூர்விகச் சொத்து சம்பந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. சுக்கிரன் சாதகமாக இருப்பதால் குடும்பத்தில் நிறைவான நிலை இருக்கும். சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக வீண் செலவுகள் உண்டாகும். கண், தொண்டை சம்பந்தமாக உபாதைகள் வந்து நீங்கும். தாமதமாகி வந்த அரசு காரியங்கள் உடனே முடியும். புதிய தொழிலில் கால்பதிக்கும் நேரம் வந்துள்ளதால் புதிய ஏஜென்சி, ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**மிதுனம்:** சுக்கிரன் சுபபலம் பெறுவதால் உற்சாகமடைவீர்கள். செவ்வாய் சாதகமாக இருப்பதால் வராது என்று நினைத்த பணம் கைக்கு வந்து சேரும். மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். குடும்பத்துடன் உல்லாசச் சுற்றுலா சென்று வருவீர்கள். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பை எதிர்பார்க்கலாம். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடிவரும். பழைய வண்டியை மாற்றி புது வண்டியை வாங்குவீர்கள்.

**கடகம்:** சூரியன் 10ல் உச்சம் பெறுவதால் புதிய உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். கையில் காசு பணம் தாராளமாகப் புரளும். வீடு, நிலம், சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். ராகு 2ல் தொடர்வதால் திடீர் செலவுகள் இருக்கும். சுக்கிரனின் அருளால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. மகன் மருமகளுக்கு வாரிசு உருவாகிய இனிப்பான செய்தி கிடைக்கும். உத்யோகத்தில் அலைச்சல், பயணங்கள் இருந்தாலும் சலுகைகள் கிடைக்கும். வியாபாரம் கைகொடுக்கும். முயற்சிகள் பலன் தரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.




**சிம்மம்:** ராசியில் ராகு தொடர்வதால் அவசிய, அநாவசிய அலைச்சல், செலவுகள் இருக்கும். சுக்கிரன், குரு சமசப்தம பார்வை காரணமாக நிறை, குறைகள் உண்டு. சொந்த பந்தங்களின் விசேஷங்கள் காரணமாக பரிசு, மொய் பணம் என்று செலவுகள் வரும். செவ்வாய் சாதகமாக இருப்பதால் பூர்வீகச் சொத்து சம்பந்தமாக நல்ல முடிவு வரும். சூரியன் உச்சமாக இருப்பதால் எதையும் சவாலாக செய்து முடிப்பீர்கள். நண்பர்களுடன் அதிக நெருக்கம் வேண்டாம். வியாபாரம் சீராக இருக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பண பிரச்னைகள் தீரும்.

**கன்னி:** சூரியன் உச்சம் பெற்று தன, வாக்கு ஸ்தானத்தைப் பார்ப்பதால் செல்வாக்கு கூடும். கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். செவ்வாயின் பார்வை காரணமாக உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். சுக்கிரன் சுபபலன் பெறுவதால் இஷ்ட தெய்வ ஆலயங்களுக்குச் சென்று வருவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடுகளால் மன உளைச்சலும், பணச் செலவுகளும் வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். கண் சம்பந்தமான உபாதைகளை அலட்சியம் செய்யாதீர்கள்.

**துலாம்:** ராசிநாதனான சுக்கிரன் உங்களுக்கு சுபயோக சுபபலத்தை தருகிறார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மனைவியின் ஆசையை நிறைவேற்றுவீர்கள். சூரியன், புதன் போன்றோரின் பார்வை காரணமாக உத்யோகம் சாதகமாக இருக்கும். பதவி உயர்வு யோகம் உண்டு. மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்கள் குணமடைந்து வீடு திரும்புவார்கள். பெண்களுக்கு பிறந்த வீட்டிலிருந்து உதவிகள் கிடைக்கும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு அந்த பாக்கியம் கிட்டும். எதிர்பார்த்த டெண்டர் ஓர்டர் கிடைக்கும்.

**விருச்சிகம்:** ராசிநாதனான செவ்வாயின் பார்வை பலம் காரணமாக எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உயர்பதவியில் இருக்கும் உறவினர் உதவுவார். சூரியன் 6ல் உச்சம் பெறுவதால் நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். சுக்கிரன், குரு போன்றோரின் பார்வையால் சுப பலம் உண்டு. மழலை வரத்திற்காக காத்திருப்போருக்கான நேரம் கனிந்துள்ளது. கணவன் மனைவி இடையே இல்லறம் இனிக்கும். மனைவி வகையில் திடீர் பண வரவிற்கு இடமுண்டு. வியாபாரம் லாபகரமாக இருக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் அனுசரணையாகப் போவது நல்லது.

**தனுசு:** பாக்கிய ஸ்தானாதிபதி சூரியன் உச்சமாக இருப்பதால் எங்கும், எதிலும் வெற்றியுண்டு. தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்பும் கட்டாயம் ஏற்படலாம். சுக்கிரன் பலமாக இருப்பதால் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். செவ்வாயின் அருள் காரணமாக சொத்து வாங்கும் யோகம் உண்டு. மாமியாரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வண்டி வகையில் செலவுகள் இருக்கும். பயணத் திட்டங்களில் திடீர் மாற்றங்கள் வரும். இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

**மகரம்:** செவ்வாயின் சஞ்சாரம் காரணமாக நிறைகுறைகள் உண்டு. வழக்குகளில் சாதகமான தீர்ப்பு வரும். சொத்துகளை விற்பது, வாங்குவது சம்பந்தமாக முயற்சிகள் வெற்றி தரும். வயிறு சம்பந்தமான உபாதைகளை அலட்சியம் செய்யாதீர்கள். சுக்கிரன் உச்சமாக இருப்பதால் பெண்கள் விரும்பிய ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வார்கள். சொந்த பந்தங்களின் குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம். 4ல் புதன் இருப்பதால் தாயாரின் உடல் நலம் பாதிக்கப்படலாம். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**கும்பம்:** குரு பார்வையின் பலம் காரணமாக, தடங்கல்கள், மனக்குறைகள் நீங்கும். எந்த வேலையையும் உடனே செய்து முடிக்க ஆர்வம் காட்டுவீர்கள். கடல் கடந்து செல்வதற்கான விசா கைக்கு வந்து சேரும். சுக்கிரன் 2ல் இருப்பதால் குலதெய்வ நேர்த்திக் கடன்கள், பரிகார பூஜைகளை செய்து முடிப்பீர்கள். மாணவர்கள் உயர்கல்வி பயில வாய்ப்பு கூடிவரும். ராகு 7ல் தொடர்வதால் நண்பர்களிடையே அதிக நெருக்கம் வேண்டாம். பயணத்தின்போது கவனம் தேவை. முடிந்தவரை இரவுநேரப் பயணத்தைத் தவிர்க்கவும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய அலுவலகக் கிளை தொடங்குவதற்கான யோக அமைப்பு உள்ளது.

**மீனம்:** வாக்கு ஸ்தானத்தில் சூரியன் உச்சமாக இருப்பதால் சாதக, பாதகங்கள் உண்டு. நீண்டநாள் இழுபறி விஷயங்கள் ஒரு முடிவிற்கு வரும். குடும்ப விஷயங்களில் யோசித்து, கலந்து பேசி முடிவெடுக்கவும். மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். செவ்வாய் பாக்ய ஸ்தானத்தைப் பார்ப்பதால் நிலம், வீடு வாங்கும் யோகம் உண்டு. புதுமணத்தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் சாதகமான நிலை இருந்தாலும், அலைச்சல், பயணங்கள் இருக்கும். மாமனார் மூலம் ஆதாயம் உண்டு. தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகளுக்கு இடமுண்டு.


பீஷ்மர்

பால்ராஜிற்கும் பிரபாகரனிற்குமிடையிலான உறவில் கணிசமான விரிசலை ஏற்படுத்தியது பால்ராஜின் திருமணப்பிரச்சனை என்பதை கடந்த வாரம் குறிப்பிட்டோம். நேரடியாக அந்த விவகாரத்திற்குள் நுழையாமல், வேறொரு விடயத்தை குறிப்பிட வேண்டும்.

மன்னார் முனையையும் மணலாற்றையும் இணைத்து மண் அரண் அமைக்கும் திட்டத்தை பால்ராஜ் முன்வைத்தபோது, கணிசமான தளபதிகள் அதைநிராகரித்ததை குறிப்பிட்டோம். இதேகாலப்பகுதியில் இன்னொரு விடயமும் நடந்தது.

புலிகளுடனான சமாதான பேச்சுக்கள் குழம்ப ஆரம்பித்ததும் அரசு நீண்ட போருக்கு தயாரானது. இராணுவத்தின் கட்டமைப்பில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டது. இலங்கை படைக் கட்டுமானத்தில் தனித்தனியாக இயங்கிய புலனாய்வு சேவைகளை ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து, புலனாய்வு தகவல்களை நிரல்படுத்தி, ஒவ்வொரு புலனாய்வுசேவைக்கும் கடமைகள் பிரித்து கொடுக்கப்பட்டன. முப்படைகளும் நவீன மயப்படுத்தப்பட்டது. இதன் ஒருகட்டமான 58வது டிவிசன் உருவாக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளிற்கு கோத்தபாய தலைமைத்துவம் கொடுத்தார். சரத் பொன்சேகா நடைமுறைப்படுத்தினார்.

58வது டிவிசன் படையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. முழுமை




யான ஒரு தாக்குதல் டிவிசனாக உருவாக்கப்பட்டது. பிரிகேடியர் சவேந்திர சில்வா அதன் கட்டளை தளபதியாக நியமிக்கப்பட்டார். இந்த படையணி மன்னாரின் தள்ளாடி முகாமில் நிலைகொண்டிருந்தது.

வன்னி யுத்தமுனையை மன்னாரில் இருந்துதான் இராணுவம் ஆரம்பிக்கப் போகிறது, 58வது டிவிசன்தான் யுத்தத்தின் பிரதான பாத்திரம் வகிக்கப் போகிறதென்பதை பால்ராஜ் முன்னரே கணித்தார். வெளிப்படையாக சொன்னால், விடுதலைப்புலிகளின் உயர்மட்ட தளபதிகளில் வேறு யாரும் இதை கணித்ததாக தெரியவில்லை. தனது திட்டங்களை அமைப்பு ஏற்றுக்கொள்ளுகிறதா இல்லையா என்பதை பற்றி பால்ராஜ் கவலைப்படவில்லை. தனது கடமையை செய்ய வேண்டுமென விரும்பினார்.

தலைமைத்துவத்தின் அனுமதி பெறாமல், தள்ளாடி படைமுகாமின் வேவுத்தரவுகளை திரட்டத் தொடங்கினார் பால்ராஜ். முன்னர் விசேடவேவு அணியென ஒரு பிரிவு இருந்தது. மூன்றாம் ஈழப்போரின் இறுதிக்காலங்களில் அந்தப்படையணி செயலிழந்து விட்டது. இந்த சமயத்தில் புலிகள் ஆயுதங்களை நம்பி, வேவுத்தரவுகள் திரட்டாத யுத்தமுறைக்கு மாற்றமடைந்து விட்டதை முன்னர் குறிப்பிட்டிருந்தேன். விசேடவேவு அணியில் இருந்தவர்கள் தீபன், பால்ராஜ் ஆகியோரின் அணிக்கு சென்றுவிட்டனர். இவர்களை பால்ராஜ் பயன்படுத்தினார்.

ஒரு வேவு அணியை உருவாக்கி தள்ளாடிக்குள் அக்குவேறு ஆணிவேறாக வேவுத் தரவுகளை திரட்டினார். வேவுத் தரவுகள் திரட்டுபவர்கள், தாக்குதலிற்கு சற்றுமுன்னர்வரை அதை நிறுத்தமாட்டார்கள். வேவுத்தகவல்களை இறுதிசெய்த பின் முகாமின் வரைபடத்தை தயார் செய்வார்கள். அதன்பின், தாக்குதல் திட்டத்தை வரைந்து, அணிகளிற்கு பணிகளை பிரித்து வழங்குவார்கள். பின்னர் பயிற்சி ஆரம்பிக்கும். பயிற்சி நடந்து கொண்டிருந்தாலும் வேவு அணிகள் தமது பணியை நிறுத்தமாட்டார்கள். ஏனெனில், இராணுவத்தின் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு, திட்டம் குழம்பிவிடக்கூடாதென்பதற்காக இப்படி செய்வார்கள்.

பால்ராஜும் வேவுக்கு அணிகளை இறக்கி, வரைபடம் தயாரித்து, தாக்குதல் திட்டமொன்றை தயார்செய்தார். இதன் பின்னர்தான் தலைமையிடம் விடயத்தை கொண்டு சென்றார். பால்ராஜின் திட்டத்தில் உறுதியான முடிவெடுக்க முடியாமல் தலைமை திண்டாடியது. இந்த சமயத்தில், வேவுக்கு சென்ற சமயத்தில் இரண்டு போராளிகள் தப்பிச்சென்று இராணுவத்தினரிடம் சரணடைந்து விட்டனர். அதன்பின்னர் மன்னார் தாக்குதல்திட்டத்தைபுலிகள் கைவிட்டனர்.

பால்ராஜ் மன்னார் களமுனையை மையப்படுத்தி இரண்டு திட்டங்களை பரிந்துரைத்தார். இரண்டையுமே புலிகள் கணக்கில் கொள்ளவில்லை. ஒருவேளை பால்ராஜின் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால், இன்று எப்படியான நிலைமை இருந்திருக்கும்.?

இந்த விவகாரங்களின் முன்னர் நடந்த முக்கியமான சம்பவமொன்றை குறிப்பிட வேண்டும். அது பால்ராஜின் திருமண விவகாரம். எவ்வளவு புகழ்பெற்ற மனிதர்கள் என்றாலும் தனிப்பட்ட வாழ்வில் சில கறுப்பு பக்கங்கள் இருக்கும். அந்த பக்கள் மட்டுமே அந்த ஆளுமையின் அடையாளம் அல்ல. அந்த ஆளுமையின் புகழைதகர்ப்பவையும் அல்ல. மனிதர்களாக பிறந்த எல்லோரிடமும் ஏதோ ஒரு பலவீனம் இருக்கும். மனிதர்களை புரிந்தவர்களிற்கு, பலவீனம் ஒரு விவகாரமாக தெரிவதில்லை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் எனில், பால்ராஜின் கறுப்பு பக்கத்திற்குள் நுழையப் போகிறோம்.

மாபெரும் போர்த்தளபதியான பால்ராஜிற்கும் இப்படியான சில கறுப்பு பக்கங்கள் உள்ளது. அதை இங்கு ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், வரலாற்றை யாராலும் திரிக்க முடியாது. மாபெரும் தளபதியான அவரைப்பற்றிய முழுமையான வரலாற்றை எழுத வேண்டுமெனில், எல்லா விடயங்களையும் பேச வேண்டும். அப்படியானால்தான் அவரை முழுமையாக புரிந்து கொள்ள முடியும். பால்ராஜை இழிவு செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இதை பதிவு செய்யவில்லை.

பால்ராஜ் நீண்டகாலமாக திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணமே செய்து கொள்வதில்லையென்ற முடிவில் இருந்தார். எனினும், 36 வயதின் பின் வரதா என்ற விடுதலைப்புலிகளின் மகளிர் அணியை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்தார். இவர் மகளிர் தாக்குதலணி, கடற்புலி, நிதித்துறை பிரிவுகளில் செயற்பட்டவர். பிரபாகரனின் நெருக்கமான உறவுப்பெண். அவர் கடற்புலிகளில் இருந்த சமயத்தில் பால்ராஜுடன் திருமணம் செய்தார்.

எனினும், திருமணமான சிறிதுகாலத்திலேயே இருவருக்குமிடையில் கசப்பு ஏற்பட்டு பிரிந்துவிட்டனர். பால்ராஜ் அவரை சித்திரவதைப்படுத்தியதாகத்தான் தகவல் வந்தது. எனினும், வரதா இந்த தகவல்களை வெளியில் சொல்லாமல் மனதிற்குள் பூட்டி வைத்து. குமைந்து கொண்டிருந்தார். இனியும் தாங்க முடியாதென்ற கட்டம் உருவானபோது தனக்குநெருக்கமான கடற்புலிகளின் மகளிர் அணி போராளிகள் சிலரிடம் விடயத்தை சொல்லியுள்ளார். அந்த தகவல் சூசைக்கு சென்றது. பிரபாகரனின் உறவுப்பெண்ணான பாலராஜின் மனைவி வரதா, சூசையுடன் நீண்டகாலம் பணிபுரிந்தவர். இருவருக்குமிடையில் அறிமுகமும் இருந்தது. பின்னர் ஒருநாள் சூசையிடம் சென்ற வரதா தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்ணீர்விட்டபடி விலாவாரியாக சொன்னார். இனிமேல் தன்னால் பால்ராஜுடன் சேர்ந்து வாழவே முடியாதென சொல்லி, நிதித்துறை கடமைக்கு சென்றார்.

சூசை இந்த விவகாரத்தை பிரபாகரனிடம் சேர்ப்பித்தார். வரதா பிரபகரனின் உறவுக்கார பெண். நல்ல அறிமுகம் உடையவர். சம்பவத்தை கேட்ட பிரபாகரனிற்கு பயங்கர கோபம். வரதா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. பால்ராஜால் மனைவியை உடல்ரீதியாக திருப்திப்படுத்தும் வல்லமை குறைந்து விட்டது, அந்த பலவீனத்தை மறைக்க மனைவி மீது மோசமான சித்திரவதையை செய்திருக்கிறார் என்பதே புலிகள் பால்ராஜின் மேல் எழுதிய குற்றப்பத்திரம்.

இந்த சமயத்தில் பால்ராஜிற்கு நெடுங்கேணியிலுள்ள ஒரு பெண்ணுடன் தொடர்பிருந்ததாக இன்னொரு கதை கிளம்பியது. இரண்டும் தர்க்க முரணுடையவை. எனினும், புலிகள் பால்ராஜின் முக்கியத்துவம் கருதி அதை நுணுகி விசாரிக்கவில்லை.

பால்ராஜின் நடவடிக்கைகளால் கோபமடைந்த பிரபாகரன், அப்போது புலனாய்வுத்துறையின் உள்ளகப்பாதுகாப்பு பிரிவிற்கு பொறுப்பாக இருந்த காந்தியிடம் பால்ராஜை ஒப்படைக்க முடிவுசெய்தார். அப்போது வள்ளிபுனத்தில் இருந்த புலிகளின் பெரிய தடுப்புமுகாமான அல்பா 2 இல் வைத்து பால்ராஜிற்கு கவுன்சிலிங் செய்யசொல்லி உத்தரவிட்டார்.

(தொடரும்)






பிரபாகரனின் கைத்துப்பாக்கியை பரிசோதிக்கும் சவேந்திர சில்வா, கருணா

# பெண்களுக்கு முதுகு வலி வர முக்கிய காரணம் சமையலறை



பெண்களில் 30 வயதைக் கடந்த பலரும் முதுகு, இடுப்பு மற்றும் கழுத்து வலியால் சிரமப்படுவார்கள். வீட்டு வேலைகளை முடித்ததும் சில பெண்களுக்கு விரல்கள் மரத்துவிடும். கழுத்தைத் திருப்பவே முடியாத அளவுக்கு வலி இருக்கும். அந்த வலி மற்ற பாகங்களுக்கும் பரவும்.

இந்த வலிக்கான முக்கியமான காரணம்ஞ் சமையல் அறைகளில் நாம் செய்யும் சின்னச் சின்னத் தவறுகள்தான். இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க, 'கிச்சன் எர்கனோமிக்ஸ்' எனப்படும் சமையல் அறைப் பணிச் சூழல் சரியான முறையில் இருந்தாலே போதும்.

### சமைக்கும் முறை

சமையல் மேடையின் உயரம் நமது உயரத்துக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். மேடை உயரமாக இருந்தால் கைகளை ஊன்றிக்கொண்டோ அல்லது சமையல் பாத்திரத்தை எக்கிப்பார்த்தோ சமைப்பதுபோல இருக்கக்கூடாது. இப்படிச் சமைத்தால், கை மூட்டுப்பகுதியைச் சிரமப்பட்டுத் தூக்க வேண்டி இருக்கும். அதனால், அந்தப் பகுதியில் உள்ள தசைகளில் பிடிப்பு ஏற்படும். பிறகு, இது வலியாக மாறும்.

உயரம் குறைவாக இருப்பவர்கள் சரியான உயரத்தில் மேடை இருக்கும் வகையில் மரப்பலகைகளைப் பயன்படுத்தி அதன் மீது நின்று சமைக்கலாம்.

### பாத்திரம் கழுவும் முறை

பாத்திரம் கழுவப் பயன்படும் 'சிங்க்' உயரம் உங்களது உயரத்துக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். குனிந்தோ அல்லது எட்டிப் பார்த்தோ பாத்திரங்களைக் கழுவ வேண்டாத நிலையில் இருக்க வேண்டும். இதனால், முதுகு, கை மற்றும் கழுத்து வலி வராமல் தடுக்கலாம்.

### கிரைண்டர் பயன்படுத்தும் முறை

கிரைண்டரை நின்ற நிலையில் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஏற்றவாறு கிரைண்டரைச் சற்று உயரத்தில் வைத்துகொள்ள வேண்டும். கிரைண்டரைத் தரையில் வைத்துவிட்டு அடிக்கடி குனிந்து, நிமிர்ந்து வேலை செய்யும்போது முதுகுப் பகுதிகளில் இருக்கும் தசைகளில் இறுக்கம் ஏற்பட்டு, முதுகு வலி உண்டாகும்.

### பொருட்களை எடுக்கும் முறை

சமைக்கும்போது திடீரென பின்னால் இருக்கும் ஒரு பொருளை எடுக்க வேண்டி இருந்தால், கைகளை மட்டும் பின்னே நீட்டி அந்தப் பொருளை எடுப்பது முற்றிலும் தவறு.


அப்போது இடுப்புப் பகுதித் தசைகளில் இறுக்கம் ஏற்பட்டு இடுப்பு வலி வரும். கண்ணுக்குத் தென்படும் தூரத்தில் இருக்கும் பொருட்களை மட்டுமே உடலைத் திருப்பாமல் கைகளை மாத்திரம் நீட்டி எடுக்கலாம். பார்வை தூரத்துக்கு அப்பால் இருக்கும் பொருட்களை எடுக்க, நாம் முழுவதுமாக அந்தப் பொருளை நோக்கித் திரும்பியே ஆக வேண்டும்.

### காய்கறிகளை வெட்டும் முறை

காய்கறிகளை வெட்டும்போது, நின்று கொண்டு வெட்டுவதுதான் உத்தமம். அப்போதுதான் நம் உடலில் இருக்கும் மொத்தசக்தியும் முறையாகப் பயன்படுத்திக் காய்கறிகளை வெட்ட முடியும். உடலில் தேவை இல்லாமல் வலி ஏற்படாது. டைனிங் டேபிளில் அமர்ந்துகொண்டு வெட்டினால், கைகளில் இருக்கும் சக்தியை மட்டுமே பயன்படுத்தி வெட்ட முடியும். இதனால் கைகளில் வலி ஏற்படும்.

### உடல் வலியைக் குறைக்க...

- வோஷிங்மெஷின் பயன்படுத்தும்போது, மேல்புறமாகத் துணிகளைப் போடும் வகையில் இருக்கும் மெஷின்களைப் பயன்படுத்துவது நல்லது.
- சிலிண்டர்களை உருட்டியவாறே இடம்மாற்றக் கூடாது. இதற்கென இருக்கும் பிரத்யேக நகர்த்திகளைப் (cylinder rollers) பயன்படுத்தித்தான் இடம் மாற்ற வேண்டும்.
- காஸ் ரெகுலேட்டரைத் திருப்ப, குனிந்தவாறே முயற்சிக்க வேண்டாம். சற்றே கால்களை மடக்கிய நிலையில் ரெகுலேட்டரைத் திருப்புவது நல்லது.
- காய்கறிகளை வெட்டப் பயன்படுத்தும் கத்தியின் நீளம் அதிகமாகவும் கைப்பிடி மெல்லியதாகவும் இருத்தல் வேண்டும்.
- சமைக்கப் பயன்படுத்தும் கரண்டிகள் நீளமாக இருத்தல் வேண்டும். அடுப்பில் வைக்கும் பாத்திரங்களும் சற்று அகலமானதாக இருக்க வேண்டும். இதனால் கை வலி இல்லாமல் கிண்டுவது, வறுப்பது போன்ற சமையல் வேலைகளை எளிதாகச் செய்ய முடியும். கேஸ் விரயத்தையும் தடுக்கலாம்.



# தொடைப்பகுதி கொழுப்பை கரைக்கும் பயிற்சி



உடலைத் தாங்க பலமான தொடைகள் அவசியம். தொடைகளை உறுதிப்படுத்தும் பயிற்சிகளைக் பல இருந்தாலும் சில பயிற்சிகள் விரைவில் நல்ல பலனைத்தரக்கூடியவை. அவ்வகையில் இந்த பயிற்சி நல்ல பலனை தரக்கூடியது. இந்த பயிற்சியின் பெயர் லையிங் சைடு லெக் ரைஸ் (Lying side leg raise).

இந்த பயிற்சி செய்ய முதலில் தரையில் ஒருக்களித்துப் படுக்க வேண்டும். வலது கையைத் தலைக்கு மேல் நீட்டி, அதன் மீது தலையை வைத்துக்கொள்ள வேண்டும். இடது கையை முட்டிவரை மடித்து, வலது பக்கமாக தரையில் பதிக்க வேண்டும். வலது காலை சற்று மடித்து முன்புறமாக வைக்க வேண்டும்.

இடது காலை மட்டும் மேலே உயர்த்தி, ஐந்து விநாடிகள் இந்த நிலையில் இருக்க வேண்டும். பின்னர், படிப்படியாக பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். இதேபோல 15 முறை செய்துவிட்டு, இடது பக்கத்துக்கும் செய்ய வேண்டும். நன்கு பழகிய பின்னர் எண்ணிக்கையின் அளவை அதிகரித்து கொள்ளலாம்.

**பலன்கள்:** தொடையின் பக்கவாட்டுப் பகுதி வலுவடையும். பக்கவாட்டில் இருக்கும் தசைகள் இறுகும். தொடைப் பகுதியில் உள்ள கொழுப்பு கரையும்.

# அப்பளப் பூ குழம்பு

கூடல் குழம்புக்கு நிகரான சுவை தரும் அப்பளப்பூ குழம்பு செய்வது பற்றி பார்க்கலாம்.


**தேவையான பொருட்கள் :** அப்பளப்பூ 10, பாசிப் பருப்பு கால் கப், தக்காளி 1, சின்ன வெங்காயம் 6, மிளகாய்த் தூள் 2 டேபிள்ஸ்பூன், தேங்காய்த் துருவல் கால் கப், மஞ்சள் தூள் ஒரு சிட்டிகை, உப்பு, எண்ணெய் தேவையான அளவு, கடுகு ஒரு டீஸ்பூன், கறிவேப்பிலை ஒரு கொத்து. பெருங்காயம் ஒரு சிட்டிகை.

**செய்முறை:** தேவையான அப்பளப்பூவை எடுத்து தயாராக வைக்கவும். வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயை பொடியாக நறுக்கி, தேங்காய், பெருஞ்சீரகம் மற்றும் சீரகத்தை சிறிது நீர் விட்டு அரைத்துக் கொள்ளவும்.

கடலைப்பருப்பினை 2 கப் தண்ணீர் சேர்த்து குக்கரில் நன்றாக வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். தனியாக அப்பளப்பூவை எண்ணையில் பொறித்து எடுத்து வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு உளுந்து மற்றும் கறிவேப்பிலை தாளிக்கவும். சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கி, பின் வேக வைத்த கடலைப்பருப்பினை சேர்த்து, அரைத்த மசாலை மஞ்சள் தூள் சேர்த்து தண்ணீர் விட்டு கலந்து விடவும். குழம்பு நன்றாக கொதித்த பின், பொறித்த அப்பளப்பூவை சேர்க்கவும்.

குழம்பு கெட்டியாகும் வரை அடுப்பை சிம்மில் வைக்கவும். சுவையான அப்பளப்பூ குழம்பு ரெடி.



# ஆண்களின் கனவில் பெண்கள் வந்தால் என்ன அர்த்தம் தெரியுமா?

1 ஒரு ஆண், தன் கனவில் மனைவி அல்லது நிச்சயித்தப் பெண்ணுடன் வெளியூர் பயணம் மேற்கொள்வது போன்று வந்தால், அது அந்த ஆணின் திருமண வாழ்க்கை வெற்றிகரமான அமையப் போகிறது என்று அர்த்த மாம்.

2 ஒரு ஆண் வெள்ளை உடை அணிந்த ஒரு பெண்ணை கட்டிப்பிடிப்பது போன்று கனவு கண்டால், அந்த ஆணின் வாழ்வில் அதிர்ஷ்டம் கொழிக்கப் போகிறது என்று அர்த்தமாம்.

3 ஒரு பெண் செஸ் அல்லது வேறு ஏதேனும் விளையாட்டு விளை யாடுவது போன்று ஒரு ஆணின் கன வில் வந்தால், அந்த ஆண் விரைவில் பெயரும், புகழும் மேம்படப் போகிறது என்று அர்த்தம்.

4 ஒரு ஆணின் கனவில் ஒரு பெண் நடனமாவது போன்று வந்தால், அந்த ஆணின் திருமண அல்லது காதல் வாழ்வில் முறிவு ஏற்படப் போகிறது என்று அர்த்தமாம்.

5 ஒரு ஆண் தன் கனவில் திருமண கோலத்தில் ஒரு பெண் அழுவது போன்று கண்டால், அது மாமனார், மாமியாருடன் சண்டை வரப் போவதைக் குறிக்குமாம்.


6 கனவில் தன் வாழ்க்கைத் துணைக்கு வைர ஆபரணங்களைப் பரிசாக கொடுப்பது போன்று ஒரு ஆண் கனவு கண்டால், அது அந்த ஆண் திருமண வாழ்வில் கூடிய விரைவில் பிரச்சனையை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

7 கனவில் ஒரு ஆண் தேவதையைக் கண்டால்,அந்த ஆண் எதிர்காலத்தில் பணக்காரர் ஆவதோடு, வேலைக்கு சென்று சம்பாதிக்க வேண்டிய அவசியமே இருக்காதாம்.

8 ஒரு ஆண் தன் கனவில் மனைவி அல்லது காதலிக்கு குட்பை சொல்லி செல்வது போன்று கண்டால், அந்த ஆண் விரைவில் உடல்நல குறைவால் அவஸ்தைப்படப் போகிறான் என்று அர்த்தமாம்.

9 ஒரு ஆண் தன் கனவில் ஒரு பெண்ணின் நிர்வாண படத்தை வரைவது போன்று கண்டால், அந்த ஆணுக்கு கெட்ட நேரம் ஆரம்பமாகி விட்டது என்று அர்த்தமாம்.





# குழந்தைகள் அறிவு மேம்பட வாஸ்து சொல்பவை

குழந்தைகளின் அறிவுசார்ந்ததிறமைகளின் வளர்ச்சிக்கு, வீடுகளில் அதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த வயதுகளில் அவர்களது மூளை வளர்ச்சி வேகமாக இருப்பதால் அதற்கு ஏற்றவாறு வீடுகளில் தக்க சூழ்நிலைகளை அமைக்கும் தருணத்தில் வாஸ்துவும் நமக்கு உதவி செய்கிறது. அதற்கேற்ற குறிப்புகள் பற்றி வாஸ்து சாஸ்திரம் சொல்வதை இங்கே காணலாம்.

### அழகிய படங்கள்:

வீடுகளின் வடக்கு மற்றும் கிழக்கு சுவர்களில் பல்வேறு பறவைகள், அழகிய விலங்குகள்,சிரித்தமுகம்கொண்டஓவியங்கள் மற்றும் அறிவியல் சார்பான கருத்துக்கள் கொண்ட ஓவியங்கள் அல்லது வெவ்வேறு பொருட்களால் செய்யப்பட்டதாக வைத்து அலங்கரிக்கலாம். அவர்களது கவனத்தை கவரும் கருத்துள்ள விஷயங்களை ஓவியங்கள் அல்லது சிலைகளாக வீடுகளில் வைக்கவும் வாஸ்து சாஸ்திரம் பரிந்துரை செய் கிறது.

### மனோதத்துவம்:

எதிர்மறை கருத்துக்கள் கொண்ட படங்கள் மற்றும் சிலைகளை வீடுகளில் வைப்பதை தவிர்க்க வேண்டும். மேலும், காட்டு விலங்குகளின் சண்டை காட்சிகள், இரையை கடித்து குதறுவது, போர் காட்சிகள், ரத்தம் சொட்டுவது, கத்தி, வீச்சரிவாள் ஆகியவை அடங்கிய படங்கள் வீடுகளில் இருக்கும்பட்சத்தில், அவர்களது மன இயல்பு கடினத்தன்மை கொண்டதாக மாறிவிடலாம் என்ற மனோதத்துவம் கவனிக்கத்தக்கது.

### பழங்களின் படங்கள்:

குழந்தைகள் வளரும் பருவத்தில் மென்மையான உணர்வுகளை உண்டாக்கும் காட்சிகள் அடங்கிய படங்களை வீடுகளில் அவர்களது பார்வையில் படும்படி வைப்பதில் சரியாக செயல்படுவது முக்கியம். முக்கியமாக, உணவு மேசை மீது பழங்கள் வைப்பது, உணவு அறைகளின். சுவர்களில் பல்வேறு பழங்கள் அல்லது உணவுகளின் படங்களை மாட்டி வைப்பது ஆகியவற்றால் அவர்களது கவனம் அதன்மீது ஈர்க்கப்படும். குறிப்பாக, திராட்சை, அன்னாசி, பலா, மாம்பழம் போன்ற படங்களால் அலங்கரிக்கப்பட்ட உணவு அறைகள் நல்ல உணர்வுகளை உண்டாக்குகின்றன.

### மெல்லிய வண்ணங்கள் :

அடர்ந்த வண்ணங்கள் மனதில் சோர்வை ஏற்படுத்தும் என்ற நிலையில், கண்களுக்கு குளிர்ச்சியாக இருக்கும் இள நீலம், மெல்லிய பிங்க் நிறம், இளம் பச்சை போன்ற நிறங்கள் குழந்தைகளின் அறிவுத் திறனை ஊக்குவிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அதனாலேயே அவர்களுக்கான பொம் மைகள் கருப்பு அல்லது அடர்ந்த வண்ணங் களில் தயாரிக்கப்படுவதில்லை.

# பேஸ்புக் ரோமியோக்களிடமிருந்து தப்பிக்க...!

இன்றைக்கு பெண்கள் அதிக பிரச்ச னைகளை சந்தித்து வருவது பேஸ்புக்கில் தான். இதுபற்றிய நிறைய செய்திகளை பார்த்து கொண்டுதான் இருக்கிறோம்.

பெண்கள் அறியாத நபர்களின் Friend Requests யை ஏற்றுக்கொள்வது தான் இவையனைத்துக்கும் முக்கிய காரணம். Friend Requests ஏற்கப்பட்டதும், இன்பொக்ஸுக்கு போய் பிவீ.. போட்டு, கடலையை ஆரம்பிப்பார்கள். என்னவெல்லாம் செய்து பெண்களை கவிழ்க்கிறார்கள் பார்ப்போம்.

Good morning, Good night சொல்லி ஜொல்லு ஊத்துபவர்களிடம் அவதானம் தேவை. தப்பி தவறி அவர்களுக்கு ரிப்ளே பண்ணாதீர்கள். முடிந்தால் அவர்களை அன்பிரண்ட் அல்லது ப்ளக் செய்வது நல்லது.

நீங்கள் ஏதாவது பேஜில் கொமெண்ட் பண்ணும்போது, அந்தபக்கத்திற்கு வருபவர் களில் பெரும்பாலானவர்கள் உங்கள் பெயரை கிளிக் செய்து பார்ப்பார்கள். பலர் Friend Request தருவார்கள். அதனால் வெளியாட்கள் ப்ரெண்ட் ரெக்வஸ்ட் கொடுக்க அனுமதிக்காதீர்கள். உங்க நண்பர்கள் மட்டும் ப்ரெண்ட் ரெக்வஸ்ட் கொடுக்க ஒரு ஒப்ஷன் இருக்கிறது.

log out பண்ணும் பட்டனுக்கு கீழே இருக்கும் Settings வாங்க. இடதுபக்கம் உள்ள Privacy ஒப்ஷனை கிளிக் பண்ணுங்க. Who can contact me? ஒப்ஷன் இருக்கும். Who can send you friend requests? ஒப்ஷன்ஸல Edit கொடுங்க. அதுல Friends of Friends ஒப்ஷனுக்கு மாற்றிவிட்டால் சரி.

அதே போல Who can see my stuff? என அதுக்கு மேல ஒரு ஒப்ஷன் இருக்கும். அதையும் கிளிக் செஞ்சு Friends ஒப்ஷன்ஸ கிளிக் பண்ணுங்க.

இப்ப உங்க டைம் லைன்ல இருக்கற உங்க தனிப்பட்ட ஸ்டேட்டஸ் மற்றும் உங்களது போட்டோக்களை வேறு யாரும் பார்க்க முடியாது. அதே போல வெளிநபர்கள்யாரும் உங்களுக்கு தேவையில்லாமல் ப்ரண்ட் ரெக்வஸ்ட் அனுப்பவும் முடியாதுங்க.

இதே போல் நீங்க ஒருவரது பேஸ்புக் தொடர்பு எப்போதும் வேண்டாம் அல்லது யார் என்றே தெரியாத நபர் உங்களை அடிக்கடி பேஸ்புக்ல தொடர்பு கொள்கிறாரா அவரை எப்படி தவிர்ப்பது அப்படின்னு நினைத்தால் இப்போ இடது பக்கம் இருக்கற Blocking ஒப்ஷனை கிளிக் பண்ணுங்க.

அதில் இருக்கும் Block users ல் அவரது பெயரை தட்டுங்கள். அவர் உங்களது பிரண்ட் லிஸ்டில் இருந்தால் அவரது பெயர் வரும். இப்போது அவரை எளிதாக ப்ளக் செய்துவிடுங்கள். உங்களது ப்ரெண்ட் லிஸ்டில் இல்லாவிட்டாலும் வழி இருக்கிறது.

அவரது ப்ரொபைலுக்கு போய், அவரது URL (மேல Facebook.com னு இருக்கும்) அதை கொப்பி செய்து, ப்ளக் பண்ற அந்த பொக்ஸில் பேஸ்ட் பண்ணி Block கொடுங்க. வேலை முடிந்தது.

எல்லோருக்கும் Friend Request கொடுக்காதிங்க. Follow மட்டும் பண்ணுங்க. இதனால அவரது ஸ்டேட்டஸ்கள் உங்களுக்கு வரும். உங்களது எந்த தகவலும் அவருக்கு போகாது.

மேலும் எக்காரணத்தை கொண்டும் பேஸ்புக்கில் மொபைல் நம்பர் கேட்பவரிடம் நம்பரை கொடுத்து விடாதீர்கள்.



# கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை

## மதுரைக்கு வந்த சோதனையா?

செல்லையா பேரின்பராசா

"அன்ன யாவினும் புண்ணிங் கோடி, ஆங்கோர் ரேழைக் கெழுத்தறி வித்தல்" என்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவி வரிகளாகும். இந்த வரிகளை வைர வரிகளாக்கிய பாடசாலை களின் பட்டியலில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையும் தனித்துவமானது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் இறைபணியாளர்களால் கல்முனைப் பிராந்தியத்தில் நூற்று முப்பத்து நான்கு வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அறிவாலயம் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையாகும்.

உலகின் முதலாவது தமிழ்ப்பேராசிரியர் என்ற பெருமையைக் கொண்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார், புலவர்மணி.ஏ.பெரியதம்பிப்பிள்ளை, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர்.சீ.மூ.இராசமாணிக்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், முன்னாள் பொலிஸ் மா அதிபர்.ரீ.ஈ.ஆனந்தராசா, பேராசிரியர்.எம்.ஏ.நுஃமான் என நீண்டும் செல்லும் பல பிரபலங்களை உருவாக்கிய பாடசாலையிது.

கல்முனை கல்வி வலயத்திலுள்ள 1ஏபி தரப் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்கும் இப்பாடசாலை அறிவுசார் கல்வியான கலைத்திட்டத்திற்குச் சமாந்தரமாக, பண்புசார் கல்வியான இணைக் கலைத்திட்டத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இதேவேளை, இப்பாடசாலையில் காணப்படும் பல்வேறுபட்ட பௌதீக வளத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை அதிர்ச்சியளிக்கும் விடயமாகும்.

இப்பாடசாலைக்கென நிர்வாகக் கட்டிடம் இல்லை. வகுப்பறைக் கட்டிடம் ஒன்றை நிர்வாக கட்டிடமாக மாற்றி அமைத்துள்ள போதிலும், அந்த கட்டிடத்தின் கூரை சேதமடைந்துள்ளது. மழைக் காலங்களில் ஒழுக்கால் இக்கட்டிடம் வெள்ளக் காடாய் காட்சியளிக்கும். பல இடங்களில் கூரை இடிந்து விழாதவாறு பல இடங்களில் முட்டுக் கண் கொடுக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

சுமார் 1750 மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் 88 ஆசிரியர்களும், 04 கல்விசாரா ஊழியர்களும் பணியாற்றி வருகின்றனர். அந்தவகையில் ஆசிரிய ஆளணித் தேவை பற்றாக்குறைவென்றே கூறலாம். ஆனால் கல்விசாரா ஊழியர்களின் தேவை கணிசமாகவுள்ளது.

கல்வி அமைச்சு 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒரு தேசியப் பாடசாலையை ஆரம்பித்த வேளையில், கல்முனைத் தேர்தல் தொகுதியில் தேசியப் பாடசாலை ஒன்றை தோற்றுவிக்கக்கூடிய அனைத்துத் தகைமைகளையும் இப்பாடசாலை கொண்டிருந்தும் அந்த வாய்ப்பு இப்பாடசாலைக்குக் கிடைக்கவில்லை.

கல்முனைப்பிராந்தியத்தில் உருவாக்கப்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த இப் பாடசாலையில் பயின்ற பழைய மாணவரான முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர் இக்காலப்பகுதியில் கல்முனைத்தேர்தர் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினராகவிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையினை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தி, அதற்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தர வேண்டுமென்பதே, பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர், மற்றும் நலன்விரும்பிகளின் கோரிக்கை.

1883ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்முனைப்பிரதேசத்தில் மெதடிஸ்த குருவாகப் பணியாற்றிய அருட்திரு.ஜோர்ச். ஜே.றிம்மர் (Trimmer) அன்று பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டு, அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றிருந்த அறியாமையை உடைத்தெறிந்து, சுய பாஷையுடன் கூடியதாக ஆங்கில கல்வியையும் பெறும் அறிவாலயமாக தோற்றுவித்ததே கல்முனையில் இன்றுள்ள உவெஸ்லியாகும்.

அன்று பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டிருந்த வேளையில், சமுதாயத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளை மீறி, பதினெட்டு மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் முஸ்லிம் சமூகங்களில் உள்ள விசேட தேவையுடையோரை உள்வாங்கி, இன்று அவர்களுக்கான கல்வியை அளித்து வருகின்றது.

இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர்.பொன்.புருகையாவின் பணிக் காலத்தில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்திரு.எஸ்.எஸ்.ஞானராசா போதகரின் ஆலோசனைக்கமைய 22 மாற்றுத்திறனாளிகளை இப்பாடசாலை உள்வாங்கிய போது, அன்று கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராகவும், இன்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராகவும் உள்ள எம்.ரீ.அப்துல் நிசாம் கல்வித்திணைக்கள மட்டத்தில் இப்பணிகளுக்கு உறுதியாக விருந்து உழைத்ததை நினைவுகூற வேண்டும்.

ஆனால், இன்று அந்த மாற்றுத்திறனாளிகளுக்கான முறையான வகுப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இவர்களுக்கு கல்வி கற்பிக்க பயிற்சி பெற்று, முறையான போதனைகளை மேற்கொள்ளும் நான்கு ஆசிரியைகளுக்கு வேதனம் இல்லை. டெப்லிங் (Deaflink) நிறுவன நிறுவுநர் அருட்திரு எஸ்.எஸ்.ஞானராசா போதகர் மூலமாக வழங்கப்படும், சிறு உதவியுடன் இவ் ஆசிரியைகள் பணியாற்றுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் மாற்றுத்திறனாளிகளை உள்வாங்கி, அவர்களும் சமுதாயத்தில் ஓர் அங்கம், ஏனைய மனிதர்களிடம் காணப்படாத ஆற்றல்கள், நல்லிதயம் இவர்களிடம் உண்டு என்பதை உலகறிய வைக்கும் பணியை மேற்கொள்ளும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் இயங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான தனியான வசதிகளைக் கொண்ட கட்டிடத்தினை நிர்மானிக்கவும், இவர்களுக்கு போதனை செய்யும் அர்ப்பணிப்பாளர்களுக்கு மாதாந்த ஊதியம் பெறும் பொருட்டான நிரந்தர வேலைவாய்ப்பை அளிக்க வேண்டியது கிழக்கு மாகாண சபைக்குள்ள பாரிய கடமையும் பொறுப்புமாகும்.

கல்முனை மாநகரின் மையப்புள்ளியில் அமைந்துள்ள கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானம் பல சந்தர்ப்பங்களில் பலருக்கு கைகொடுத்து உதவும் மைதானம். குறிப்பாக கல்முனை மாநகரில் விளையாட்டு விழாவை நடாத்துதல், விழிப்புணர்வுக் கூட்டங்களை நடாத்துதல் என பல தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் மைதானம். மேலும் திடீர் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கான நலன்புரி நிலையங்கள் பல தடவைகள் இந்த மைதானத்தில் இயங்கிய வரலாறுகள் உண்டு.

ஆனால் இந்த மைதானம் முறையாக புனரமைக்கப்படவில்லை. இங்கு கடந்த ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப் பட்டு, அரைகுறையாக காணப்படும் பார்வையாளர் அரங்கு பூரணப்படுத்தப் படவில்லை. நவீன யுகத்தின் சவால்களுக்கு






முகங்கொடுக்கக் கூடியளவு இந்த விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட வேண்டியது அவசிய தேவையாகும்.

இவைதவிர, இங்குள்ள ஒன்று கூடல் மண்டபம், வகுப்பறைக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட வேண்டும். மேலும் பல கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

ஆனால் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் இலங்கை அரசியலில் பிரபலங்கலாகவும், பிராந்திய ரீதியில் பிரசித்தி பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர்.சீ.மு.இராசமாணிக்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர்.எம்.எச்.எம்.அஷ்ரஃப், முன்னாள் அமைச்சர்களான எம்.எம்.முஸ்தபா, ஏ.ஆர்.மன்சூர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, சந்திரநேருசந்திரகாந்தன், தற்போதைய பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.எம்.ஏ.ரஸ்ஸாக் (ஜவாத்),எம்.இராஜேஸ்வரன்,த.கலையரசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



இந்தப் பட்டியலைப் பார்த்தால் சினிமாப் படத்தில் கேட்பது போல் 'மதுரைக்கு வந்த சோதனையா' என்று கேட்க வேண்டியுள்ளது.

# யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஆறு

## ஆறுமுகம் திட்டம்- River for Jaffna

தமிழ்பொடியன்



**யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தின் / ஆறுமுகம் திட்டத்தின் அறிமுகம்:**

இந்த திட்டத்தின் முதற்படியாக ஆனையிறவு நீரேரியை கடல்நீருடன் கலக்கவிடாமல் தடுப்பது. இதற்கான அணை ஒன்றை பலமாக அதன் கிழக்குப்புறம் அமைக்க வேண்டும். ஆனையிறவு நீரேரியில் கலக்கும் கனகராயன் ஆற்றின் நீரை நீரேரியில் சேமிக்கவேண்டும்.

இப்படியாக ஆனையிறவு நீரேரியை ஒரு மிகப்பெரிய நன்னீர்த்தேக்கமாக மாற்றமுடியும். இது ஓரிரு வருடங்களில் நன்னீராக மாறும். நீரேரியை முறையாக பராமரிக்கவேண்டும்.

அரியாலையில் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பணையை சீராக பராமரிப்பதன் மூலம் உப்பாறு கடலுடன் சேர்வதை தடுக்கவேண்டும்.

தொண்டைமனாறில் கட்டப்பட்டிருக்கும் தடுப்பணை முறையாக பராமரிக்கப்பட்டு, தொண்டைமானாறு கடலுடன் கலப்பதை தடுக்கவேண்டும். கடல்நீர் தொண்டைமானாற்றில் உட்புகுவதையும் தடுக்கவேண்டும். சுண்டிக்குளத்தில் தடுப்பணை ஒன்று அமைக்கப்பட்டு கடல் நீர் உட்புகுவது தடுக்கப்படும் அதே சமயம், இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் கடலுடன் சுண்டுக் குளம் ஊடாக கலப்பது தடுக்கப்பட வேண்டும்.

இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் சுண்டிக்குளம் ஊடாக ஆனையிறவு நீரேரியில் கலக்கும். வடமராட்சிக்கிழக்கு நீரேரி முள்ளியான் வாய்க்கால் ஊடாக ஆனையிரவு நீரேரியுடன் இணைக்கப்படும்.

இரணைமடுக்குள மேலதிக நீர், கனகராயன் ஆற்றுநீர், ஆனையிறவு நீரேரி வடமராட்சி/வடமராட்சிக்கிழக்கு நீரேரி, தொண்டைமானாறு, உப்பாறு இவற்றை இணைத்து ஒரு மிகப்பெரிய நீரிணைப்பு சாத்தியமாகும் போது "யாழ்பாணத்துக்கான ஆறு" உருவாகும்.

**1960 களில் முள்ளியான் வாய்க்கால் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் 80% வேலைகள் நிறைவுபெற்றன. 12km நீளமான முள்ளியான் கால்வாயானது ஆனையிறவு நீரேரியின் வடகிழக்கு புறமாக அமைக்கப்பட்டது.**

ஆறுமுகம் திட்டம்/யாழ்ப்பாண ஆற்றுத் திட்டம் என்பது 350 ஆண்டுகளுக்கு முன்னரே டச்சுக்கால ஆட்சியில் பேசப் பட்டது.

1879 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக இருந்த Twyneham தடுப்பணைகளை புனரமைக்க நடவடிக்கை எடுத்தார். ஆனையிறவு நீரேரியை நன்னீராக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தார்.

1916 இல் யாழ்ப்பாணத்தில் அரச அதிபாராக இருந்த Horseburg என்பவர் ஆறுமுகம் திட்டத்தினை நடைமுறைப் படுத்த ஒரு சில பரிசோதனை முயற்சிகளை செய்தார்.

1947 இல் அது நடைமுறைக்கு வந்தது. 1 950 களில் அதற்கான பல வேலைகள் நடைபெற்றன. 1983 ஆம் ஆண்டு தை மாதம் ஒரு செயற்திட்டம் அந்தநேரம் சனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

அதை ஏற்றுக்கொண்ட ஜே.ஆர் ஒரு கூட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தார். இந்த திட்டத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து திட்டத்தினை நடைமுறைப்படுத்த அழைப்பு விடுத்திருந்தார். அந்தக்கூட்டம் மேமாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தூரதிஸ்ரவசமாக 1983 மே மாதம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் அந்தகூட்டம் நடக்கவில்லை. இதனால் ஆறுமுகம் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

அதன் பிறகு சுமார் 20 வருடங்கள் கழித்து உள்நாட்டுப்போர் ஓய்ந்த ஒரு காலப்பகுதியில் யூலை மாதம் அளவில் அன்றைய நீர்ப்பாசன மர்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி விக்கிரம பெரேரா ஆறுமுகம் திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிட்ட பிரதேசங்களை நேரடியாக பார்வையிட்டார். அதன் பிறகு அவர் அமைச்சரவையில் "ஆறுமுகம் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டும்" என ஒரு தீர்மானத்தை கொண்டுவந்தார்.

யாழ்குடாநாட்டின் தண்ணீர் பிரச்சினைக்கு ஆறுமுகம் திட்டம் ஒரு சிறந்த தீர்வு என அவர் தன்னுடைய அமைச்சரவை குறிப்பில் தெரிவித்திருந்தார். இந்த திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக 'அந்த நேரத்தில் விடுதலைப்புலிகளும் கூட தங்களின் சம்மதத்தை தெரிவித்திருந்தனர்.

ஆனால் 2003 இல் ஆட்சிமாற்றம் நிகழ்ந்ததால் இந்த திட்டத்தின் ஆரம்ப பணிகளோடு மீண்டும் அது நின்றுப்போனது.

அதன்பிறகு 2007 ஒக்டோபர் மாதம் இலங்கை எந்திரவியலாளர் சங்கத்தின் வருடாந்தரக்கூட்டத்தில் யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தை உடனடியாக முழுமைப் படுத்தவேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானம் அடங்கிய அறிக்கை ஒன்றும் அரசாங்கத்துக்கும் நீர்ப்பாசன அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட மகிந்த ராஜபக்ச அரசு சுமார் 100 மில்லியன் ரூபாய்களை இந்த புனரமைப்புக்கு வழங்கியது. இந்த புனரமைப்பு திட்டம் 2008 , 2009 களில் நிறைவுபெற்றது.

**ஆறுமுகம் திட்டம் என ஏன் பெயர் வந்தது?**

1954 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்த நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. ஆறுமுகம் அவர்களே முதன்முதலாக யாழ்ப்பாண ஆற்றுகான திட்டத்தினை முன்மொழிந்து செயற்படுத்த கடுமையாக உழைத்தார். எனவேதான் அந்த திட்டம் "ஆறுமுகம் திட்டம்" என அழைக்கப்படுகிறது.

**ஆறுமுகம் திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட படிமுறைகள்:**

1. தொண்டைமானாற்றில் ஒரு தடுப்பணை/பாலம் 1947 இல் ஆரம்பிக்கப்பட்டு 1953 இல் அது கட்டிமுடிக்கப்பட்டது. இந்த தடுப்பணை சுமார் மூன்றுதரம் பெரிய அளவில் புனரமைக்கப் பட்டது. கடைசியாக 2009 இல் பாரிய நிதிச்செலவில் புனரமைக்கப்பட்டது. இப்போது சுமார் 300 மில்லியன் செலவில் மீண்டும் புனரமைக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இந்த தடுப்பணை கட்டப் பட்டதன் காரணமாக 300 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் மழைநீர் ஏந்தும் பிரதேசம் வடமராட்சி மற்றும் வடமராட்சிக்கிழக்கில் உருவாகியுள்ளது.

2. 1955 இல் அரியாலையில் அமைக்கப் பட்ட தடுப்பணைமூலம் சுமார் 220 சதுரகிலோமீற்றர் மழைநீர் ஏந்தும் பிரதேசம் உப்பாறில் உருவாக்கப்பட்டுள்ளது.

3. ஆனையிறவுப்பாதை செப்பனிடப் பட்டதன் மூலமாகவும் புகையிரத பாதை அமைக்கப்பட்டதன் காரணமாகவும் ஆனையிறவு நீரேரியின் பெருமளவான நீர் மேற்குப்பக்கமாக கடலுடன் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

4. ஆனையிறவு நீரேரியின் கிழக்குப் புறமாக சுண்டிக்குளத்தில் 1950 களில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய தடுப்பணையின் மூலமாக ஆனையிறவு நீரேரிக்குள் கடல்நீர் உட்புகுவது தடுக்கப்பட்டது.

ஆனையிறவு நீரேரியின் மேலதிக நீர் ஒரு குறுகிய வாய்க்கால் மூலமாக கடலுடன் கலந்துவிடுவதற்கான வழிமுறையும் உள்ளது.


கனகராயன் குளத்து நீரும் மேலும் சிறிய மூன்று வழிந்தோடும் கால்வாய்கள் மூலமாகவும் வன்னிப்பெருநிலப்பரப்பில் பெய்யும் மழைந்நீர் ஆனையிறவு நீரேரியுடன் கலக்கும் போது அது மெல்லமெல்ல நன்னீர் ஏரியாக மாறிவிடும் ஒரு சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் தூரதிஸ்ரவசமாக சுண்டிக்குளத்தின் தடுப்பணை சேதம் அடைந்து இருப்பதால் மீண்டும் கடல்நீர் கிழக்குப்புறமாக ஆனையிறவு நீரேரியில் கலக்கிறது. இதனால் ஆனையிரவு நீரேரி உப்புச்செறிவாகவே காணப்படுகிறது. கடல்நீரோடு ஒப்பிடும் போது ஆனையிறவு தண்ணீர் உப்புச்செறிவு மிகக்குறைவு.

5. 1960 களில் முள்ளியான் வாய்க்கால் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் 80% வேலைகள் நிறைவுபெற்றன. 12km நீளமான முள்ளியான் கால்வாயானது ஆனையிறவு நீரேரியின் வடகிழக்கு புறமாக அமைக்கப்பட்டது. முள்ளியான் கால்வாய் என்பது ஆனையிறவு நீரேரியையும் வடமராட்சி நீரேரியையும் இணைக்கும் கால்வாய். ஆனால் இந்த கால்வாய் முற்றாக சிதைந்துபோய் உள்ளது.

6. உப்பாற்றுக்கும் வடமராட்சி நீரேரிக்கும் இடையிலான இணைப்பும் செய்யப்பட்டது. அதுவும் முறையாக பராமரிக்கப்படாமல் இருக்கிறது.

இதில் முழுமையாக முடிக்கபடாத இணைப்பாய் இன்னமும் எஞ்சி இருப்பது முள்ளியான் இணைப்பு.

தொண்டைமானாற்றில் போட்ட தடுப்பணை மற்றும் அரியாலை தடுப்பணைமூலம் கடல்நீர் தொடர்பு துண்டிக்கப்பட்ட போது உப்பாற்றின் உப்புத்தன்மையும், வடமராட்சி நீரேரியின் உப்புத்தன்மையும் கணிசமான அளவு குறைந்தது. இதன் காரணமாக அதன் ஓரங்களில் இருந்த கிணறுகளில் குறிப்பிடும்படியான மாற்றம் சவர்த்தன்மையில் ஏற்பட்டது. கோடை காலத்தில் கால்நடைகள் நீர் பருகும் நிலை கூட இருந்தது. (தொடரும்)



வீடு கட்டலாம் 3

# வீட்டின் வரைபடம்

ம.இன்பராஜ்
பொறியியலாளர்

வீட்டின் அமைவிட அளவுத்திட்டம் போன்றவற்றிற்குரிய அரசாங்க நிறுவனங்களின் விதிகளுக்கு ஏற்ப அமைத்தல், உரிய அனுமதிகளைப் பெறுதல்.

வீடு அமையவுள்ள பிரதேசம் எந்த வகையான அரசாங்க எல்லைக்குள் உள்ளது என்பதை தீர்மானிக்கவும். உதாரணமாக, பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை போன்றவற்றில் எவற்றின் எல்லைக்குள் உள்ளதென்பதை அறியவும். அத்துடன் வீட்டின் அருகே உள்ள வீதிகள் எந்த அரசாங்க அலுவலகத்துடன் தொடர்புடையது என்பதையும் அறியவும். வீடு கட்டுவதற்கான வீதியின் மத்தியிலிருந்தான தூரத்தை அவ் வீதி அமைந்துள்ள நிறுவனத்தில் இருந்து அறிய வேண்டும். அலுவலகங்கள் ஆவண வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை ஆகியன. அதன்பின் முதல் குறிப்பிட்ட மூன்று அரச அலுவலகங்களில் எந்த எல்லைக்கு உமது வீடு கட்டும் இடம் எது என்பதை அறிந்து அவற்றின் விதிகளுக்கு ஏற்ப வீட்டின் அறைகளின் அளவு, கிணற்றில் இருந்து Septic Tan இற்குமான தூரம், வேண்டிய குறைந்தபட்ச அளவையும் யன்னல்கள் இருக்கக்கூடிய பக்கங்களையும் அறிந்து கொள்ளவும்.

அத்துடன் அவ் அலுவலகங்களிலிருந்தும் பெறவேண்டிய அனுமதிகளை அவ் அலுவலகத்திலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் இருந்து பெறும்.

**வீட்டின் படத்தினை படவரை கலைஞர்களின் உதவியுடன் வரைதல்.**

வீட்டின் பரும்படிப்படத்தினை நீங்கள் ஏற்கனவே கூறிய முறைகளின் படி வரைந் திருப்பீர்கள். அதன் பின் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக படவரை கலைஞரின் உதவியுடன் படங்களை வரையலாம். இதற்குப் பல கணனி மென் பொருட்கள் உள்ளன. உதாரணமாக, Auto Cad, Civil 3D, போன்ற பல உள்ளன. உமது வீடானது நீண்டகாலம் ஸ்திரத்தன்மையுடன் இருக்க வேண்டுமாயின் ஒரு பொறியியலாளர் அல்லது அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவியுடன் கட்டிடத்தின் (Structure Design) அமைப்பு வடிவமைப்பு செய்தல் வேண்டும். அவர்கள் கட்டிடத்தின் பாகங்கள், அவற்றின் அமைப்பு போன்றவற்வை கணித்து தீர்மானிப்பார்கள். அத்துடன் மின்னிணைப்பு, தண்ணீர் இணைப்பு போன்றவற்றையும் அவற்றின் அளவுகளையும் தீர்மானிப்பார்கள். யாவும் தீர்மானிக்கப்பட்ட பின் பின்வரும் படங்களை வரைதல் வேண்டும்.

- கட்டட அனுமதிக்கான படம் பதிவு செய்த படவரைக்கலைஞ்ஞரால் வரையப்பட வேண்டும்.
- கட்டிடக்கலை வடிவமைப்பு படம் Architectural Drawing.
- முப்பரிமானப்படம் 3D Drawing.
- மின்னிணைப்பு வரிப்படம்.
- அமைப்பு வடிவமைப்புப் படம் Structural Drawing.
- நீர்க்குழாய் மற்றும் கழிவு நீர் அகற்றும் குழாய், படங்களின் வரிப்படம் -Plumping Layout.
- Opening Detail (Windows and Doors) யன்னல் மற்றும் கதவுகளின் அமைவிடம், மற்றும் அளவுகள்.
- மேலதிக விடயங்கள். **(தொடரும்)**






▶ பொத்துவில் ஹிஜ்ரா நகரில் உள்ள அல்மர்வா வித்தியாலயத்தில' அமைக்கப்பட்ட கட்டிடம் திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், சுகாதார அமைச்சர் முஹமட் நசீர் உள்ளிட்ட அதிதிகள் இதில் கலந்து கொண்டனர்.



▶ நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி அண்மையில் நடந்தது. நிலையத்தலைவர் ஆ.பாலேந்திரன் தலைமையில் நடந்தது. வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



▶ அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கண்ணகி கிராமத்தில் பல்தேவை கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் புனரமைக்கப்பட்ட வீதி, மதகு என்பனவும் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஆலையடிவேம்பு பிரதேசெயலர் வீ.ஜெகதீசன் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.


வாசு
Vaasu Cold Works Shop
நகைத் தொழிலகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.
T.P: 021 720 0887
077 997 7757


TOPAZ
No. 01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை
காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும்
ரெடிமேட் ஆடைகள்
மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக
வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன்
ஆடைகள்
We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933


SARAS
CONSTRUCTION
SARAS
engineers and contractors
We strive to meet and exceed our client's expectations to foster long term partnership.
Office 1 : Madaththady thellipalai
Phone : 021 412 4656 / 0777 19 6000
Office 2. School lane mathanai , pulloly north , point pedro
Email : Sarasjaffna@gmail.com
FB: SarasEngineering
Building constructions
Building consultancy
Bridge construction
Architectural designs
Interior design
Road construction
Cladding works
Renovation works
Molding works
Landscaping
Aluminium works


50% DISCOUNT
BEFORE 31st APRIL 2017
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
2017/04/25
IELTS (DURATION 60H WEEK, WEEKEND)
STUDENT VISA, SKILLED MIGRATION, SPOUSE VISA
தங்களது பெறுமதியான "Band" க்கு நாங்கள் முற்று முழுதாக வழிகாட்டுவோம்
யாழ்நகரில் IELTS கற்கை நெறி வழிகாட்டலில் முன்னிலையில் திகழும் நிறுவனத்துடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
மாணவர்களின் நேர வசதிக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
Lisitening, Reading, Writing, Speaking என்பன ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பயிற்றுவிக்கப்படும்.
ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.
LMC
LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN
COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
ENGLISH
MEDIUM CLASS
ஆரம்பம்
GRADE 2-5
• SPEAKING • READING
• WRITING • LISTENING
3 MONTH DURATION
GRADE 6-11
ENGLISH MEDIUM
MATHS, SCIENCE AND ENGLISH
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் மேற்குறிப்பிட்ட பாடங்கள் கற்பிக்கப்படும்.
ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கு அமைவாக கல்வி கற்பிக்கப்படும்.
குறிப்பிட்டளவு மாணவர்களே உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கு ஏற்றபடி தனிப்பட்ட வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும்.
இதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
HOTLINE : 0764190327 I 021 753 8395



# நாவலர் பிறிண்டர்ஸ்

**1970 இலிருந்து யாழ் மண்ணில் காலடி பதித்தவர்கள் மீண்டும் உங்கள் முன் உங்களுக்காக சேவை செய்கின்றோம்.**

5ம் கட்டை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தொலை இல:
021 2231644, 0777746855



**அனைத்துவிதமான அச்சுத்தேவைகளையும் இங்கு மிகத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்**

# Travel House

TNT Authorized collection center
024 222 3818, 024 7200111, 0773301701



விசா ஒழுங்குகள், பயணச் சீட்டுகள், மற்றும் பயண ஒழுங்குகளை உங்களின் தேவைக்கு ஏற்ப குறுகிய நாட்களில் செய்து தருகின்றார்கள்.

No-85, Station Road, Vairavapuliyankulam, Vavuniya

# VIKKI LEARNERS

எமது சேவை உங்களுக்கானது
உங்களுக்கு அருகாமையில் நாம்
எமது புதிய கிளை தற்போது சுன்னாகம் நகரில்.

**வடபுலத்தில் தரமான சாரதி ஆக இன்றே எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.**




அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை




No125/1 kks road
Chunnagam .
Phone:
0778308390,
021722 3201

**47 வருடங்களுக்கு மேலாக ஆரோக்கியத்துக்கான முதலிடமாக பூப்பெய்திய மங்கையர்க்கு மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் சாப்பாட்டில் கலந்து உண்பதற்கான ஒரு தாயின் அன்பைப்போன்ற மாபெரும் சக்தி.**

போலிகள் விற்பனைக்கு வருகின்றன எனவே பரிமளா ஸ்டோர்ஸ் இல 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என முத்திரை பதித்து உள்ளதை மட்டும் பார்த்து வாங்குங்கள்,

# V.S.P
## Special Lunch Oil



**Special V.S.P gingelly oil**

மிகவும் சுகாதார முறையில் உணவிற்கும், வைத்திய தேவைகளுக்கும் விசேடமாக தயாரிக்கப்பட்ட சுத்தமான வி.ஸ்.பி நல்லெண்ணெய்

**R/no:11505**

தயாரிப்பாளர் மற்றும் ஏக விநியோகஸ்தர்
பரிமளா ஸ்டோர்ஸ், இல 25A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: திரு. பொ.பாஸ்கரன்.
Phone :021 222 4135 / 9165


இந்நாட்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 23.04.2017 அன்று வெளியிடப்பட்டது.